# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 03 ஞாயிற்றுக்கிழமை (16.04.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :140








கிழக்கே புறப்படுவதற்காக விடுதலைப் புலிகளின் தளபதிகள், போராளிகள் நேற்று முல்லைத்தீவு கடற்கரைக்கு வந்திருந்த சமயம் எடுக்கப்பட்ட படங்கள். கண்காணிப்புக் குழு பிரதிநிதிகள், கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை, சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரும் படங்களில் உள்ளனர். கப்பலில் ஏறுவதற்காக தங்களது படகு ஒன்றில் போராளிகள் பயணம் செய்வதையும் படத்தில் காணலாம். (ஐ)

# கிழக்குத் தளபதிகளின் கடற்பயணத்தை கடைசி நேரத்தில் குழப்பியது கடற்படை!

## இணக்கத்துக்கு மாறாக குறுக்கீடு விடுதலைப் புலிகள் கடும் சீற்றம்!!

கிளிநொச்சி,ஏப்ரல்16

விடுதலைப் புலிகளின் கிழக்குத் தளபதிகள் மற்றும் போராளிகள் கிளிநொச்சிக்கு வந்து திரும்புவதற்கு வசதியாக இரு தரப்புகளினதும் இணக்கப்பாட்டுடன் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு வகுத்த பயணத்திட்டம் கடற்படையினரின் கடைசி நேரக் குறுக்கீடு காரணமாகக் குழம்பிப்போனது.

முல்லைத்தீவில் இருந்து தளபதிகளை ஏற்றிச்செல்வதற்கும் பின்னர் கிழக்கில் இருந்து தளபதிகளை கிளிநொச்சிக்கு அழைத்து வருவதற்கும் நேற்றையதினம் செய்யப்பட்ட கடல் வழிப்பயண ஏற்பாடு கடற்படையின் நடவடிக்கைகளால் கடைசி நேரத்தில் தடைப்பட்டுப்போனது.

கடற்பயண ஏற்பாடு சம்பந்தமாகக் கண்காணிப்புக்குழு ஏற்படுத்திய இணக்கப்பாட்டுக்கு மாறாக கடற்படையினர் குறுக்கீடுகளைச் செய்து, நிபந்தனைகளை விதித்து பயண ஏற்பாட்டைக் கடைசி நிமிடத்தில் குழப்பியடித்தமை குறித்து விடுதலைப் புலிகள் தங்கள் கடும் அதிருப்தியைச் சீற்றத்துடன் வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

ஜெனீவாவில் புதிய திகதிகளில் நடைபெற இருக்கும் அடுத்த சுற்றுப் பேச்சுக்குச் செல்வது என்ற தமது தீர்மானத்தைக் கடற்படையின் இந்தச் செயல் கேள்விக்குள்ளாக்கிவிடும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவரிடம் சுட் டிக்காட்டியிருக்கின்றார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் நேற்றிரவு கிளைமோர் தாக்குதல் 2 விமானப் படையினர் பலி!

திருகோணமலை,ஏப்.16

திருகோணமலை நகருக்குக் கிழக்கே கப்பல்துறைப் பகுதியில் நேற்றிரவு 8 மணியளவில் ஊரடங்கு அமுலில் இருந்த சமயம் நடத்தப்பட்ட கிளைமோர் கண்ணித் தாக்குதலில் விமானப் படையினர் இருவர் உயிரிழந்தனர். ஒருவர் காயங்களுக்கு உள்ளானார்.

கடற்படையினர் பயணம் செய்த ஜீப் வண்டி ஒன்றை இலக்கு வைத்து இந்தக் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதல் தொடர்பான மேலதிக விவரங்கள் உடனடியாகக் கிடைக்கவில்லை.

திருகோணமலை - கொழும்பு வீதியில் அமைந்துள்ள கப்பல்துறைக் கிராமத்தில் வசித்த தமிழ்க்குடும்பங்கள் அனைத்தும் 1990இல் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்திருந்தன. பின்னர் மீண்டும் 1996 இல் அவர்கள் அங்கு மீளக் குடியமர்ந்தனர். (ஐ-14)(30)

## இந்திய ஜோதிடர் உட்பட மூவர் திருகோணமலையில் படுகொலை!

திருகோணமலை,ஏப்.16

திருகோணமலையில் வெள்ளியன்று மீண்டும் தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்த வன்செயல்களில் பலியானோர் எண்ணிக்கை மூன்றாக உயர்ந்துள்ளது.

இரண்டு தமிழர்கள் மற்றும் ஓர் இந்தியப் பிரஜை ஆகியோரின் சடலங்கள் நேற்று சனிக்கிழமை காலை திருகோணமலை பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டன.

கிண்ணியாவில் வெள்ளிக்கிழமை சிங்களக் குண்டர்கள் நடத்திய கொடூரத் தாக்குதலில் நடேசபுரம் பகுதியைச் சேர்ந்த சோமசுந்தரம் மகேஸ்வரி(வயது 60) என்ற வயோதிபப் பெண் கத்தியால் குத்தப்பட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தியப் பிரஜையான பெங்களூர் இராமமூர்த்தி நகரைச் சேர்ந்த ஜோதிடரான வெங்கடசாமி வெங்கட்ராமன்(வயது 30) என்பவரும் திருமலை மாவட்டச் செயலகத்தில் சிற்றூழியராகப் பணிபுரியும் தண்ணிமலை நமசிவாயலிங்கம்(வயது 28) என்பவரும் வன்செயலில் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர். (20ஆம் பக்கம் பார்க்க)

## கிளைமோர் கண்ணித் தாக்குதலில் வவுனியாவில் 5 படையினர் பலி!

வவுனியா,ஏப்.16

வவுனியா, மூன்றுமுறிப்பு வீதியில் நேற்று நண்பகல் 12.30மணியளவில் நடத்தப்பட்ட ஒரு கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதலில் இராணுவத்தினர் ஐவர் உயிரிழந்தனர். பத்துக்கும் மேற்பட்டோர் காயங்களுக்கு உள்ளாகினர்.

வவுனியா ஜோசப் முகாம் அருகே மூன்றுமுறிப்பு வீதியில் சென்றுகொண்டிருந்த இராணுவ பஸ் ஒன்றின் மீது இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த இருசக்கர உழவு இயந்திரம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த நவீன கிளைமோர் கண்ணி மூலம் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

படையினர் பயணஞ்செய்த பஸ் வண்டி சேதங்களுக்கு உள்ளானது. அதிலிருந்த ஐந்து படையினர் கொல்லப்பட்டனர். பத்துப் பேர் காயங்களுடன் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். (ஐ-14)(30)

## சாவகச்சேரியில் கிரனேட் வீச்சு!

தென்மராட்சி,ஏப்.16

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் ஏ-9 வீதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார் என்று தெரியவருகிறது.

இந்தச் சம்பவத்தை அடுத்து படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தினர். அந்த வீதியூடாகப் பயணம் செய்தவர்கள் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அச்சமயம் சிலர் படையினரால் தாக்கப்பட்டனர் என்றும் கூறப்பட்டது. (ஐ-3-14)(22)

## கடைக்குள் இளைஞன் சுட்டுக்கொலை! தடுக்க முயன்ற தந்தையாருக்கும் சூடு!!

### பருத்தித்துறை முனையில் நேற்று ஆயுத பாணிகள் கைவரிசை

வடமராட்சி,ஏப்.16

பருத்தித்துறை முனைப் பகுதியில் இளைஞர் ஒருவர் அவரது பலசரக்குக் கடைக்குள் வைத்து நேற்று மாலை சுட்டுக்கொல்லப்பட்டார். மகன் கொல்லப்படுவதைத் தடுக்க முயற்சித்த அவரது தந்தையும் சுட்டுப் படுகாயப்படுத்தப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுத பாணிகள் இருவர் இந்தக் கொலையைப் புரிந்துவிட்டுத் தப்பிச் சென்றிருக்கின்றனர்.

முனைப் பகுதியில் கடற்கரை வீதியில் பலசரக்குக் கடை நடத்திவந்த தேவராசா மரியதாஸ் (கண்ணன் - வயது 25) என்ற இளைஞரே தலையில் சுடப்பட்டு உயிரிழந்தார். இந்த இளைஞர் தனது கடைக்குள் நின்றிருந்த சமயம் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கடைக்குள் சென்று அவருடன் உரையாடிவிட்டுத் திடீரெனக் கைத்துப்பாக்கியால் அவரது தலையை நோக்கிச் சுட்டனர் என்று கூறப்படுகிறது.

(20ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா, மூன்றுமுறிப்புப் பகுதியில் கிளைமோர் கண்ணி பொருத்தப்பட்டிருந்த உழவு இயந்திரம் சிதறுண்டு கிடப்பதையும் தாக்குதலுக்கு இலக்கான பஸ்வண்டியையும் காயமடைந்த சிப்பாய் ஒருவர் மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்படுவதையும் படங்களில் காணலாம்.

# ஆழ ஊடுருவி நடத்தப்பட்ட தாக்குதலில் போராளியும் பொதுமகனும் உயிரிழப்பு!

## மன்னார் தட்சணாமருதமடுவில் நேற்று சம்பவம்

கிளிநொச்சி,ஏப்.16

மன்னாரில் விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியான தட்சணாமருதமடுவில் இலங்கை இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையினர் நடத்திய கிளைமோர் கண்ணித் தாக்குதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவரும் பொதுமகன் ஒருவரும் உயிரிழந்தனர்.

நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

இந்தத் தாக்குதலில் இசைவாணன் என்ற போராளியும் நகுலேஸ்வரன் என்ற இளைஞனுமே உயிரிழந்தவர்கள் என்று முற்கொண்டு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இவர்கள் இருவரும் மோட்டார் சைக்கிள் ஒன்றில் பாலம்பிட்டி வீதியில் சென்றுகொண்டிருந்த போது அவர்களை இலக்குவைத்து தாக்குதல் நடத்தப்பட்டது.

தாக்குதல் சம்பவம் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் புலிகள் முறையிட்டிருக்கின்றனர்.

இந்த இடத்தில் முன்னரும் இதுபோன்ற ஒரு தாக்குதல் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஐ-14)(22)

# பருத்தித்துறையில் மீனவர்கள் மூவர் கரை திரும்பவில்லை

வடமராட்சி,ஏப்.16

பருத்தித்துறைக் கடலில் கடந்த செவ்வாய்க்கிழமை மீன்பிடிக்கச் சென்ற மூன்று இளைஞர்கள் இன்னமும் கரை திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறை மணல் ஒழுங்கையைச் சேர்ந்த மூவரே இவ்வாறு கரை திருப்பாதவர்களாவர். இவர்களில் ஒருவர் திருமணம் முடித்த குடும்பஸ்தர் ஆவார்.

இம்மூவரையும் பருத்தித்துறைக் கடலில் தேடும் பணி நேற்றும் நேற்றுமுன்தினமும் இப் பகுதி மீனவர்களால் மேற்கொள்ளப்பட்டபோதும் அவர்கள் நேற்றுமாலை வரை கண்டுபிடிக்கப்படவில்லை. (ஐ-173)(30)

# நாட்டுப்பற்றாளர்கள் நினைவாக பளையில் நேற்று வைபவம்

பளை,ஏப்.16

யாழ்.மாவட்ட நாட்டுப்பற்றாளர்களை நினைவு கூர்ந்து அவர்களது குடும்பங்களை மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்றுமுற்பகல் 11 மணிக்கு பளை மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு கல்விக் கழகத்தின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் சி.ஆர்வலன் தலைமை வகித்தார்.

பொதுச் சுடரினை சர்வதேச மாணவர் பேரவைப் பொறுப்பாளர் கண்ணன், நாட்டுப்பற்றாளர் கிருஸ்தோபரின் துணைவியார், யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த ப.கனகலிங்கம் ஆகியோர் ஏற்றினர்.

தமிழீழத் தேசியக் கொடியினை யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் கண்ணன் ஏற்றிவைத்தார்.

நாட்டுப்பற்றாளர் தியாகதீபம் அன்னை பூபதியின் திருவுருவப் படத்திற்கான ஈகச் சுடரினை யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பிறை ஏற்றினார்.

அன்னையின் திருவுவருப்படத்திற்கான மலர் மாலையினை உடுவில் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் கனியன் அணிவித்து வைபவத்தை தொடக்கிவைத்தார்.

தொடர்ந்து நாட்டுப்பற்றாளர்களின் திருவுருவப் படங்களுக்கு அவர்களது உறவுகள் ஈகச் சுடர் ஏற்றி மலர் மாலைகளை அணிவித்தனர்.

நினைவுரையினை தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த ப.கனகலிங்கமும் சிறப்புரையினை யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும் நிகழ்த்தினர்.

இறுதியாக நாட்டுப்பற்றாளர்களின் குடும்பத்தினர் நினைவுப் பொருள்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ஐ-7)

# வன்செயல்கள் நிறுத்தப்படவேண்டி கிறிஸ்து உயிர்ப்பு விழா ஆராதனை

யாழ்ப்பாணம்,ஏப்.16

கிறிஸ்து உயிர்ப்பு விழா ஆராதனைகள் நேற்று நள்ளிரவு பெரும்பாலான கிறிஸ்தவ தேவாலயங்களில் நடைபெற்றன.

குடாநாட்டில் உள்ள தேவாலயங்களில் நேற்று நள்ளிரவு கிறிஸ்து உயிர்ப்பு விழாத் திருப்பலிகள் மிக அமைதியான முறையில் நடைபெற்றன.

நள்ளிரவு ஆராதனை இடம்பெறாத தேவாலயங்களில் இன்று அதிகாலை கிறிஸ்து உயிர்ப்பு விழாத் திருப்பலிகள் நடைபெறும்.

யாழ்.மரியன்னை பேராலயத்தில் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் உயிர்ப்பு விழா ஆராதனைகள் நடைபெற்றன.

குடாநாட்டில் தோன்றியுள்ள அசாதாரண சூழ்நிலை விலகவும் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவும் தூண்டிவிடப்பட்டுள்ள இனக்கலவரங்கள் நிறுத்தப்படவும் இந்த ஆராதனைகளின் போது விசேடமாக வேண்டப்பட்டது.

மக்கள் மிகவும் பக்தியான முறையில் இதில் கலந்துகொண்டனர். (8)(22)

# சதுரங்கப் போட்டி பரிசளிப்புவிழா இன்று

யாழ்ப்பாணம்,ஏப்.16

'மெற்றோபொலிற்றன்', நவகலா ஆகிய நிறுவனங்களின் அனுசரனையுடன் தமிழ் செய்தி தகவல் மையம் நடத்திய சதுரங்கப் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு வைபவம் இன்று நடைபெறவுள்ளது.

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் பிற்பகல் 2 மணிக்கு இந்த வைபவம் இடம்பெறும்.

கடந்த முதலாம் இரண்டாம் திகதிகளில் யாழ். இந்துக் கல்லூரியில் நடத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையிலான இந்தப் போட்டிகளில் 10,12,15,19 ஆகிய பிரிவுகளில் வெற்றியீட்டியோரை இன்று பிற்பகல் 2 மணிக்கு முன்பாக யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்துக்கு வருகை தருமாறும் தமிழ் செய்தி தகவல் மையம் கேட்டுள்ளது. (ஐ)(30)

# இருட்டு என்பது வெளிச்சத்துக்கானது! விரைவில் இருள் அகலும், விடுதலை கிட்டும்

## நாட்டுப்பற்றாளர் நினைவு வைபவத்தில் இளம்பரிதி



இருள் என்பது வெளிச்சத்துக்கானது தற்போதைய இருண்ட சூழல் அகன்று விரைவில் ஒளிபிறக்கும். தமிழர் தாயகப் பிரதேசத்தில் தற்போது இடம்பெறுகின்ற ஒவ்வொரு சம்பவங்களும் எமது தாயகத்திற்கான படிக்கற்களாகவே அமையப்போகின்றன.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

நேற்றுக்காலை பளை மத்திய கல்லூரியில் யாழ்.மாவட்ட நாட்டுப்பற்றாளர்களை நினைவுகூரும் வைபவத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது-

எங்களுடைய சுதந்திர விடுதலைப் போராட்டத்தில் மாவீரர்களின் வீரம், தியாகம் என்பன ஆவணப்படுத்தப்பட்டு அவர்கள் அனைவரையும் நினைவுகூரும் நாளாக நவம்பர் 27 அமைந்துள்ளது.

அதேபோன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு உறுதுணையாக நின்று அதன் சுமைகளையும் இரகசியங்களையும் பேணிப் பாதுகாத்து நின்று உழைத்தவர்கள் நாட்டுப்பற்றாளர்களே. இவர்களை நினைவு கூர்ந்து கௌரவப்படுத்தி மார்ச் 19ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 19 ஆம் திகதி வரையான நாள்களை எமது அமைப்பு நாட்டுப்பற்றாளர்களைக் கௌரவிக்கும் நாள்களாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

இந்திய வல்லாதிக்கம் அகலக் கால்பதித்து எமது போராட்டத்தை சிறு குழுக்களின் போராட்டம் என நசுக்க நினைத்தபோது இந்தப் போராட்டம் மக்கள் விடுதலைக்கான போராட்டம் என்பதை தியாகதீபம் அன்னை பூபதி அகிம்சை மூலம் எடுத்துக்காட்டி வீரச்சாவைத் அணைத்துக் கொண்டார்.

இந்திய வல்லாதிக்கமும் உலகமும் நன்கு தமிழ் மக்களின் விடுதலை வேட்கையை நன்கு உணரத் தொடங்கின.

எனவேதான் நாட்டுப்பற்றாளர்கள் குடும்ப வாழ்வோடும் தாயகப் பற்றோடும் உழைத்த உத்தமர்களாக மதிக்கப்படுகின்றனர்.

[illegible]

துறைகளிலும் நின்று உழைத்தவர்கள். பல நெருக்கு வாரங்களுக்கு மத்தியில்நின்று சாவினை அணைத்துக்கொண்டவர்கள் இவர்கள்.

இதுவரை குடாநாட்டில் 193 நாட்டுப்பற்றாளர்கள் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் மதிப்பளிக்கப்பட்டிருக்கின்றனர்.

அந்த வகையில் நாட்டுப்பற்றாளர்களின் எண்ணங்கள் ஈடேறும் காலம் வெகு தூரத்தில் இல்லை

இருட்டு என்பது வெளிசத்துக்கானது. எனவே இப்போதைய இருட்டானது மிகப் பெரிய வெளிச்சத்துக்கானது. இதை உணர்ந்து நாம் எல்லோரும் ஒன்றுபட்டு அவர்களின் கனவை நினைவாக்குவோம்.

எனவே ஸ்ரீலங்கா தேசம் சர்வதேசத்தின் பார்வையில் ஒரு பயங்கரவாத தேசமாக கணிக்கப்படும்.

தற்போது நடைபெறும் ஒவ்வொரு சம்பவங்களும் எமது தயாகத்திற்கான படிக்கற்களாகவே இருக்கப்போகின்றன - என்றார் இளம்பரிதி. (ஐ-7)(22)






# எரிபொருள் விலைகள் 8 ரூபாவால் உயர்வு

கொழும்பு,ஏப்.16

எரிபொருள்களின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் எட்டு ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் [illegible]களின் விலைகளே எட்டு ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. (ஐ-14)

# புத்தாண்டு இசை நிகழ்ச்சி ஒத்திவைப்பு

கொழும்பு,ஏப்.16

தேசிய லொத்தர் சபையினால் யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படவிருந்த சித்திரைப் புத்தாண்டு இசை நிகழ்ச்சி ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

தென்னிந்திய நடனக் கலைஞர்கள், நகைச் சுவைக் கலைஞர்கள் பங்குகொண்டு நடத்த இருந்த இந்த நிகழ்ச்சி தற்போதைய சூழ்நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருப்ப தாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் அறிவித்திருக்கின்றனர்.

சித்திரைப் புத்தாண்டு காலத்தில் ஏற்பாடு செய்யப்படும் இந்த இசை நிகழ்ச்சி நாட்டின் மாவட்டங்கள் தோறும் தொடர்ச்சியாக இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# தொடரும் நம்பிக்கையீனம்

அடுத்த சுற்று ஜெனீவாப் பேச்சு, இப்போது இரண்டாவது முறையாக அறிவிக்கப்பட்ட தினங்களிலும் - எதிர்வரும் 24, 25ஆம் திகதிகளிலும் - நடைபெறப்போவதில்லை என்பது ஓரளவுக்குத் தெளிவாகிவிட்டது.

பிணக்குக்குரிய எந்த இரு தரப்புகளுக்கும் இடையிலான பிரச்சினைகள் இணக்கமுறையில் தீர்க்கப்பட வேண்டுமானால் அதற்கு அந்த இரண்டு தரப்புகளுக்கும் மத்தியில் சிநேகபூர்வமான - நட்புறவான - ஒருதொடர்பாடல் நிலை நிலவுவது அவசியம்.பகையுறவு, விரோதப்போக்கு, கசப்புணர்வு, நம்பிக்கையீனம், போட்டி மனப்பான்மை, விட்டுக்கொடாத இறுக்கம், மற்றைய தரப்பை சமஅந்தஸ்தோடு அணுகாமல் மிதப்போடு விடயங்களைக் கையாளும் இறுமாப்பு போன்றவற்றை பேணும் அரசுத் தரப்புடன் விடுதலைப் புலிகள் இனிமேல் சமரசப் பேச்சு மேசைக்கு செல்வதே சந்தேகத்துக்குரியதுதான்.

ஏற்கனவே, சர்வதேச சமூகத்துக்கு முன்னால் வைத்து ஜெனீவா முதற்சுற்றுப்பேச்சுகளின் போது தான் அளித்த வாக்குறுதிகளை - கூட்டறிக்கை மூலம் தான் வெளிப்படுத்திய கடப்பாட்டை - நிறைவு செய்யாமல், நிறைவேற்ற மறுத்து, நிலைமையை மேலும் குழப்பிவருகிறது ஜனாதிபதி மஹிந்தவின் புதிய அரசு.

ஒருபுறம் ஒட்டுப்படைகளினதும் துணைப்படைகளினதும் வன்முறை அட்டகாசங்கள் தொடர்கதையாகத் தொடர்ந்து வருகின்றன.தமிழ் ஆயுதக்குழுக்களை உருவாக்கி ஊக்குவித்து ஆயுதங்களை வழங்கி தமிழர்களின் விடுதலைப் போராட்ட சக்தியான விடுதலைப் புலிகளுக்கும் தமிழரின் விடுதலைப் போராட்ட உணர்வெழுச்சிக்கும் எதிராக அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டிருக்கும் மஹிந்தரின் அரசு, தனது இந்தத் குள்ளத் தந்திரோபாயத் திட்டம் காரணமாக ஜெனீவா முதல் சுற்றுப்பேச்சுகளின் போது காணப்பட்ட இணக்கப்பாட்டை அமுல் செய்யாமல் பின்னடிக்கின்றது.

மறுபுறம் தமிழர் தாயகத்திலிருந்து தமிழர்களை அகற்றவும், தமிழர் தாயகப் பிரதேசமான வடக்கு - கிழக்கைத் துண்டாடவும் கபடத்திட்டம் வகுத்துள்ள தென்னிலங்கைப் பேரினவாதம் தனது செயற்பாட்டின் ஒரு கட்டமாக ஈழத் தமிழருக்கு எதிராக இனக்கலவரத்தை கட்டவிழ்த்து விட்டிருக்கிறது. திருகோணமலையை - சூறையாடும் பேரினவாதத் திட்டம் இனக்கலவரமாக அரங்கேறுகின்றது. இதன் பெறுபேறாக பெரும்பான்மையின மக்களுக்கு எதிரான வன்செயல்களும் நடக்கின்றன. இதனால் இனமுறுகலும் பதற்றமும் உச்சக்கட்டத்தை இப்போது தொட்டிருக்கின்றன.

தவிரவும், விடுதலைப் புலிகளின் கிழக்குத் தளபதிகள் வன்னிக்குத் தமது தலைமையைச் சந்திப்பதற்கு வந்து செல்லும் ஒழுங்கும் கடற்படையின் அதீத தலையீட்டின் காரணமாகக் குழம்பிப் போய்விட்டது.

மேலும் அமைதிப் பேச்சுக்குச் செல்லும் தங்களின் குழுவின் பாதுகாப்புக்குச் சர்வதேச உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும் என்று விடுதலைப் புலிகளின் தலைமை உறுதியாக எதிர்பார்க்கின்றது.

இந்தச் சிக்கல்களைத் தாண்டி, அமைதிப் பேச்சு சுமுகமாக நடக்கும் என்ற நம்பிக்கை இப்போதைக்கு இல்லை.

அடுத்த சுற்று அமைதிப் பேச்சுக்குப் போகமுன்னர், கிழக்கு கள நிலைமைகள் குறித்து தனது தலைமையுடன் தனது கிழக்குத் தளபதிகள் கலந்துரையாடுவது மிகமிக அத்தியாவசியம் என்று விடுதலைப் புலிகள் இயக்கம் தெளிவாகக் கூறுகின்றது. ஒரு வகையில் பார்த்தால், அடுத்த சுற்று அமைதிப் பேச்சில் முக்கியமாக ஆராயப்படப்போகின்ற விடயங்கள் கிழக்கு நிலைமைகள் பற்றியனவாக பெரும்பாலும் இருக்கும் என்று கருதப்படுவதால் புலிகளின் இந்த வற்புறுத்தலில் நியாயங்கள் அதிகம் இருப்பதை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளவேண்டும்.

அடுத்த சுற்றுப்பேச்சு நடப்பதற்கு முன்னர் தான் நிறைவு செய்யவேண்டிய கடப்பாடுகளை - முன்னைய பேச்சின் போது காணப்பட்ட இணக்கத்தை - நடைமுறைப்படுத்த பின்னடிக்கும் இலங்கை அரசு, அதைச் செய்யாமலேயே அடுத்த சுற்றுப் பேச்சுக்கு புலிகளை இழுத்துவந்து மேசையில் அமர்த்தி, மீண்டும் ஒரு 'சமரசப் பேச்சு நாடகத்தை' அரங்கேற்ற துடியாய்த் துடிக்கின்றது.

இந்த நாடகத்தில் 'நல்ல பிள்ளையாக' நடிப்பதன் மூலம் மோசமடைந்திருக்கும் தனது பொருளாதார நிலையை சீர்படுத்துவதற்கான உதவிகளை - இணைத் தலைமைகள் மூலம் - உதவி வழங்கும் நாடுகளிடமிருந்து பெற்றுக்கொள்ளமுடியும் என்று கணக்குப்போடுகின்றது இலங்கையின் அரசுத் தலைமை.

அமைதித் தீர்வுகாணும் நோக்கில் ஜெனீவாப் பேச்சு ஒழுங்குபடுத்தப்பட்டாலும் அத்தகைய இலக்கில் இதய சுத்தியோடும் நேர்மைத் திறத்தோடும் அரசு செயற்படவில்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

நியாயமாக நடந்துகொண்டு - நேர்மையாக விடயங்களை அணுகி - இதயசுத்தியோடு பேச்சு முயற்சியைக் கையாண்டு - தமிழர்களுக்கு அவர்களின் நீதியான, சட்டரீதியானஅபிலாஷைகளை நிறைவு செய்யக்கூடிய தீர்வுத் திட்டம் ஒன்றை வழங்குவதுஅரசின் கடப்பாடு.

இந்தக் கடப்பாட்டில் கவனம் - சிரத்தை - கொள்ளாத மஹிந்தவின் அரசு, அமைதிமுயற்சிகளுக்கான இந்தக் காலத்தில் பகையுறவையும் வெறுப்புணர்ச்சியையும் வெளிப்படுத்தும் கெடுபிடிப்போக்கில் தீவிரம் காட்டுகிறது.

அதனால்தான் ஒட்டுப்படைகளின் செயற்பாடுகள் கட்டு மீறுகின்றன; தமிழர்களுக்கு எதிராக இனக்கலவரம் கட்டவிழ்த்துவிடப்படுகிறது.யுத்த நிறுத்த உடன்பாட்டின் அடிப்படைக்கு அமைய புலிகளின் தளபதிகளுக்கு வழங்கப்பட வேண்டிய போக்குவரத்து வசதி மறுக்கப்படுகிறது.

இவ்வாறு உள்ளே கரவு வைத்து காய்களை நகர்த்தும் மஹிந்தவின் இந்த அரசினால் பேச்சு மூலம் ஓர் இணக்கத் தீர்வை எட்டலாம் என்று நம்புவதற்கு இடமேஇல்லை.

இது விடயத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் நமது சகோதர இதழான 'சுடர் ஒளி' யின் வார சஞ்சிகை முன்பக்க அட்டைத் தலைப்பாக வெளியிட்ட வாசகம் இன்றும் - இன்னும் - பொருத்தமாக - கனகச்சிதப் பொருத்தமாக உள்ளது.

'பேச்சு நடக்காது; நடந்தாலும் தொடராது; தொடர்ந்தாலும் பயன் தராது''- இதுதான் அந்தத் தலைப்பு. அந்த நம்பிக்கையீனமே இன்றும் தொடர்கின்றது. அதுவே உண்மை.

# தார் ஊற்றப்பட்ட வீதிக்குப் பரவிய களிமண்ணால் புலோலி - சாவகச்சேரி பயணத்தில் பெரும் சிரமம்

## புழுதி மண்ணில் வாகனங்கள் சிக்கி விபத்துக்குள்ளானதில் 10 பேர் காயம்

வடமராட்சி, ஏப்.16

புதிதாக தார் ஊற்றப்பட்ட வீதிக்கு போடப்பட்ட களிமண் மீது மோட்டார் சைக்கிள், சைக்கிள்கள் புதையுண்டும், வழுக்கியும் வீழ்ந்ததில் காலை நேரத்தில் மட்டும் 10 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

புலோலி (மந்திகை)யிலிருந்து சாவகச்சேரி வரையான பிரதான வீதி சர்வதேச நிறுவனம் ஒன்றின் பூரண நிதியுதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

வீதிக்கு தார் ஊற்றப்பட்டதும் புழுதி கலந்த களிமண் தாருக்கு மேல் பரப்பப்பட்டது.

புத்தாண்டுக்கு முந்திய தினங்களில் இவ்வாறு தார் ஊற்றப்பட்ட வீதியால் வாகனங்கள் செல்லும்போது ஒரே புழுதி புகை மண்டலம் உருவாகியதுடன் சுற்றுச் சூழலும் மிக மோசமடைந்திருந்தது. அத்துடன், மேற்படி வீதியால் சென்று வருவோரின் உடைகளும் புழுதியில் தோய்ந்தன. இந்த நிலையில் நீடித்துக் கொண்டிருக்கையில் புத்தாண்டுத் தினத்தன்று பெய்த மழையினால் தார் மீது பரப்பப்பட்டிருந்த புழுதிக் களிமண் திரண்டு களியாக இருந்தது.

இந்த நிலையில் நேற்று அதிகாலை வேளை, தமது அன்றாடக் கடமைக்காக ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர் எனப் பலதரப்பட்டவர்களும் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்களில் இந்த வீதி ஊடாக பயணஞ்செய்த போது வழுக்கியும் புதையுண்டும் விபத்துக்குள்ளாகினர்.

சில மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்களுக்குள் களிமண் உட்புகுந்து அவற்றின் சில்லுகள் உருள மறுத்துவிட்டன. அவ்வாறான சைக்கிள்களிலிருந்து சிக்குண்ட களிமண் அப்புறப் படுத்தப்பட்ட பின்னர் அவற்றை உருட்டிச் செல்ல நேரிட்டது.

இந்த விபத்துக்களினால் காயமடைந்த 10 இற்கும் அதிகமானோர் நேற்றுக்காலை பருத்தித்துறை அரசினர் ஆஸ்பத்திரியிலும் தனியார் வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெற்றனர்.

வீதிக்கு தார் ஊற்றப்படும்போது ஊரிமண் கொட்டபடுவதே வழமையாகும். அதனை விடுத்து புழுதிக் களிமண் விசிறப்படுவதால் மழை பெய்தால் என்ன? பெய்யாவிட்டால் என்ன? தாம் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாக பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

(எ-173)



சமூக அபிவிருத்தி மன்றத்தினால் பாடசாலை செல்லும் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு சைக்கிள் வழங்கும் திட்டத்தின் கீழ் 150 ஆவது சைக்கிள் நேற்று கையளிக்கப்பட்டது.

ஆஸ்திரேலியாவில் இருந்து வருகை தந்த திருமதி மா.பிரதீப்குமார் சைக்கிளை வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். *(படங்கள்: நேசன்)*

# செல்லத்துரை சுவாமிகளது மறைவு யோகரது பக்தர்களுக்கு பேரிழப்பு

## அஞ்சலிச் செய்தியில் சுவாமி ஆத்மகனானந்தா

யாழ்ப்பாணம்,ஏப்.16

ஸ்ரீமத் செல்லத்துரை சுவாமிகளது மறைவு யோகர் சுவாமிகளது பக்தர்களுக்கு பேரிழப்பு - இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கை இராமகிருஸ்ண மிசனைச் சேர்ந்த சுவாமி ஆத்மகனானந்தா.

யாழ். சிவதொண்டன் நிலையத்தைச் சேர்ந்த செல்லத்துரை சுவாமிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கை வருமாறு:-

யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலைய முதல்வர் வணக்கத்துக்குரிய ஸ்ரீமத் செல்லத்துரை சுவாமிகள் 12.04.2006 அன்று மாலை 6.20 மணியளவில் இறைவனடி சேர்ந்தார் என்ற செய்தியறிந்து அவருக்கு மனதார அஞ்சலி செலுத்துகிறோம்.

ஈழத்துச் சித்தர் யோகர் சுவாமிகளின் அணுக்கத்தொண்டராக பல காலம் அவருக்குச் சேவையாற்றும் பேறு பெற்றிருந்தவர் ஸ்ரீமத் செல்லத்துரை சுவாமிகள்.

அவர் குருநாதரின் பெருமையை உலகில் நிலை நாட்டும் வகையில் சீரிய இறைவாழ்க்கையை மேற்கொண்டிருந்ததுடன், பல அடியார்களையும் அந்தப் பாதையில் வழிநடத்தினார்.

அவரது மறைவு யோகர் சுவாமிகளது பக்தர்கள்அனைவருக்கும் ஒரு பேரிழப்பு என்பது ஐயமில்லை.

இவர் இராமகிருஸ்ண மிசனுடன் நீண்ட காலத் தொடர்பை கொண்டிருந்தார் என்பதை இங்கு குறிப்பிடுவதில் பெருமை அடைகிறோம்.

ஸ்ரீமத் செல்லத்துரை சுவாமிகள் இதுகாலமும் முன்னெடுத்துச்சென்ற பணிகள் தொடர்ந்தும் நடைபெற இறைவனது நல்லாசிகளைப் பிரார்த்திப்பதோடு, அவரது நினைவிற்கு எங்கள் மனமார்ந்த அஞ்சலிகளை செலுத்துகின்றோம் - என்றுள்ளது.

### தாவடி ஸ்ரீ இராமகிருஸ்ண சேவாச்சிரமம்

எமது மண்ணில் நடமாடிய மாமுனிவர் யோகர் சுவாமிகளின் பிரதம சீடர்களில் ஒருவரும், யாழ்.சிவதொண்டன் நிலையத்தினை சிறப்புற நெறிப்படுத்தி வந்தவருமான தவத்திரு ஸ்ரீமத் செல்லத்துரை சுவாமிகளின் மகாசமாதி செய்தி எமது அனைவருக்கும் ஆழ்ந்த துயரத்தைத் தருகின்றது.

மாமுனிவர் யோகர் சுவாமிகளுடனும், ரமண மகரிஷி அவர்களுடனும் ஒன்றாக வாழ்ந்து, சேவை செய்யும் பெரும் பாக்கியம் பெற்றவர். யோக மாமுனிவர் போதித்த வழியில் மௌன மாமுனிவராக வாழ்ந்து காட்டிய மகா:ன்.

பெயர், புகழ் என்று உலக மாயைகளில் சிக்காது, குருவின் பணியை மிகவும் திறப்படச் செய்து வந்தவர்.

ஞானிகள் தமது கடமை முடிந்ததும் தூல சரீரத்தை உடுத்து சூக்கும சரீரத்தையும் தாண்டி இறைவடிவாக இருந்து எமை வழிநடத்துவர். அந்தவகையில் ஸ்ரீமத் செல்லத்துரை சுவாமிகள் முன்னெடுத்துச் சென்ற பணிகள் தொடர்ந்தும் நடைபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்- என்று தாவடி இராமகிருஷ்ண சேவாச்சிரமம் விடுத்த அஞ்சலி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# கிளிநொச்சி மத்திய கல்லூரியில் மாவட்ட மட்ட சதுரங்கப்போட்டி

வட்டக்கச்சி, ஏப்.16

கிளிநொச்சி மாவட்ட மட்டத்திலான சதுரங்கப்போட்டி இன்று காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தினரின் ஏற்பாட்டில் நடத்தப்படவுள்ள இந்தப் போட்டியில் மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு தனித்தனியாகவும் பொதுமக்களுக்கு இரு பிரிவுகளுமென எல்லாமாக நான்கு பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்படவுள்ளன மாணவர்களுக்கான போட்டியானது 15 வயதின் கீழ் ஆண், பெண் - 21வயதின் கீழ் ஆண், பெண் என நான்கு பிரிவுகளாகவும் - ஆசிரியர்களுக்கான போட்டிகளும் பொதுமக்களுக்கான போட்டிகளும் ஆண், பெண் என இரு பிரிவுகளாகவும் நடத்தப்படும்.

இந்தப் போட்டிகளில் முதல் 5 இடங்களையும் பெறுபவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

(எ-405 -203)

## பாராட்டுவிழா

வலி.தென்மேற்கு, ஏப்.16

இளவாலை வடக்கு கிராம அபிவிருத்தி சங்கத்தலைவரும், இளவாலை வடக்கு விவசாயிகள் சம்மேளனத் தலைவருமான செ.பத்திநாதர் சமாதான நீதிவானாகப் பதவியேற்றத்தை பாராட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.4 மணிக்கு இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் பாராட்டு விழா நடத்தப்படவுள்ளது.

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்ரன் பாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் கலாபூஷணம் சைவப்புலவர் சு.செல்வத்துரை வரவேற்புரை நிகழ்த்துவார்.

காங்கேசன்துறை மக்கள் வங்கி முகாமையாளர் பொன்.கணேசமூர்த்தி, தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத் தலைவர் சி.சிவமகாராசா. கீரிமலை சமநலசேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் திருமதி சாவித்திரி குகதாசன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டு உரையாற்றுவர். (எ-135)

## நாளை

சித்திரை 04
திங்கட்கிழமை
17.04.2006
திதி: சதுர்த்தி
முன்னிரவு : 11.29 வரை
நட்சத்திரம் : அனுஷம்
பிற்பகல் : 2.24 வரை
சங்கடஹர சதுர்த்தி விரதம்
சுபநேரம் : 12.04 - 01.34
ராகுகாலம் : 07.34 - 09.04

## உதயவாக்கு

*பேச்சாற்றலை விட செயலாற்றல் எப்பொழுதும் சிறந்ததாகும்.*
*-ஓர் அறிஞர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அண்மையில் யாழ்ப்பாணம்
விஜயம் செய்த
**ஸ்ரீஸ்ரீ**
**ரவிசங்கர்ஜியின்**
**வாழும் கலைப்பயிற்சி**
**இலவச அறிமுக உரை**

*நாள்: 17.04.2006 திங்கட்கிழமை மாலை 6 மணி*
*இடம்: கம்பன் கோட்டம், நல்லூர் பின்வீதி நல்லூர்.*

பயிற்சி நாள்கள்: 18.04.2006 முதல் 23.04.2006 வரை
பயிற்சிநேரம் : காலை 6 மணி முதல் 8.30 மணி வரை
அல்லது
மாலை 5மணி முதல் 7.30 மணி வரை (49511) (18-32-16-17)

*அன்பில் மலருங்கள்! உங்களை உணருங்கள்!*
மேலும் தொடர்புகளுக்கு: 0779059549, 0779059544,0777157281

## மரண அறிவித்தல்கள்

### செல்வி பாக்கியரத்தினம் இராமலிங்கம் *(தேவி)*
B.A.Dip.in.Edu.(இளைப்பாறிய உப அதிபர், யா/இணுவில் இந்துக் கல்லூரி)



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வி பா.இராமலிங்கம் அவர்கள் நேற்று (15.04.2006) சனிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து இராமலிங்கம் (தம்பி ஐயா சாஸ்திரியார்) - திருமதி நல்லதங்கம் இராமலிங்கம் தம்பதியரின் ஏக புத்திரியும் காலஞ்சென்றவர்களான ம.பரமலிங்கம், ம.சோமசுந்தரம், ம.வேலுப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு மருமகளும் நாவற்குழியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வை.பொன்னுத்துரை, வை.இரத்தினம், வை.செல்லத்துரை ஆகியோரின் பாசமிகு பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2006) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளிற்காக கோண்டாவில் காரைக்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(49510)(32-16-17)

*வட்டுவினி,*
*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*
T.P.No.:*0776599812*

*தகவல்:*
**திரு.பொ.சிவசுப்பிரமணியம்,**
**திரு.சி.அழகேசன் *(சகோதரர்கள்).***

### சிவஸ்ரீ தி.இரகுநாதக்குருக்கள்



கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவஸ்ரீ தி.இரகுநாதக்குருக்கள் அவர்கள் நேற்று (15.04.2006) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திருமலைசாமி சர்மா (கணேசையா), மங்களம்மா தம்பதியரின் அன்பு மகனும் சசிகலாவின் அன்புக் கணவரும் கஜரூபசர்மா, கஜரூபி, கஜதர்சன், கஜலக்ஷ்மி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2006) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோப்பாய் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பருத்தித்துறை வீதி,*
*கோப்பாய் வடக்கு,*
*கோப்பாய்.* (49505)(32-17-16)

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

### சுப்பிரமணியம் இலட்சுமணன்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இலட்சுமணன் அவர்கள் 14.04.2006 வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (செட்டியார்) மற்றும் காமாட்சிஅம்மாள் தம்பதியரின் அன்பு மகனும் சண்முகவேல் (லண்டன்), சக்திவேல், சிங்காரவேல், வெற்றிவேல் (சென்னை), இராமச்சந்திரன், நாகலட்சுமி, அமிர்தவல்லி, பரமேஸ்வரி (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கச்சேரி - நல்லூர் வீதியில் உள்ள அவரின் இல்லத்தில் இன்று (16.04.2006) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6/14, முத்தவிநாயகர் வீதி,
முதலாம் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம்.

*தகவல்:*
**சக்திவேலும் சகோதரர்களும்.**
(49514)(32-16-17)

## விற்பனை உதவியாளர்கள் தேவை

வாகி பார்மஸிக்கு விற்பனை உதவியாளர்கள் தேவை. அருகில் வசிப்பவர்கள் உடன் நேரில் வரவும். (49508)(32-16-17)

தொடர்பு: **வாகி பார்மஸி,**
**பலாலி வீதி, கோண்டாவில்.**

## மண்கும்பானில் கட்டாக்காலி நாய்களால் தொல்லை

புங்குடுதீவு, ஏப்.16

மண்கும்பான் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்திருப்பதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, கட்டாக்காலி நாய்கள் கால்நடைகளைப் பிடித்துவருவதாகவும் -

கடற்படையினரால் வளர்க்கப்பட்டு வரும் நாய்களே அதிகமாக கால்நடைகளைப் பிடித்துவருவதாக மக்கள் கவலை தெரிவித்தனர்.

எனவே, வேலணை பிரதேச சபையினர் இது விடயத்தில் நடவடிக்கை எடுத்து கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-188)(23)

## தெல்லிப்பழையில் செவ்வாயன்று பாரம்பரியப் போட்டிகள்

வலி.வடக்கு, தெல்லிப்பழை பிரதேச செயலகமும் கலாசார சபையும் இணைந்து நடத்தும் பாரம்பரிய போட்டிகள் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளன.

பிரதேச செயலக வளாகத்தில் நடைபெறவுள்ள இந்தப் போட்டிகளில் போர்த்தேங்காய் அடித்தல், கைக்கொடிச் சவாரி, தயிர்முட்டி உடைத்தல் என்பன இடம்பெறும் என்று பிரதேச கலாசார உத்தியோகத்தர் மா.அருள்சந்திரன் தெரிவித்தார்.

இந்தப் போட்டிகளை நாளை திங்கட்கிழமை நடத்துவற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தபோதிலும் தவிர்க்கமுடியாத காரணங்களால் போட்டிகள் செவ்வாய்க்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டன என்றும் - அவர் மேலும் கூறினார். (எ)

## நீர் உயிரியல்வள பாட பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கு!

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் 2006/2007ஆம் ஆண்டு கற்கைநெறிக்கு புதிய மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் நீர் உயிரியல் வள, தொழிநுட்ப கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரப்படவில்லை என்றும் -

சம்பந்தப்பட்ட கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் அத்துறையில் நியமனம் பெற்ற பயிற்றப்படாத ஆசிரியர்களை தமது விண்ணப்பங்களுடன் உடன்தொடர்பு கொள்ளுமாறும் - பலாலி ஆசிரியர் கலாசாலையின் அதிபர் த.காங்கேசபிள்ளை தெரிவித்துள்ளார். (எ)

## அந்தியேட்டிக் கிரியை அழைப்பு



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 23 | 19 |
| 04 | 03 |
| 1953 | 2006 |

### திருமதி புலேந்திரன் பாக்கியலட்சுமி

*எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் இருந்து 19.03.2006 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதமெய்திய எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (16.04.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு சாட்டி தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 18.04.2006 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

*புளியங்கூடல்,*
*ஊர்காவற்றுறை.* (49506)(32-16-17) **கணவர், பிள்ளைகள்.**

## மலேசியா நாட்டில் தொழில் புரிவதற்கு அரியதோர் சந்தர்ப்பம்

இலங்கையர்களுக்கு வெளிநாடுகளில் தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுப்பதில் 18 வருட கால அனுபவமுள்ள ACURA வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்திற்கு மலேசியா நாட்டில் முன்னணி நிறுவனங்களுக்கு இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* நேர்முகப் பரீட்சைகள் வெளிநாட்டு முகவர்களினால் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை ACURA வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் நடைபெறும்.
* நேர்முகப் பரீட்சைகளுக்கு சமுகமளிப்போர் தங்களது சகலவிதமான ஆவணங்கள் மற்றும் பாஸ்போர்ட் அளவிலான 04 வர்ணப்புகைப்படங்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.

(சி48962)

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குத் தெரிவுசெய்யப்படுவோர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு அனுப்பப்பட்டு அவர்களினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் ஒப்பந்தப் பத்திரங்கள் பெற்றவர்கள் மாத்திரமே வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு அனுப்பி வைக்கப்படுவர். கட்டாயமாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் சட்டதிட்டங்களுக்கு அமையவே வெளிநாடு செல்ல அனுமதிக்கப்படுவர்.

**அகுரா (ACURA)**

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மனிதவள பயிற்சி நிலையம்

53, ஒராபிபாஷா மாவத்தை, 1ஆம் டிவிசன் (டெக்னிகல் சந்தி), கொழும்பு-10.

**தினம் ஓர் அதிர்ஷ்டசாலி...**

Annai Nagaa Food City
For all your daily needs

அன்னை நாகாவின் புத்தாண்டு விசேட சலுகைகள்
நீங்களும் ஒரு வெற்றியாளராக இன்றே விரையுங்கள்
அன்னை நாகா பூட்சிற்றி

மார்ச் 19 முதல் மே 30 வரை

இல. 175, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.222 5515

கடந்த வார அதிர்ஷ்டசாலிகள்:
1) S.தாமகுமாரி - உடுப்பிட்டி
2) M.அருள்குமார் - யாழ்ப்பாணம்
3) R.சுதர்சினி - கொக்குவில்
4) V.திருச்சபேசன் - கோண்டாவில்
5) S.நடராசா - கொக்குவில்
6) S.டிலானி - நல்லூர்

(சி48969)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளபதிகளின் வருகை தடங்கல் பேச்சு வாய்ப்பு நழுவுகிறது

**அடுத்தகட்டப் பேச்சு இடம்பெறுமா?**
**தாயகப் பகுதியில் உருவாகியுள்ள களநிலையில் மாற்றம் ஏற்படுமா?**
**பேச்சுக்கான புறச்சூழலை உருவாக்க ஜனாதிபதி மஹிந்தர் நடவடிக்கை எடுப்பாரா?**

இத்தகைய கேள்விகள் எழுந்துள்ள நிலையில் அடுத்தகட்டப்பேச்சுத் தொடர்பான அறிவிப்பு வந்துள்ளது.

எதிர்வரும் 24ஆம், 25ஆம் திகதிகளில் இரண்டாம் கட்டப் பேச்சு இடம்பெறும் என்ற அறிவிப்பு நோர்வேத் தரப்பினால் வெளியிடப்பட்டுள்ளது.

அரசுடனும், விடுதலைப் புலிகளுடனும் ஆராய்ந்து பேச்சுக்கான திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ள போதும்-

களநிலைமை மிகவும் நெருக்கடிக்குள் சிக்கியுள்ள சூழலில் பேச்சுக்கள் இடம்பெறுமா என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது.

**வன்முறைகள் அதிகரிப்பு**

திருகோணமலையில் சிங்களக் குண்டர்களால் உருவாக்கப்பட்ட இனக்கலவரம், வவுனியாவில் பொது மக்கள் மீதான தாக்குதல், யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் மீதான கொலைகள், மட்டக்களப்பில் பொது மக்கள் மற்றும் போராளிகள் மீதான தாக்குதல்கள், மொத்தத்தில் தமிழர் தாயகப் பகுதியில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்செயல்கள் பேச்சுக்கள் இடம்பெறுமா என்ற கேள்வியை எழுப்பி நிற்கின்றன.

இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் இடம்பெறுவதன் மூலம்தான் சுமூகமான சூழலை உருவாக்க முடியும் என சர்வதேச சமூகமும், இணைத்தலைமை நாடுகளும் நோர்வேயும் இருதரப்பையும் வலியுறுத்தி வருகின்றன.

**நெருக்கடித் தீர்வுக்கு சர்வதேசம் உதவாததேன்?**

களத்தில் அரசும், படைத்தரப்பும், ஒட்டுக் குழுக்களும் உருவாக்கியுள்ள நெருக்கடிநிலை குறித்து அறிந்தும், அதைத்தடுத்து நிறுத்துவதற்கு உருப்படியான நடவடிக்கை எதனையும் எடுக்க முயலாத சர்வதேச சமூகம், பேச்சுக்குப் போகும்படி விடுதலைப் புலிகளுக்கு எப்படி நெருக்குதல் கொடுக்க முடியும் என்று கேள்வி எழுகின்றது.

பேச்சுக்குச் செல்வதற்குப் புலிகள் எப்போதும் தடையாக இருக்கவில்லை என்று கூறும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், ஜெனிவாவில் எட்டப்பட்ட உடன்படிக்கையை சீராக - முறையாக - நடைமுறைப்படுத்தாமல் மீண்டும் பேசி என்ன பயன் என்று கேள்வியையும் எழுப்பியுள்ளார்.



**ஏழு கட்டப் பேச்சிலும் காணப்பட்ட இணக்கப்பாடு நடைமுறைக்கு வரவில்லை**

பேச்சுக்களில் - சமாதான முயற்சிகளில் பற்றுறுதியுடன் செயற்படும் விடுதலைப் புலிகள் ஏழு கட்டப்பேச்சுக்களை சிங்களத் தரப்புடன் சர்வதேசத்தின் பிரசன்னத்தில் நடத்தியுள்ளனர்.

ஐ.தே.கட்சி அரசுடன் நாடுமாறி நாடுமாறி ஆறு சுற்று பேச்சுக்களை விடுதலைப் புலிகள் நடத்தியுள்ளனர். இந்தப் பேச்சுக்களில் எல்லாம் உருப்படியான தீர்மானங்கள், உடன்பாடுகள் எல்லாம் எட்டப்பட்டன. ஆனால், அந்தத் தீர்மானங்கள் ஏதும் நடைமுறைக்கு வரவில்லை.

விடுதலைப் புலிகள் தமது அரசியல் நிபுணர்கள், சட்ட வல்லுநர்கள் ஆகியோருடன் இணைந்து இடைக்காலத்தன்னாட்சி அதிகாரசபை வரைவு ஒன்றைச் சமர்ப்பித்திருந்தது. இந்த வரைவு சமர்ப்பித்த கையோடு - ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்க எடுத்த நடவடிக்கையால் ஐ.தே.கட்சி ஆட்சி கைமாறியது. இதன் காரணமாக விடுதலைப் புலிகளின் வரைவும் கிடப்பில் போடப்பட்டது. சமாதானப் பேச்சுக்களுக்கும் சமாதிகட்டப்பட்டது.

3 வருடங்களின் பின்னர் மீண்டும் இன்றைய ஜனாதிபதியுடன் விடுதலைப் புலிகள் பேச்சுக்களை நடத்தும் சூழல் உருவானது.

கடந்த பெப்ரவரி மாதம்22ஆம், 23ஆம் திகதிகளில் ஜெனீவாவில் அரசும் - விடுதலைப் புலிகளும் பேச்சுக்களை நடத்தினர். அந்தப் பேச்சின் இறுதியில் கூட்டு அறிக்கை ஒன்று வெளியாகியது.

அங்கு காணப்பட்ட இணக்கப்பாட்டின் படி-

யுத்த நிறுத்த உடன்பாடு செம்மையாக அமுலாக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஒட்டுக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டு அவை வடக்கு - கிழக்கில் இருந்து வெளியேற்றப்பட்டிருக்க வேண்டும்.



முல்லையில் கப்பலில் போராளிகள்

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைப் புலிப் போராளிகள் தமது அரசியல் பணியை ஆரம்பித்திருக்கவேண்டும்.

ஆனால், இவை எதுவும் நடக்கவில்லை. தமிழர் தரப்புக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது.

மொத்தத்தில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கு முரணாக ஒட்டுக்குழுக்களின் செயற்பாடுகள் தீவிரமாக்கப்பட்டன. கொலைகள், ஆள்கடத்தல்கள், இனக்கலவரங்கள் என தமிழ் மக்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

இந்த வன்செயல்கள் யுத்த நிறுத்த சூழலை இல்லாமல் செய்யும் நடவடிக்கை என விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

# நாலாம் கட்டப் போரா? பேச்சா? முடிவு ஜனாதிபதியின் கைகளில்

**யுத்தத்தை ஆரம்பிக்க அரசு முயற்சி**

தமிழ்மக்களை, விடுதலைப் புலிகளைச் சீண்டி அவர்களை யுத்தத்துக்குள் தள்ளும் நடவடிக்கை என்று விடுதலைப் புலிகள் சர்வதேச சமூகத்துக்கும் தெரியப்படுத்தியுள்ளனர்.

இரண்டாம் கட்டப் பேச்சுகள் திட்டமிட்டபடி எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் மூன்று தினங்கள்வரை நடக்க முன்னோடியாக, கிழக்குத் தளபதிகள் விடுதலைப் புலிகளின் தலைமையுடன் கலந்தாலோசிக்க வேண்டும். மத்திய குழு கூடி தீர்மானங்கள் எடுக்க வேண்டும். அதன் பின்னர் தான் விடுதலைப் புலிகள் பேச்சுகளுக்கு செல்லமுடியும் என விடுதலைப் புலிகள் ஒரு மாதத்துக்கு முன்பே நோர்வேத் தரப்பு ஊடாக அரசுக்குத் தெரியப்படுத்தியிருந்தனர்.

ஆனால், தளபதிகளின் போக்குவரத்து தொடர்பாக பல்வேறு நிபந்தனைகளையும் கட்டுப்பாடுகளையும் அரசுத்தரப்பும் படைத்தரப்பும் போட்டு கா[illegible]

விடுதலைப் புலிகள் [illegible]

விடாப்பிடியாக நின்றதால், இறுதியில் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் தளபதிகளின் போக்குவரத்து ஏற்பாடாகியது.

**தளபதிகளின் வருகை ரத்து**

கண்காணிப்புக் குழுவினால் ஏற்பாடு செய்யப்படும் கலத்தில் அவர்களின் வழித்துணையுடன் - பாதுகாப்பு உத்தரவாதத்துடன் - மட்டக்களப்பு கட்டளைத் தளபதி கேணல் பானு, அரசியல்துறைப் பொறுப்பாளர் தயா மோகன், திருகோணமலைக் கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம், அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் ஆகியோர் வன்னி வந்து சேர ஏற்பாடாகியிருந்தது.

கிழக்கு நிலைமைகள் தொடர்பாக அவர்கள் தலைவர் பிரபாகரனுக்கு எடுத்து விளக்குவதற்கும் விடுதலைப் புலிகளின் மத்திய குழுக் கூட்டத்தில் அவர்கள் கலந்து கொள்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

வன்னியிலிருந்து ஒரு தொகுதி போராளிகளை முதலில் கிழக்கே அழைத்துச் சென்று பின்னர் அங்கிருந்து தளபதிகளை வன்னிக்கு அழைத்துவரவும் ஏற்பாடாகியிருந்தது. இந்த ஏற்பாட்டின்படி முல்லைத்தீவிலிருந்து போராளிகள் நேற்று புறப்படத் தயாரானார்கள். ஆனால், இணக்கம் காணப்பட்ட வழிமுறைக்கு மாறாக - கடற்படையினர் அந்தப் பகுதியில் பிரசன்னமாக இருந்ததால் - பயணம் இடம் பெறவில்லை.

தளபதிகள் வன்னி வந்து தலைமையுடன் கலந்துரையாடிய பின்பே பேச்சுக்களில் கலந்துகொள்ள முடியும் என்பது புலிகளின் நிலைப்பாடாகும். தளபதிகளின் வருகையில் ஏற்பட்டுள்ள தடங்கல் எதிர்வரும் 24, 25ஆம் திகதிகளில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்பட்ட பேச்சுக்களை கேள்விக்குறியாக்கியுள்ளது.

இது ஒருபுறமிருக்க, வடக்கு - கிழக்கில் உருவாகியுள்ள நெருக்கடி நிலைக்கு விரைந்து நடவடிக்கை எடுத்துத் தீர்வுகண்டு பேச்சுக்கான புறச்சூழலை உருவாக்க வேண்டிய பாரிய பொறுப்பு ஜனாதிபதி மஹிந்தர் கைகளில் உள்ளது.

ஒட்டுக்குழுக்களின் செயற்பாடுகளை ஒடுக்க நடவடிக்கை எடுப்பேன் என நோர்வே அனுசரணைக் குழுவின் தலைவரும் அமைச்சருமான எரிக்சொல்ஹெய்முக்கு வழங்கிய [illegible] முறைக்குக் கொண்டு [illegible] விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**ஜனாதிபதியின் காய் நகர்த்தல்கள்**

தெற்கில் பேரினவாதிகளின் கூச்சல்கள் அடங்கியுள்ள நிலையில் ஜனாதிபதி படைத்தரப்பைத் தனது கைகளில் எடுத்து உடன் நடவடிக்கையை - காய்நகர்த்தலை - முன்னகர்த்த வேண்டிய இக்கட்டு அவருக்கு ஏற்பட்டுள்ளது.

பேச்சுக்கு நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் பேச்சு இடம்பெறுவதை உறுதிசெய்யக்கூடிய வகையில் நடவடிக்கைகளை ஜனாதிபதி எடுத்தேயாகவேண்டும். அப்போதுதான் திட்டமிட்டபடி பேச்சுக்கள் இடம்பெற வாய்ப்பு ஏற்படும்.

வாராந்த அரசியல் அலசல் இகோ

பேச்சுக்கு இன்னமும் ஒருவாரமேயுள்ளதால் ஜனாதிபதி எவ்வளவு விரைந்து நடவடிக்கை எடுத்து பேச்சுக்கான புறச்சூழலை உருவாக்குகின்றாரோ, அதில் தான் அவரின் தலைவிதியும் தங்கியுள்ளது.

அவர் அதிரடியாக நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமே பேச்சு இடம்பெறுவது உறுதி செய்யப்படுவதுடன் நாலாம் கட்ட ஈழப்போருக்கானவாசலும்திறக்கப்படமாட்டாது.

நாலாம் கட்ட ஈழப்போரா? இரண்டாம் கட்டப் பேச்சா? இதில் எது ஜனாதிபதியின் தெரிவு என்பது அவரின் காய்நகர்த்தலில்தான் தங்கியுள்ளது.

அவரின் காய் நகர்த்தல் பேச்சு ஆரம்பிக்க வழி சமைக்குமா? அல்லது நாலாம் கட்ட ஈழப் போர் வெடிக்க வழி ஏற்படுத்துமா? என்பதற்கான பதில் அடுத்த சில தினங்களில் கிட்டும்.

**குடாநாட்டில் நெருக்கடி**

இந்நிலையில் - குடாநாட்டில் தினமும் தொடரும் வன்முறைகள் நெருக்கடி நிலைமையைத் தோற்றுவித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை மிருசுவிலில் இராணுவ வாகனம் ஒன்றும் கியூடெக் நிறுவனத்தின் வாகனம் ஒன்றும் கிளைமோரில் சிக்கிச் சேதமடைந்தன.

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணக் கல்லூரியினரால் நடத்தப்படும்

# கிறிஸ்து உயிர்ப்பு விழா

" உயிரோடு இருப்பவரைக் கல்லறையில் தேடுவதேன்"
(இசை, நாடக நிகழ்வு)

இடம்: யாழ்ப்பாணக் கல்லூரி
காலம்: இன்று (16.04.2006) பி.ப. 4.30 மணி.

உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி.

(ச.48959) (39-45-15)


## மழலைகள் பூங்காவிற்கு புதிய கட்டடம் நிர்மாணம்

தென்மராட்சி,ஏப்.16

தாவளை-இயற்றாலை துர்க்கா மழலைகள் கல்விப் பூங்காவுக்கான புதிய கட்டடம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்தக் கட்டடத்துக்கான நிதி 'நிக்கொட்' திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்தது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்படி கட்டட நிர்மாணப்பணிகளை மேற்கொண்டிருந்தது.

தென்மராட்சி பிரதேச செயலர் செ.சிறீநிவாசன் அண்மையில் இந்தக் கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

(எ-122) (39)


## சான்றிதழ் வழங்குதல்

எமது நிறுவனத்தில் கணினிக் கற்கைநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்கள் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**C.B Computer Academy**
T.P No. 021-4590291 Station Road, Kondavil

## லிகிதர் (CLERK) தேவை

இலங்கை மாணவர்களுக்கு வெளிநாடுகளில் உயர் கல்வி பெற்றுக்கொடுக்கும் கல்வி நிறுவனமான FUTURE LINKS நிறுவனத்திற்கு இலங்கையில் தொழில்புரிவதற்கு லிகிதர் (CLERK) தேவை.

**தகைமைகள்:-** மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும். மற்றும் கணினித் துறையிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருத்தல் அவசியம்.

***(Degree Holders விரும்பத்தக்கது)***

தேர்ந்தெடுக்கப்படுவோருக்கு வெளிநாடுகளில் பயிற்சி வழங்கப்படும்.

நேர்முகப் பரீட்சைகள் இம்மாதம் 17ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை கீழ்க்காணும் முகவரியில் நடைபெறும்.

**FUTURE LINKS**
**45, Orabi Pasha Mawatha, 1st Division, Maradana, Colombo - 10.**

மேலதிக விவரங்களுக்கு 0777 356612 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# DANISH REFUGEE COUNCIL (DRC)

DRC Works at promoting lasting solutions to the problems of refugees and internally displaced persons throughout the world. In Sri Lanka, DRC supports reintegration of returned persons in the North and East and capacity building of local partner organizations. DRC's Head Office is located in Vavuniya, with district offices in Trincomalee and Kilinochchi.

## Vacancies

### Field Officer; Kilinochchi & Trincomalee

The Field officer will assist the Head of office/ District Coordinator in all aspects of DRC's rehabilitation programme. The Field Officers will have particular responsibility for activities such as training and awareness- raising on rights. Field officers will work closely with local partners, relevant Govemment departments and other stakeholders.

These positions will be based in Kilinochchi & Trincomalee respectively.

### Qualifications for both positions:

- University Degree (ideally law, politics or social studies) and 1 year relevant experience or A levels and 2 years relevant experience.
- Knowledge of government structures
- Confidence and ability to liaise at all levels
- Flexibility, enthusiasm and a creative approach
- Advocacy skills
- Training skills
- Good report writing skills
- Computer skills in MS Office and data management skills
- Ability to communicate in English

### Field Officer (protection)- Kilinochchi & Trincomalee

The Field Officer will assist the Head of Office/ District Coordinator in all aspects of DRCs rehabilitation programme. The Field Officers will have a particular responsibility for protection activities such as training and awareness-raising, Field Officers work closely with local partners, relevant Government departments and other stakeholders.

These positions will be based in kilinochchi and Trincomalee respectively

### Qualifications:

- University Degree (ideally law, politics or social studies) and I year relevant experience or A levels and 2years relevnt experience
- Knowledge of government structures
- Confidence and ability to liaise at all levels
- Flexibility, enthusiasm and a creative approach
- Advocacy skills
- Training skills
- Good report writing skills
- Computer skills in MS office and data ,management skills
- Ability to communicate in English

### Driver - Vavuniya & Kilinochchi

The driver will be responsible for the transport of personnel and goods safely and for the maintenace of the vehicles in good condition.

These positions will be based in kilinochchi and Trincomalee respectively

### Qualifications:

- Valid driving licensc for private cars, vans and light trucks.
- Fair knowledge of motor mechanism.
- Over 05 years driving experience.
- Pleasant personality.
- Ability to converse in English and Tamil.
- Willingness to travel out of station as and when required.

Please forward your curriculum vitae along with contact telephone No and names of three non - related referees to the following address within 07 days of this advertisement. The position applied for should be indicated on the top left hand corner of the envelope in applications sent by mail.

Head of Finance & Administration
Danish Refugee Council
No.77, 1st Floor
1st Cross Street
Vavuniya.
Fax No. 0242224009
E mail: recruitment @drc - lk.org.

(ச.48911) (39)


## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 16 - 03 - 1922



ஆண்டவன் அடியில் 17 - 03 - 2006

திருமதி

# மயில்வாகனம் அன்னம்மா

கடந்த 17.03.2006 அன்று சிவபதமடைந்த எமது அன்னையின் மறைவுச் செய்தியறிந்து நேரில்வந்து ஆறுதல் தந்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தோருக்கும் மற்றும் உதவிகள் பல புரிந்த நல் உள்ளங்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (16.04.2006) ஞாயிறு அவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கிணற்றடிப்புலம்,
நவிண்டில்,
கரணவாய் வடக்கு,
கரவெட்டி.

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(49447) (27-39-17-19)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 19 - 04 - 1924



மறைவு 17 - 03 - 2006

அமரர்

# செல்லையா இரத்தினசிங்கம்

(அப்பையா)

சீர்மேவும் சுதுமலையூர் பெற்றெடுத்த தவச்செல்வா!
சிறப்புடைய நன்மக்கள் போற்ற வாழ்ந்தீர்!
பார்போற்றும் நல்லறங்கள் பற்பல செய்தே
பண்பாளா! பசித்தோர் துயர்துடைத்தீர் நும் மனைவி
கார்பெற்ற கூந்தல் கனகாம்பிகை மக்கள்,
மருமக்கள், பேரர் உறவு மற்றுமுளோர் கலங்க
நீர்மோட்ச வாழ்வு தேடியே போனதேனோ?
நும் பிரிவால் துயருற்றே வருந்துகிறோம் நாமிங்கு.


சுதுமலை கிழக்கு,
மானிப்பாய்.

(48912) (39-17-19)

-குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினையில் பாகிஸ்தான், சீனா தலையிட்டால் இந்தியாவுக்கும் அது ஆபத்தாக அமையும்



## 'ஆனந்தவிகடன்' பேட்டியில் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்

பாகிஸ்தான், சீனா போன்றவை இலங்கைப் பிரச்சினையில் தலையிட்டால் அது இந்தியாவுக்கும் ஆபத்தாகவே அமையும் - இவ்வாறு விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழக வார இதழான ஆனந்தவிகடனுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே அன்ரன் பாலசிங்கம் இவ்வாறு கூறினார்.

அவர் தமது நேர்காணலில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் திருமணத்தை தாம் நடத்திவைத்தது குறித்தும் தெரிவித்திருந்தார். அந்த நிகழ்வு தொடர்பாக கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்ததாவது:-

அப்போது பிரபாகரனுடன் நானும் சென்னையில் இருந்தேன். இந்தியா கொடுக்கிற இராணுவப் பயிற்சியை முறையாகப் பயன்படுத்துவதிலும் சரியான திட்டமிடலோடு பணியாற்றுவதிலும் முழு மூச்சாக ஈடுபட்டிருந்தார் பிரபாகரன்.

இந்நிலையில், திருவான்மியூரில் நாங்கள் வசித்த வீட்டுக்கு மதி, வினோஜா, ஜெயா, லலிதா என்ற நான்கு இளம்பெண்கள் வந்தனர். யாழ்ப்பாணத்தில் தமிழ் மாணவர்களின் உரிமைகள் பறிக்கப்படுவதைக் கண்டித்து உண்ணாவிரதம் இருந்த இந்த நால்வரையும் சிங்கள இராணுவத்திடமிருந்து காப்பாற்றி சென்னைக்கு அனுப்பி வைத்திருந்தார்கள் போராளிகள்.

இந்தப் பெண்களுக்கு குடும்பமோ உறவுகளோ இல்லாத நிலையில், பிரபாகரன் இந்த நால்வரின் நலனிலும் அக்கறையுடன் இருந்தார். இந்தப் பெண்களின் வருகை, புலிகள் இயக்கத்துக்குள் ஒரு குட்டிப் புரட்சி ஏற்படக் காரணமாகும் என்று முதலில் நான் நினைக்கவில்லை.

எங்களுடைய அமைப்பைப் பொறுத்தவரை, யாழ்ப்பாண இந்து மரபில் பேணக்கூடிய ஒழுக்கக் கோட்பாடுகள் எல்லாமே கண்டிப்பாகவும் கறாராகவும் கடைப்பிடிக்கப்பட்டன. திருமணத்துக்கு முன் ஓர் ஆணும் பெண்ணும் தனித்தனியே பிரிந்துதான் வாழவேண்டும் என்ற கோட்பாட்டைப் போராளிகளும் பேணினார்கள். மக்களிடையே பரந்த ஆதரவைப் பெறவேண்டுமானால், இந்தச் சமூகப் பண்பாட்டு அம்சத்துக்கு முக்கியத்துவம் வழங்கவேண்டும் என்பதில் பிரபாகரன் கவனமாக இருந்தார்.

இந்த ஒழுக்கக் கோட்பாட்டில் எனக்கு உடன்பாடுதான். ஆனால், இந்த ஒழுக்க விதிகள் நெகிழ்ச்சித்தன்மை இல்லாமல் இறுக்கமாக இருப்பதில் உடன்பாடில்லை. பிடிவாதத்தால் பேணப்படும் கட்டுப்பாடுகளைக் கட்டாயத்தால் கடைப்பிடித்தால், இயற்கை தன் போக்கில் ஆண் - பெண் உறவைத் தோற்றுவிக்கும். எங்கள் தலைவரின் விஷயத்திலும் இதுதான் நடந்தது. வந்த நான்கு பெண்களில் மதி என்கிற மதிவதனியிடம் ஆழ்ந்த காதல் வயப்பட்டார் பிரபாகரன்.

மதியையும் பிரபாகரனையும் திருமண வாழ்க்கையில் இணைத்துவைக்கும் பொறுப்பு எனக்கும் அடேலுக்கும் இருந்தது. அமைப்பின் மூத்த உறுப்பினர்கள் இந்தக் காதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அவர்களிடம் தமிழ்ச் சமூகத்தில் காதலுக்கு உள்ள முக்கியத்துவத்தை எடுத்துப் பேசினேன். மிகுந்த தயக்கத்துக்குப் பிறகு ஒப்புக்கொண்டார்கள்.

1984இல் திருப்போரூர் கோயிலில் பிரபாகரனின் திருமணத்தை தமிழ் முறைப்படி நடத்திவைத்தோம். ஒரு காதல் திருமணமாக பிரபாகரனின் திருமணம் நடந்தது. புலிகளிடையே நல்ல பல மாற்றங்களைத் தோற்றுவித்தது. இன்றைக்குப் போராளிகளிடையே காதல் திருமணங்கள் சாதாரணமாக நிகழ்வதற்கு மதி - பிரபாகரன் காதல் திருமணம்கூட ஒரு காரணமாக இருக்கலாம்'' என்று தன் நெருங்கிய நண்பனின் காதல் கதையை விவரித்துச் சிரிக்கிறார்.

> தமிழீழ விடுதலைப் புலிகளின்
> மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்
> தமது லண்டன் இல்லத்தில் வைத்து தமிழகச்
> சஞ்சிகையான 'ஆனந்த விகடன்' வார இதழுக்கு
> சிறப்புச் செவ்வி ஒன்றை வழங்கினார்.
> டி.அருள் செழியனுக்கு அவர் வழங்கிய பேட்டியின்
> முதல் அத்தியாயம் கடந்தவாரம் வெளியாகியது.
> அதன் இரண்டாவது அத்தியாயம் இன்று
> வெளியாகின்றது.

பேச்சு தற்போதைய சூழல் பற்றி திரும்புகிறது. மிகுந்த நிதானத்துடனும் கவலையுடனும் பேசுகிறார் அன்ரன்.

**''இலங்கைப் பிரச்சினையில் இந்தியா விலகியிருப்பதால் பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகள் சில சுயநலங்களோடு இந்தப் பிரச்சினையில் தலையிடக்கூடும் என்று புலிகள் நினைக்கிறார்களாமே?''**

''ஆம்! எங்களைப் பொறுத்தவரையில், இதற்கான ஒரு புறச் சூழல் ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம். தற்போதைய இலங்கை அதிபர் மஹிந்த ராஜபக்ஷ, பாகிஸ்தானுடனும் சீனாவுடனும் நெருங்கிய தொடர்பு வைத்திருப்பவர். சில மாதங்களுக்கு முன் அவர் இந்தியா வந்து, இந்தப் பிரச்சினையில் இந்தியா தலையிட்டுத் தங்களுக்கு உதவவேண்டும் என்று கோரினார். ''நீங்கள் சமாதான வழியில் ஓர் அரசியல் தீர்வை முன்வைத்து இந்தப் பிரச்சினையைத் தீருங்கள். அதைத்தான் நாங்கள் விரும்புகிறோம்'' என்று கைவிரித்துவிட்டது இந்தியா.

தற்போது பாகிஸ்தானிடமும் சீனாவிடமும் ஆயுதங்களை வாங்கி சிங்கள இராணுவத்தைப் பலப்படுத்தி, புலிகளுக்கு எதிராக ஒரு யுத்தத்தைத் துவங்கத் திட்டமிட்டிருக்கிறது இலங்கை அரசு. அதற்காகத்தான் அதிபர் ராஜபக்ஷ போனவாரம் பாகிஸ்தான் சென்றார். அங்கே ஓர் இரகசிய இராணுவ ஒப்பந்தத்தை ஏற்படுத்தி, அதன்மூலம் ஆயுதங்களைப் பெற்று, சிறிலங்கா இராணுவத்தைப் பலப்படுத்தி புலிகளுக்கு எதிரான ஒரு யுத்தத் தயாரிப்பில் இறங்கியிருக்கிறார். இதேபோன்று அவர் அடுத்தமாதம் சீனாவுக்கும் செல்லவிருக்கிறார்.

பாகிஸ்தான், சீனா போன்றவை இந்தப் பிரச்சினையில் தலையிட்டால், இந்தியாவின் செல்வாக்கு நிரம்பிய இந்த பிராந்தியத்தின் அமைதிக்கும் ஸ்திரத்தன்மைக்கும் பங்கத்தை ஏற்படுத்தும் சூழ்நிலை உருவாகும். அது இந்தியாவுக்கும் ஆபத்தாக அமையும்.''

**''இன்னொரு பக்கம், இந்தியாவை மட்டுமே அழைத்துப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவேண்டும் என்று இலங்கையில் ஜே.வி.பி. அமைப்பு கூறிவருகிறதே?''**

அது வேறு கணக்கு! ஜே.வி.பி. ஒரு தீவிரவாத கம்யூனிஸ்ட் அமைப்பு. சிங்களப் பேரினவாதத்தை லட்சியமாகக் கொண்ட ஒரு தீவிரவாத இயக்கம். அவர்கள் எண்பத்து மூன்றுக்குப் பிறகு, ஈழப் பிரச்சினையில் இந்தியா தலையிடுவதைக் கண்டித்துப் பெரும் புரட்சிகளை நடத்தியவர்கள். இந்தியத் துருப்புகள் ஈழ மண்ணில் வந்து இறங்கியபோது அதை எதிர்த்து இலங்கையில் பெரும் கிளர்ச்சிகளை நடத்தியவர்கள். இவர்கள் தற்போது இலங்கைப் பிரச்சினையில் மீண்டும் இந்தியா தலையிடவேண்டும் என்று அழைக்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம் இந்தியா மீதான நன்மதிப்பல்ல. இந்தப் பிரச்சினையில் இந்தியா தலையிட்டு, இராணுவரீதியாக புலிகள் இயக்கத்தை அழிக்கவேண்டும் என்பதே அவர்களின் உள்ளார்ந்த விருப்பம்.

**'கிழக்கு இலங்கையிலுள்ள ஜிகாத் குழுக்கள் பற்றி தாங்கள் சமீபத்தில் கவலை தெரிவித்து, சில கருத்துகளை வெளியிட்டிருந்தீர்களே...''**



பிரபாகரன் திருமணத்தின் போது

'ஆம், கிழக்கு மாகாணத்தில் தற்போது ஜிகாத் என்ற பெயரில் இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றுக்குப் பாகிஸ்தான் நிதி உதவியும் ஆயுதப் பயிற்சியும் வழங்கியுள்ளது. இங்கிருந்து பல இளைஞர்கள் பாகிஸ்தான் சென்று இராணுவப் பயிற்சி பெற்றுத் திரும்பியிருக்கின்றார்கள்.

வடக்கு - கிழக்கு இலங்கையில் வசிக்கும் தமிழ் பேசும் முஸ்லிம்களும் தமிழர்களும் காலங்காலமாக சகோதரர்களாகப் பழகிவருகிறார்கள். இந்த நல்லுறவைக் கெடுத்து, எமக்குள் பிளவை ஏற்படுத்தும் நோக்கிலேயே இலங்கை புலனாய்வுத்துறை அதிகாரிகளும், பாகிஸ்தான் புலனாய்வுத்துறையினரும் இணைந்து சில இஸ்லாமிய அமைப்புகளைப் பயன்படுத்தி, இந்தப் புதிய சதி வேலையைச் செய்திருக்கிறார்கள். இது குறித்த அனைத்து விவரங்களையும் சிறிலங்கா அரசாங்கத்துக்கும் நோர்வே அரசாங்கத்துக்கும், சர்வதேச உலகத்துக்கும் நாங்கள் தெரிவித்திருக்கிறோம்.

இலங்கை அரசு இப்போது அவசர அவசரமாக, இஸ்லாமிய படைப் பிரிவு ஒன்றினைக் கிழக்கு இலங்கையில் அமைத்து, அதை வைத்து முஸ்லிம் மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கப் போவதாக அறிவித்துள்ளது. இதுவும் மிகவும் ஆபத்தான விஷயம். இஸ்லாமிய இளைஞர்களை அணிதிரட்டி, அவர்களின் கையில் ஆயுதங்களைக் கொடுத்து, அவர்களை விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் எதிராகத் திசை திருப்பும் நோக்கத்துடன்தான சிங்கள அரசு இந்தக் காரியத்தைச் செய்கிறது.'



**''விடுதலைப் புலிகள் மீதான பயங்கரவாதிகள் என்ற குற்றச்சாட்டுக்குத் தங்கள் பதில்தான் என்ன?''**

'எங்களது இயக்கம் நீண்ட வரலாறு கொண்ட ஒரு விடுதலை இயக்கம் பதினெட்டாயிரம் போராளிகள் தங்கள் உயிரைத் தியாகம் செய்து, ஆக்கிரமிப்பில் இருந்த எங்கள் தமிழ் மண்ணை மீட்டெடுத்து, இன்று அந்த நிலப்பரப்பில் ஒரு நிழல் அரசாங்கத்தை நடத்தி வருகின்றோம். ஆனால், இதன் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்பது எங்களுக்குத் தெரியும். எந்த போராட்டத்தின் வரலாறு, அதன் [illegible] புலிகள் செய்த மகத்தான தியாகங்கள் ஆகியவற்றைத் தமிழக மக்கள் தெரிந்து கொள்ளும் நாள்வரும். அப்போது எம்மைப் பற்றிய உண்மைகளை அவர்கள் அறிந்து கொள்வார்கள். எமக்கும் தமிழக மக்களுக்குமான தொப்புள் கொடி உறவை அறுக்க நினைப்பவர்கள் அப்போது காணாமல் போவார்கள்''

**'கருணா ஏன் இந்த இயக்கத்திலிருந்து வெளியேறி, உங்களுக்கு எதிராக மாறினார்''**

''கருணா எங்கள் அமைப்பில் ஒரு தளபதியாக இருந்தவர். ஆனால், கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அவரை பற்றி பல புகார்கள் வந்தன. குறிப்பாக, இயக்க நிதியில் பெரும் மோசடி செய்து, தனிப்பட்ட வங்கிகளில் காசுகளைப்போட்டு, சில ஊழல்களிலும் ஈடுபட்டு வந்திருக்கிறார். இயக்கத் தலைமைக்குத் தெரியாமல், வயது குறைவான பள்ளிச் சிறுவர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி கொடுத்து, அவர்களைத் தனக்குக் கீழான ஒரு சிறுவர் படையணியாக உருவாக்கினார். இவை போக, பெண் போராளிகளைப் பாலியல் ரீதியாகவும் துன்புறுத்தினார் இஸ்லாமிய மக்களுக்கு எதிராகச் சில படுகொலைகளையும் நிகழ்த்தினார் என்பது போன்ற பல உண்மைகள் வெளி வந்ததும், தலைவர் பிரபாகரன் இவரை விசாரணைக்காக வன்னிக்கு அழைத்தார். விசாரணைக்குப் போனால் தனது குற்றங்கள் அம்பலத்துக்கு வரும். இயக்க ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆளாக நேரிடும் என்ற பயத்தில், கருணா திடீரென்று இயக்கத்திலிருந்து விலகி, எங்களுக்கு எதிராக அறிக்கைகள் வெளியிட்டார். ஆனால், நாங்கள் உடனடியாக எங்கள் படையணிகளை அனுப்பி, அவரது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை மீட்டெடுத்தோம்.

அதைத் தொடர்ந்து, அவர் கொழும்புக்கு ஓடிப்போய் சிறிலங்கா இராணுவத்துடன் இணைந்து, தற்போது எமக்கு எதிராகச் செயற்பட்டு வருகிறார். இவருக்குக் கீழ் ஒரு சிறு குழு செயற்படுகிறது. இவர்கள் இப்போது எமது ஆதரவாளர்களைக் கொல்வது, எம்மை ஆதரித்து எழுதும் பத்திரிகையாளர்களைக் கொல்வது, கல்விமான்களைக் கொல்வது எனப் பல படுகொலைகளைச் செய்துகொண்டு இருக்கிறார்கள். ஆகவேதான், எங்கள் பேச்சுகளின் போது கூட, கருணா குழு என்ற துணைப் படைக் குழுவின் ஆயுதங்கள் களையப்படவேண்டும். அவர்களால் நிகழ்த்தப்படும் வன்செயல்கள் நிறுத்தப்படவேண்டும் என்ற நிபந்தனையை முன்வைத்தோம்''

**''நீங்கள் வெளிநாடுகளில் 'இறுதி யுத்தம்' என்ற பெயரில் அங்குள்ள தமிழர்களை மிரட்டிக் கட்டாய நிதி வசூலில் ஈடுபட்டு வருவதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளதே...''**

'இல்லவே இல்லை! ஆனால், ஈரத்துடன் இங்கே ஒன்றைப் பதிவுசெய்ய விரும்புகிறேன். உலக நாடுகளில் வசிக்கும் புலம்பெயர்ந்த தமிழர்கள்தான் ஈழத்திலுள்ள தமிழர்களின் ஜீவாதாரங்களுக்கு காலம் காலமாக உதவி வருகிறார்கள். பொருளாதார ரீதியாகத் தமிழீழம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வேலையின்மை, வறுமை, போர், அழிவு, இயற்கை இடர்பாடுகள்... இப்படிப் பல துயரங்களை எமது சமூகம் அங்கு சந்தித்து வருகிறது. எமது மக்களுக்கு சிறிலங்கா அரசாங்க உதவிகள் எதுவும் கிடைப்பதில்லை. எங்கள் மக்கள் தாமாக மனமுவந்து செய்யும் கொடையினால்தான் எமது இயக்கமும் இயக்க வேலைகளும் சமூக அமைப்புகளும் இயங்கிக்கொண்டு இருக்கின்றன. தாய் மண்ணுக்காக எம் தமிழ்ப் பிள்ளைகள் தருகிற நிதி இது என்கிறார் இந்தச் சந்திப்பின்போது சிக்கலான சில கேள்விகளுக்குப் பதிலளிக்க நாசூக்காக மறுத்தார் அன்ரன் பாலசிங்கம்.


''தம்பி அடுத்த முறை வரைக்குள்ள எங்களுடனேயே சாப்பிட வேணும்'' - ஈழத் தமிழில் கைகூப்பி வழியனுப்புகிறார் அடேல் பாலசிங்கம் என்கிற வெள்ளைக்காரத் தமிழச்சி! (33-23)

நன்றி : ஆனந்தவிகடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுயதொழில் பயிற்சி
## ஸ்கிரீன் மற்றும் துணிகளில் பிரிண்டிங் பயிற்சி
## வவுனியாவில்... அரிய சந்தர்ப்பம் !!

தைத்த ஆடைகள் மற்றும் துணிகளில் கோல்ட், கிலிட்டர், எம்போஸ், நோமல், பேர்ல், 4 கலர் போட்டோ மற்றும் விசிட்டிங்கார்ட், அழைப்பிதழ்கள், கலண்டர், ஸ்டிக்கர்கள் இன்னும் பல... குறைந்த முதலீட்டில் இலகு முறையில் 2 நாட்களில்....



தென்னிந்திய அர்ச்சனா அக்கடமியின் சான்றிதழ் உடன் வழங்கப்படும்.

காலம் : 2006 ஏப்ரல் 26, 27 (புதன், வியாழன்)
உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்

**Archanah Academy** / பிரவீணண் என்ரபிரைசஸ்
35 / 1, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.

T.P. No. 024 4589707, 0777 767827

GL Media


## திருநெல்வேலியில் இரத்ததானம்

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் 'இரத்ததானம்' வழங்கும் நிகழ்வொன்று திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தின் மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று காலை 9 மணிமுதல் பிற்பகல் 2மணிவரை நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பலரையும் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்குமாறு அழைப்பு விடுத்துள்ள இந்து வாலிபர் சங்கத்தினர் இரத்ததானம் செய்பவர்களுக்கு ஞாபகார்த்தமாக இரத்த வங்கியின் தொப்பியொன்றையும் வழங்கவுள்ளனர். (ஐ)

## பெயர்ப்பலகை அன்பளிப்பு

வரணி குடமியன் அரசினர் பாடசாலைக்கு சிமெந்தினாலான பெயர்ப்பலகை ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

பாடசாலையின் நலன் விரும்பியும், குடமியன் வரணியைச் சேர்ந்தவருமாகிய த.கணேசகுகநாதன் என்பவர் தமது அன்பளிப்பாக இதனை வடிவமைத்து வழங்கியுள்ளார்.

(எ-122)(23)

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
06 - 10 - 1946

உதிர்வு
16 - 04 - 1997



### அமரர் கனகன் தங்கராசா

*(இ.போ.ச நடத்துநர் , பருத்தித்துறை)*

பண்பின் உறைவிடமாய் பாசத்தின் சிகரமாய் வாழ்ந்த
எம் குல விளக்கே! நீங்கள் மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு மறையாது.

வல்லை வீதி,
தொண்டைமானாறு.

*உங்கள் நினைவுடன் வாழும்:*
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
மாமன், மாமி, பேரப்பிள்ளைகள்.

(49454)(28-32-16-17)

## CARITAS - HUDEC
## கரித்தாஸ் - கியூடெக்

தலைவர் - அதி.வண.தோமஸ் சவுந்தரநாயகம், யாழ்.கத்தோலிக்க ஆயர்
Chairman - Rt.Rev.Dr.Thomas Savundranayagam, Catholic Bishop of Jaffna

### வடக்கில் பணியாற்றும் தமது மனிதாபிமானப் பணியாளர்களின் பாதுகாப்பை வேண்டி கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் தனது அலுவலகப் பணிகளைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது

சித்திரை மாதம் 10ஆம் திகதி நடந்த கிளைமோர் தாக்குதலில் தமது இரு நிர்வாகப் பணியாளர்கள் கொல்லப்பட்ட சோக சம்பவத்தை அடுத்து கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் தனது அலுவலகப் பணிகளைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களின் அடிப்படைக் கோட்பாடுகளின் பிரகாரமும் பாதுகாப்பு அளவீடுகளின் படியும் தமது எதிர்ப்பினை வெளிக்காட்டும் முகமாகவும் பலியானவர்களின் குடும்பங்களுடன் தமது சோகத்தைப் பகிர்ந்துகொள்ளும் முகமாகவும் சித்திரை 19ஆம் திகதி பிற்பகல் வரையும் சோக தினங்களாகப் பிரகடனம் செய்கிறது.

கரித்தாஸ் - கியூடெக் பணிப்பாளர் அருட்பணி.கி.ஜோ.ஜெயக்குமார் அடிகளார் "எமது சிரேஷ்ட நிர்வாகப் பணியாளர்கள் கொல்லப்பட்ட நிகழ்வை வன்மையாகக் கண்டிக்கின்றோம். மேலும் எமது பணியாளர்களை இப்படியான ஆபுத்தான சூழ்நிலைகளில் களவேலைகளில் ஈடுபட வைப்பது பற்றியும் நாம் ஆழமாகச் சிந்திக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது" என்று கூறுகிறார்.

திரு.சண்முகநாதன் கந்தாபத்மநாபன் (வயது 55) - சிறுவர் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர், திரு.செல்வேந்திரா பிரதீப்குமார் (வயது 29) - சமூக அபிவிருத்திக் குழுத் தலைவர் என்ற இருவரும் வடமராட்சி கிழக்கில் நிகழ்ச்சித்திட்ட அபிவிருத்திக் கூட்டமொன்றில் கலந்துகொண்டுவிட்டு நிறுவனத்தின் அடையாளக் கொடியுடனான வாகனத்தில் திரும்பும்வேளை A9 பாதையிலுள்ள, மிருசுவில் என்ற இடத்தில் கிளைமோர் தாக்குதலில் சிக்குண்டு மரணமடைந்தனர். இதில் வாகனச்சாரதி தலையில் ஏற்பட்ட பலத்த காயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு புதன்கிழமை மேலதிக சிகிச்சைக்காக கொழும்பிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். இன்னுமொரு பணியாளர் சிறு காயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுத் திரும்பியுள்ளார். கரித்தாஸ் - கியூடெக் வாகனம் இராணுவ வாகனமொன்றை நேர் எதிராகக் கடக்க முயன்றவேளை பாதையோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஈருளியில் பொருத்தப்பட்டிருந்த குண்டுவெடித்ததினால் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. இதில் பாதிக்கப்பட்ட பணியாளர்கள் அனைவரும் சுனாமி மீள்நிர்மாணப் பணிகளில் நிறுவனத்தின் சார்பில் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் ஆவார்.

கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்திற்கு அவர்களது வாகனம் நேரடி இலக்கு அல்ல என தெரிவிக்கப்பட்டாலும் நிறுவனமானது சாதாரண குடிமக்களின் இழப்பை ஏற்றுக்கொள்ளமுடியாதென்றும், இது சம்பந்தமான சகல தரப்பினரையும் மனிதாபிமானப் பணியாளர்களையும் சாதாரண குடிமக்களையும் பாதுகாப்பதற்கான கடமைப்பாட்டிற்கு மதிப்பளிக்குமாறும் வேண்டி நிற்கின்றது.

மக்களுக்கு தமது கடமைகளைச் செய்வதற்கு கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தின் நடமாட்டமானது பாதுகாப்புக் காரணங்களினால் மட்டுப்படுத்தப்பட்டால் அக்கடமைகளைச் செய்வதில் தடங்கல் ஏற்படும் என்பதை மிகவும் வலியுறுத்திக் கூறுகின்றது.

இயக்குநர்,
மனித முன்னேற்ற நடுநிலையம்,
கரித்தாஸ் - யாழ்ப்பாணம், சிறிலங்கா.

(சி/48965)(32-16-17)


## இன்று இடம்பெறும்
## பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் இறுவட்டு அறிமுகவிழா
சிறப்புற வாழ்த்துகின்றோம்

# சேகர் மோட்டோஸ்
## தங்கள் சேவையில் 31 ஆவது வருடம்

புதிய காட்சியறை புதிய முகவரியில்
277, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
ரயில் கடவைக்கு அருகில் சகல வாகனங்களுக்குமுரிய

1. பில்ரர் வகைகள்
2. மின்சார உபகரணங்கள்
3. பீடிவ் வகைகள்
4. வாகன அவசரப் பொருள்கள்
5. சகல வகையான கட்டர்களும் பூட்டுத் திருத்த வேலைகளும்
6. எங்களிடம் இல்லாத உதிரிப்பாகங்கள் ஓடருக்கு எடுத்துக் கொடுக்கப்படும்.

"எங்கள் சேவை தங்கள் திருப்தியே."

(சி.48935) (39-32-17-16)


## CARITAS - HUDEC
## கரித்தாஸ் - கியூடெக்

### Caritas - Hudec temporarily closes offices and calls for safety for all humanitarian personnel operating in the North - East

Following the killing of two of its staff members in a Claymore mine explosion on April 10th, Caritas - Hudec announces the temporary closure of its offices.

As a sign of protest against the breach of one of the basic principles of international humanitarian law and as a security measure, the organization has decided to extend its mourning period in solidarity with the families of the victims until Wednesday the 19th evening.

"We severely condemn the incident that killed two of our senior staff and have decided to reduce our activities. Given the escalating violence in the last few days, we need to review our field operations to avoid putting more of our staff at risk", says Rev. Fr C.G.Jeyakumar, Director of Caritas - Hudec.

Mr.Shanmugarathan Pathmanathan (55), Programme Manager of the Children's Programme, and Chelvendra Pradeepkumar (29), Community Development Team Leader, both died in the Claymore mine explosion on the A9 road in Mirusuvil, on their way back from Vadamarachchi East where they had attended a meeting with the PDS. The driver of the car was severely injured in the head, immediately hospitalized in Jaffna and transferred to Colombo on Wednesday. The third passenger was only slightly injured and has been released from the hospital. The Caritas - Hudec vehicle was crossing an army pickup when the mine, attached to a bicycle on the side of the road, was detonated. All victims were involved in the organization's post - tsunami rehabilitation efforts.

While Caritas - Hudec was informed that its vehicle was not the direct target of the attack it cannot accept any civilian loss and calls for all parties to respect their commitment to safeguarding the lives of humanitarian personnel and civilians in general.

Caritas - Hudec stresses that when its mobility is hampered for security reasons it is very difficult if not merely impossible to deliver its commitments towards the people or for that matter to the government.

**Director,**
**Caritas - Hudec,**
**Jaffna.**

(C/48964)(32)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் குறைந்த கட்டணத்தில் சர்வதேச நாடுகளுக்கான பொதிகள் (PARCEL) சேவை

பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், இத்தாலி, நோர்வே, டென்மார்க், லண்டன், கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து

வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர், நண்பர்களுக்கு அனுப்பவேண்டிய உணவு, உடை, அலங்காரப் பொருள்கள், வீடியோ நாடாக்கள், கடிதங்கள் ஆகியவற்றை நாமே பொதிசெய்து அனுப்புகின்றோம். இதற்காக சிறிய கட்டணம் அறவிடப்படும். ஒரு பொதியின் நிறை இரண்டு கிலோவுக்கு மேல் இருத்தல் வேண்டும்.

ஒரு கிலோவுக்குரிய கட்டணம் 1400/- மட்டும்

ஐந்து நாள்களில் பொதிகள் ஒப்படைக்கப்படும்.

*விசேட விலைக் கழிவு*

5 கிலோவுக்கு மேல் அனுப்பும் பொதிகளுக்கு கட்டணம்
ஒரு கிலோவுக்கு லண்டன் 450/-
சுவிஸ் 600/-

**RAINBOW TRAVELS & TOURS**
32-1/ 2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3237, 0777 328219.
(அபிநயா நகை மாடத்துக்கு மேல்) (F/48767)


### திருக்குளிர்த்தி விழா

கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த திருக்குளிர்த்தி பெருவிழா நாளை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு இன்று முற்பகல் 9 மணிக்கு அம்பாளின் கிராம தரிசனம் இடம்பெறும்.(3-72)

### உதைபந்தாட்டம்

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 17, 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டி நாளை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது என யாழ். மாவட்ட பாடசாலை விளையாட்டுக் குழு செயலாளர் க.குமாரசாமி தெரிவித்துள்ளார். (3-190)




எல்லா சிறப்புச் சந்தைகளிலும் நாடெங்கும் மருந்தகங்களிலும் விற்பனையாகின்றது.

Sole Agents:
Suri Trading Company (Pvt) Ltd
Hotline: 0114810 251

## ஈராண்டு நினைவலைகளில்...!

| தவப்பேறு | | சிவப்பேறு |
|---|---|---|
| 24 - 04 - 1953 | | 08 - 04 - 2004 |



அமரர்

## வேலுப்பிள்ளை இராஜரட்ணம்

**(செல்வம்)**

(உரிமையாளர்:- **R.B.** ஆசனப்பதிவகம், **R.B.** கொம்னிக்கேசன், அன்னை வேளாங்கன்னி களஞ்சியம், அனித்தா ரான்ஸ்போட்)

உதிரத்தால் கண்ணீரை
வடிக்கின்றோம் உயிர் நண்பா!
உன் நிழலைக் காணாது
தவிக்கின்றோம் எம் தோழா..!
காலனவன் கண்களிலே
கருணையின்றிப் போனதனால்
ஆதரவின்றியே அழுகின்றோம் நாம்...!

எப்பொழுதும் புன்னகைப்பாய்
எரிமலைதான் கொள்கைவீரா!
இப்பொழுது எமையெல்லாம்
இங்கேயே விட்டு விட்டு
இமைப் பொழுதில் எங்கு சென்றாய் தோழா
ஈராண்டு சென்றாலும் - உன் நேச நினைவுகளெம்
நெஞ்சில் நிலைத்திருக்கும்.

**DHANA'S TOURS & TRAVELS**
**NO.173, WASALA ROAD,**
**COLOMBO-13**
**T.P:077-7724055, 011- 4615609.**

உரிமையாளரும்,
சாரதிகளும்.

(49479)(51-)

## University of London Jaffna Branch


External Programme

UNIVAC, No. 213, Kasthuriar Road, Jaffna.
Bachelor and Master Degree start on 25-04-06

## வெளிவந்துவிட்டது..!!!

### ஏப்ரல் மாத இதழ்

தமிழ் சஞ்சிகை உலகில் புதிய பிரவேசம்




இலங்கையின் ஒரேயொரு மாதாந்த தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை

## தமிழ் PCTIMES

தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை

2006 மார்ச் முதல் மாதாந்தம் வெளிவருகிறது.

**இலங்கையின் சகல பாகங்களிலும் கிடைக்கும் !**

புதிய

- தகவல்கள்
- செய்திகள்
- மென்பொருள் (SoftWare)
- வன்பொருள் (HardWare)
- செய்முறைகள்
- செயற்பாடுகள்

இன்னும் பல சுவையான அம்சங்களுடன்...

விஜய் பதிப்பகத்தாரின் மற்றுமோர் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
04
04
1937



மறைவு
01
04
2006

கடந்த 01.04.2006 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் சின்னத்தம்பி தங்கமயில்

மனிதர்குல மாணிக்கமாய் வாழ்ந்தீர்!
மாந்தருள் திலகமாய் மனதிலே நிலைத்திருந்தீர்!
புனிதராய் வாழ்ந்து புண்ணியர் பொற்கழல் சேர்ந்தீர்
அன்புக்கோர் அணிகலனாய் ஆதரவுகாட்டி
பண்புக்கோர் இருப்பிடமாய் பாசம் காட்டி
எங்களுடன் வாழ்ந்து இன்னுயிர் பிரிந்து
பூதவுடல் மறைந்தாலும் புகழுடம்பு மறையாதே!
இப்போதும் எம்முடனே இருப்பது போலவன்றோ
ஈண்டு எம்மனதில் நீர் ஒளிவிளக்காய்ப் பிரகாசிக்கின்றீர்
எந்நாளும் உம் நினைவுடனே இப்பூவுலகில் வாழ்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிரியை இன்று 16.04.2006 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

கிராமக் கோட்டடி, பருத்தித்துறை.

(49199)(51-)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லறை திறந்தது; காரிருள் மறைந்தது

இன்று உலகெங்கிலும் வாழும் கிறிஸ்தவ மக்கள் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு விழாவை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்கள். 'கல்லறை திறந்தது காரிருள் மறைந்தது. கிறிஸ்து உயிர்த்தார் அல்லேலூயா' என்று மகிழ்வின் கீதம் இசைத்து ஆரவாரிக்கிறார்கள்.



கிறிஸ்துவுடைய உயிர்ப்பிலேதான் கிறிஸ்தவ விசுவாசமே கட்டி எழுப்பப்பட்டுள்ளது. ஆண்டவர் இயேசுவுடைய இந்த உயிர்ப்பே கத்தோலிக்க திருச்சபைக்கு உயிர்வாழுகின்ற கடவுளை தலைவராகத் தந்து திருச்சபையை என்றும் உயிருள்ள ஒரு திருச்சபையாக மாற்றி அமைத்துள்ளது. புனித பவுல் கூறுவது போல 'கிறிஸ்து உயிர்க்கவில்லை என்றால் எங்கள் போதனை பொருளற்றது உங்கள் விசுவாசம் வீணானது' என்றாகிப் போயிருக்கும். கிறிஸ்துவின் உயிர்ப்பிலேதான் திருச்சபை புதிதாக கட்டியெழுப்பப்பட்டது. திருச்சபை புத்துயிர் பெற்றது. உயிர் வாழும் கடவுளிலே உயிர்பெற்று திருச்சபை என்றும் உயிர்வாழும் திருச்சபையானது அனைத்தும் அவரிலேயே அமைக்கப்பெற்று அர்த்தம் பெற வழி பிறந்தது.

ஆண்டவர் இயேசுவுடைய பிறப்பு விழாவை வெகுசிறப்பாகக் கொண்டாடுகின்ற வழக்கமே பொதுவாக எமது மக்கள் மத்தியில் இருந்து வருகின்றது. புதுவருடத்தோடு கிறிஸ்மஸ் விழா இணைந்து வருகின்றபடியால் கிறிஸ்மஸ் விழாவிற்கு அதி உயர் முககியம் கொடுக்கின்ற வழக்கம் எம்மிடையே தோன்றியிருக்கலாம். இருப்பினும் ஆண்டவர் இயேசுவின் பிறப்பு விழாவைக் காட்டிலும் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு விழா மிக முக்கியம் வாய்ந்த விழா என்பதை நாம தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும்.

ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு சரித்திர ஏடுகளில் ஒரு காலகட்டத்தில் நடந்து முடிந்துவிட்ட ஒரு நிகழ்வு அல்ல. அது ஒரு அழிவின் பயனாக ஒரு இறப்பின் விளைவாக நிகழ்ந்த ஒரு உன்னத நிகழ்வு. அது ஒரு முடிவற்ற நிகழ்வு. ஒரு தொடர் நிகழ்வு. எமது வாழ்வில் இடையறாத் தொடராக என்றும் நிகழ்ந்து கொண்டு இருக்கவேண்டிய ஒரு நிகழ்வு.

கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால் ஒழிய அது அப்படியே இருக்கும். மடிந்தால் தான் பயன்கொடுக்கும். என்பதற்கு ஒப்ப இயேசு மடிந்தமையால் உயிர்பெற்றெழுந்து ஒரு உன்னத நிலையை அடைந்தார். அந்த இறப்பிலேதான் உயிர்ப்பு இருந்தது. அந்த அழிவிலேதான் ஆக்கம் இருந்தது. அந்த இருளிலேதான் ஒளியிருந்தது. அழிவின் பயனாக நிகழ்ந்த இந்த உயிர்ப்பு ஒரு யுகத்தின் ஆரம்பமானது. மரணத்தோடு இவர் வாழ்வு முடிந்துபோய்விடும் என்று எண்ணியிருந்த பலரின் எண்ணங்களிற்கு முற்றுப்புள்ளி வைத்தது. அழிவின் வழியில் நிகழ்ந்த இந்த நிகழ்வு ஒரு முதல் நிகழ்வு. இந்த நிகழ்வின் வழி பல உயிர்ப்பின் அனுபவங்கள் நடைபெறவேண்டும். அப்போதுதான் இந்த உயிர்ப்பின் விழா எல்லா விழாக்களையும் விட முக்கியமான ஒரு விழாவாக அழிவின் வழியாக ஆக்கம்பெற்ற ஒரு விழாவாக சரித்திர ஏடுகளில் நிகழ்ந்து முடிந்த

## இன்று உயிர்ப்பு ஞாயிறு

ஒரு வெறும் விழாவாக இல்லாமல் ஆழ்ந்த அர்த்தமும் நீண்ட ஒரு விளக்கமும் கொண்ட ஒரு விழாவாக அமையமுடியும்.

இந்த உயிர்ப்பின் அனுபவம் எமது அன்றாட வாழ்வனுபவத்தில் தொடர்ச்சியாக என்றும் நடைபெற்றுக்கொண்டே இருக்கவேண்டும். இருளில் இருந்து ஒழிக்கும். தீமையில் இருந்து நன்மைக்கும் அழிவில் இருந்து ஆக்கத்திற்கும் தோல்வியில் இருந்து வெற்றிக்கும் சாவில் இருந்து வாழ்விற்கும் என்றும் எம்மை அழைத்துக்கொண்டே இருக்கவேண்டும். ஒவ்வொரு தடவையும் இந்த அழைபபை நாம் ஏற்று அதனை நிறைவு செய்கின்றபோது இந்த உயிர்ப்பு ஒரு தொடர் நிகழ்வாக எமது வாழ்வில் நடைபெற நாம் அனுமதிக்கிறோம்.

**அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை**

தமிழ் மக்கள் வாழ்விலும் அனுபவங்களிலும் இந்த உயிர்ப்பு ஆழ்ந்த அர்த்தத்தையும் நீண்ட விளக்கத்தையும் கொண்டதாகவே இருக்கவேண்டும். தமிழ் மக்கள் அனைவரின் அமைதியான சமாதானத்தை நோக்கிய பாதைக்கான முன்னெடுப்புக்களில் தோல்வியடைகின்றபோதெல்லாம் வெற்றியை நோக்கி நகருகின்றபோது நகர முயற்சிக்கின்றபோது இந்த உயிர்ப்பு நடைபெறுகின்றது. பேச்சுக்களில் தோல்வி நிலை கண்டு பின்னர் முழுமூச்சோடு வெற்றியை நோக்கி அடியெடுத்து வைக்கும்போது இந்த உயிர்ப்பு அர்த்தம் பெறுகின்றது. மீண்டும் ஒரு தடவை யுத்தம் ஏற்படுமா என ஏங்கி அதனை வென்று சமாதான நிலையொன்றைத் தோற்றுவிக்கும்போது இந்த உயிர்ப்பு ஆழம்பெறுகின்றது.

கல்லறை திறந்திட காரிருள் மறைந்திட கிறிஸ்து உயிர்த்தார் அல்லேலூயா என்ற கீதமும் இயேசுவின் உயிர்ப்பின் ஒளியும் எம் மனமேல் வீசப்படுவதால் நாமும் உயிர்ப்பின் ஒளியில் வாழ இறைவரம் வேண்டுவோம்.

# சித்திரைப் புத்தாண்டில் உங்கள் பலன் எப்படி?

## மிதுனம்

மிருகசீரிடம் 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3

**பெருமாளின் அனுக்கிரகம் பெற்று வாழ்ந்திடும் மிதுனராசி அன்பர்களே!**

புத்தாண்டில் செயல்களில் புதிய உற்சாகம் ஏற்படும். மனதில் ஆன்மீக நம்பிக்கை வளர்ச்சியடைந்து தகுந்த துணையாக நின்று உங்களை வழிநடத்தும். எதிர்பார்த்த பணவரவு புரட்டாதி மாதம் குருபெயர்ச்சிக்கு பின்னர் கணிசமாக கிடைக்கும்.வீடு, மனை வகையில் தேவைப்படும் அபிவிருத்தி மாற்றங்களை ராகு, கேது, குருபெயர்ச்சிக்குப் பின் நடத்துவதால் மனதுக்கு இரட்டிப்பு சந்தோஷம் உருவாகும். தாயின் விருப்பத்திற்கேற்ப தேவைகளை பெற்றுத்தருவீர்கள். புத்திரர்கள் பெற்றோரின் எண்ணங்களுக்கேற்ப நல்வழியில் செயல்படுவார்கள். குலதெய்வ அருளும், பூர்வபுண்ணிய நற்பலன்களும் துணை நிற்கும். கடன், பிணி சார்ந்த தொந்தரவு உள்ளவர்களுக்கு படிப்படியாக நன்னிலை ஏற்படும். கணவன், மனைவி குடும்ப ஒற்றுமை சிறப்பு பெற தம்பதிகள் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை அதிகரித்துக் கொள்வது நலம். தந்தைவழி உறவினர்கள் உதவும் மனப்பான்மையுடன் செயல்படுவார்கள். சுக சௌகரிய வாழ்க்கை வசதி அதிகரிக்கும். தொழில், உத்தியோகம், வியாபாரம் போன்றவற்றில் சிலருக்கு இருக்கும் மந்தமான நிலை படிப்படியாக மாறி நல்ல முன்னேற்றம் உண்டாகும். நண்பர்களிடம் பணம் கொடுக்கல் வாங்கல் போன்றவற்றில் தகுதிக்கு மீறிய எதையும் பின்பற்ற வேண்டாம். மூத்த சகோதரர்கள், உங்களின் செயல்பாடுகளை வாழ்த்தும் நன்னிலை உண்டாகும்.

வெளியூர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு எதிர்பார்ப்பில் உள்ளவர்களுக்கு ராகு, கேது பெயர்ச்சிக்குப் பின் அனுகூலமான நற்பலன்கள் உண்டாகும். திருமண வாய்ப்பு, புத்திரப்பேறு எதிர்பார்ப்பில் உள்ளவர்கள் நற்பலன் பெறுவார்கள்.

கல்வித்துறை சார்ந்த பயிற்சி நிறுவனம் நடத்துபவர்கள், தங்க நகை உற்பத்தி, நவரத்தினக் கற்கள் மற்றும் அணிகலன்கள், நறுமணப் பொருள் உற்பத்தி, இனிப்பு பண்டங்கள் உற்பத்தி செய்பவர்கள் அபிவிருத்தி பலன்கள் பெறுவார்கள்.

அரசு மற்றும் தனியார் அலுவலக பணியாளர்கள் தங்களின் பணி இலக்கை எளிதாக்கி செயல்படுத்த புதிய யுக்திகளை கடைப்பிடிப்பார்கள். ஆசிரியப்பணி, கட்டுமானப் பணியில் உள்ளோர் அதிக வருமானம் பெறுவார்கள். பண வருமானத்தை அவசியமான தேவைகளுக்கு செலவழிப்பீர்கள். குடும்ப உறுப்பினர்கள் ஒற்றுமையுடன் செயல்புரிவார்கள். ஆன்மீகப்பணியில் ஆர்வமும், செயல்படும் சூழ்நிலைகளும் உண்டாகும். நண்பர்கள் அனுசரணையாக நடந்து கொள்வார்கள். சக பணியாளர்கள் பணி சார்ந்த உதவிகளை மனமுவந்து செய்து தருவார்கள்.

**பெண்கள்:** அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரியும் பெண்கள் தங்கள் பணி சிறப்பு பெறுவதற்கான புதிய நடைமுறைகளைப் பின்பற்றுவார்கள். சக பணியாளர்கள், வழிகாட்டும் கருத்துக்களில் உள்ள நன்மைகளை அறிந்து செயல்படுத்துவதால் மேன்மை உண்டு. குடும்ப நிர்வாகம் கவனிக்கும் பெண்கள், பொருளாதார வரவுகளுக்கு ஏற்ற வகையில் செயல்படுவதால் குடும்பத்தில் நற்பெயர் பெறுவார்கள். உறவினர்களிடம் கருத்து ஒற்றுமையும் உதவி மனப்பான்மையும் அதிகரிக்கும். திருமணவாய்ப்பு, புத்திரப்பேறு எதிர்பார்ப்பில் உள்ளவர்களுக்கு அனுகூலம் தரும் பலன் உருவாகும். சுயதொழில் மற்றும் கூட்டுத்தொழில் நடத்துபவர்கள் வியாபார வளர்ச்சிக்கு உறுதுணை புரியும் வழி வகைகளை கண்டறிவார்கள். கணவன், மனைவி ஒற்றுமை சீராக இருக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு.

**மாணவர்கள்:** கலை, அறிவியல், தொழில்நுட்ப அறிவியல், ஆசிரியர் பயிற்சி, நிதிநிர்வாகம், பங்கு வர்த்தகம், சந்தையியல், கண் மருத்துவம், கணிதத்துறை ஆகியவற்றில் பயிற்சி பெறும் மாணவர்கள் தங்கள் திறமையால் நன்கு படித்து கூடுதல் தர தேர்ச்சி பெறுவார்கள். சட்டம், நீதி நிர்வாகம், ஆன்மீகம் தொடர்பான ஆராய்ச்சி படிப்பு, கணனி, அரச நிர்வாகப் பணிகள் போன்றவற்றில் பயிற்சி பெறும் மாணவர்கள் சொந்த முயற்சியாலும், தெய்வ பலத்தாலும் பிறர் மதிக்கும் வாழ்வுநிலை கிடைக்கப்பெறுவார்கள். ஆரம்ப, உயர்நிலை மாணவர்கள் சுமாரான நிலை தென்படுவதால் முயற்சி திருவினையாக்கும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். சக மாணவர்களுடன் சுமூக நட்புறவு நிலவும். தந்தை, மகன் உறவுநிலை பிறர் பாராட்டும்படியாக அமையும். சுற்றுலாப் பயண வாய்ப்புக் கிடைக்கும்.

**அரசியல்வாதிகள்:** உங்கள் நற்பெயருக்கு களங்கம் கற்பித்தவர்கள், மனமாற்றம் பெறும் வகையில் ஆதரவாளர் கூட்டம் அதிகரிக்கும். மக்களுக்கான திட்டங்களை கோரிக்கையாக, அதிகாரிகளின் கவனத்திற்கு சரியான நேரத்தில் கொண்டுவருவீர்கள். அதற்கான நற்பலன்களை படிப்படியாக எதிர்பார்க்கலாம். அரசியலுடன் பிறவகை தொழில் வாய்ப்புப் பெற்றவர்கள் சிரமங்கள் குறைந்து படிப்படியாக முன்னேற்றநிலை காண்பார்கள். தந்தைவழி உறவினர்கள் அனுகூலமாக நடந்துகொள்வார்கள். குடும்பத்தவர் தவிர பிறரது சொத்து தகராறுகளில் ஈடுபடுவதை தவிர்ப்பதால் நன்மை உண்டு.

**பரிகாரம்:** சனி பகவானுக்கு உடைத்த தேங்காயில் எள்ளும் நல்லெண்ணெயும் கலந்து தீபமேற்றி வழிபடுவதால் வளர்ச்சி தரும் வாழ்க்கை முறை அமையும்.

## கடகம்

புனர்பூசம் 2, பூரம், ஆயிலியம்

**லட்சுமி கடாட்சம் பெற்ற கடகராசி அன்பர்களே!**

புத்தாண்டில் ஜென்மச்சனியின் ஆதிக்கம் குறைந்து செயல்களில் கூடுதல் சுறுசுறுப்பு உண்டாகும். புதிய நண்பர்கள் கிடைக்கப்பெற்று, வாழ்வில் வளம் பெறும் சூழ்நிலைகளை உருவாக்கும். பேசும் வார்த்தைகளில் நியாயமும், ஆன்மீகத் தன்மையும் அதிகம் நிறைந்திருக்கும். குடும்பத்தில் உறவினர்களின் வருகையால் முன்னேற்றம் தரும் மாற்றங்கள் உருவாகும். நடைமுறை வாழ்க்கையில் உங்களிடம் விலகிச் சென்றவர் கூட விரும்பிவருவார்கள். மனதில் தைரியம் கூடுதலாகி செயற்கரிய சாதனை புரிவீர்கள். பண வருமானம் அதிகரிக்கும். இளைய சகோதரர்கள் வாழ்வில் வளம் பெற உதவுவீர்கள். வீடு, மனை போன்றவற்றில் மனதுக்கு விரும்பிய மாற்றங்களும் புதிய இடத்தில் குடிபெயர்வதற்கான சூழ்நிலைகளும் உருவாகலாம். தாயின் அன்பும், ஆசியும் பூரணமாக உண்டு. குலதெய்வ வழிபாடும் அருள் பெறுதலும் இனிதாக நிறைவேறும். புத்திரர்கள் நல்லவிதமாக நடந்து பெற்றோருக்கு நற்பெயர் பெற்றுத்தருவார்கள்.பூர்வ சொத்துக்களில் வருமானம் பெறுபவர்களுக்கு கூடுதல் வரவு கிடைக்கும். உடல்நலத்தில் தகுந்த கவனம் வேண்டும்.

கணவன், மனைவி ஒற்றுமையில் சிறு சறுக்கல் ஏற்பட்டாலும், அது சிறப்புடன் திகழ பூர்வஜென்ம நற்பலன்கள் துணையாக இருக்கும். தந்தைவழி உறவினர்களிடம் இருந்த கருத்து வேறுபாடுகள் குறையும். சுக வாழ்க்கை வசதிகள் மனதுக்கு ஏற்றபடி இனிதாக மாற்றம் பெறும். தொழில், உத்தியோகம், வியாபாரம் போன்றவற்றில் உங் களின் கவனம் சிறந்துவிளங்கி நற்பெயரை தக்கவைக்கும். மூத்த சகோதரர்கள் உங்கள்மீது கூடுதல் நம்பிக்கை வைப்பதற்கான இனிய சூழ்நிலைகளை உண்டாக்குவீர்கள். ஆதாய வருமானங்களை ஆடம்பர செலவினங்களுக்கு பயன்படுத்தாமல் வாழ்வதால் நன்மை உண்டாகும். வெளியூர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அனுகூலம் பெற ராகு, கேது பெயர்ச்சி உதவும்.

மருத்துவ மூலிகைகள், வாகன உதிரிப்பாகங்கள், பழவகை உற்பத்தியாளர்கள் கூடுதல் உற்பத்திசெய்து பணவரவு அதிகம் பெறுவார்கள். செயலில் இருந்த மந்த நிலை மாறி புதிய உத்வேகம் பிறக்கும். சமூக அந்தஸ்து உயர்ந்து சிலருக்கு பதவியும் கிடைக்கலாம். வீடு, மனை போன்றவற்றில் அனுகூலபலன் உண்டாகும். புத்திரர்களின் செயற்பாடுகள் மனமகிழ்ச்சி தரும்.

அரசு மற்றும் தனியார் அலுவலகப் பணியாளர்கள் தங்கள் பணியில் இடையூறுகள் குறுக்கிடாத எளிய நிலை பெறுவார்கள். மருத்துவம், விவசாயத்துறை போன்றவற்றில் பணி புரிபவர்கள் தங்களின் திறமையான உழைப்பால் நாட்டின் வளம் உயர்வுபெற உற்சாகத்துடன் பணிபுரி வார்கள். இதனால் தகுந்த பெருமையும் புகழும் வந்து சேரும். சக பணியாளர்கள் நட்பு கலந்த மனோபாவத்துடன் நடந்து கொள்வார் கள். பணவரவு குடும்ப தேவைகளை சீராக பூர்த்திசெய்யும். கணவன் மனைவி ஒற்றுமை அன்பும் பண்பும் கலந்ததாக இருக்கும்.

**பெண்கள்:** அரசு மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் பெண்கள் தங்கள் செயல்திறமையால் எதிர்காலத் திட்டப்பணிகளை இப்பொழுதே வடிவமைப்பார்கள். சகபணியாளர்கள் அனுகூல சிந்தனையுடன் நடந்து கொள்வார்கள். குடும்ப நிர்வாகம் கவனிக்கும் பெண்கள் தேவையான பொருளாதாரம் கிடைக்கப் பெற்று குடும்பத்தை மகிழ்ச்சிகரமாக நடத்துவார்கள். உறவினர்களிடம் சுமூக உறவு இருக்கும்.

சுயதொழில் மற்றும் கூட்டுத் தொழில் புரியும் பெண்கள் வளர்ச்சிப்பணிகளில் ஈடுபட்டு அதற்குரிய நற்பலன்களைப் பெறுவார்கள். சந்தை வாய்ப்புக் களில் முன்னேற்றம் பெற தொழில் சார்ந்த நண்பர்களின் உதவி சமயத்தில் கைகொடுக்கும். ஆபரணச் சேர்க்கை வருட பின்பகுதியில் மனநிறைவாகக் கிடைக்கும். புத்திரர்களால் நன்மை உண்டு. கணவன், மனைவி ஒற்றுமை சிறப்பாகத் திகழும்.

**மாணவர்கள்:** தகவல் தொழில்நுட்ப துறை, ஆய்வுகூட தொழிநுட்பவியல் மருத்துவம், புதுப்பொருள் ஆராய்ச்சி, மீன்வளர்ப்பு ஆகியவற்றில் பயிற்சி பெறும் மாணவர்கள் சிறந்த கவனத்துடன் படித்து கூடுதல் தர தேர்ச்சி பெறுவார்கள். கட்டட கட்டுமானம், கணனி, விவசாயப்படிப்பு சார்ந்த மாணவர்கள் தங்கள் திறமைகளை ஒருங்கிணைத்து செயற்படுத்தி ஆசிரியர், சக மாணவர், பெற்றோரிடம் நற்பெயர் பெறுவார்கள். ஆரம்ப, உயர்நிலை மாணவர்களின் படிப்பில் இருந்த தேக்கநிலை மாறி, படிப்படியாக முன்னேற்றம் ஏற்படும். படிப்புக்கு தேவையான பொருளாதார வசதிகள் சிரமமின்றிக் கிடைக்கும்.

சக மாணவர் ஒருவருக்கொருவர் படிப்பில் உதவிகரமாக செயற்படுவார்கள். உடல்நலத்தில் கவனம் கொள்வதால் நன்மை உண்டு. தந்தை, மகன் உறவுநிலை உங்களின் வெளி வட்டார தொடர்புகளை பொறுத்து அமையும்.

**அரசியல்வாதிகள்:** உங்களின் கடந்தகால மக்கள் நலப் பணிகளால் கிடைத்த நற்பெயரை இது சமயம் முறையாகப் பயன்படுத்தினால் தகுந்த வெற்றியைப் பெறலாம். உங் களின் நற்செயல்களை ஒருங்கிணைத்திட தகுதியான நபர்கள் கிரக அருளால் வந்து சேர்வர். சமூக அந்தஸ்தில் உயர்வு தரும் மாற்றம் உண்டாகும்.


அரசியலுடன் தொழில் வாய்ப்புக்களை பெற்றவர்கள் நம்பகமான பணியாளர்களின் செயற்திறனால் கூடுதல் வளர்ச்சிநிலை காண்பார்கள். புத்திரர்களின் நல்ல நடவடிக்கையால் உங்களுக்கு மனமகிழ்வும் கூடுதல் செயல் ஆர்வமும் உண்டாகும். உடல்நலம் சீராக நல்ல பழக்கவழக்கங்கள் உதவும். சுகவாழ்க்கை முறைகளில் சிக்கன நடவடிக்கைகளை செயற்படுத்துவீர்கள்.

**பரிகாரம்:** முருகப்பெருமானுக்கு சஷ்டி நாளில் உரிய முறை யிலான பூஜை செய்வதால் நற்செயல்களில் கூடுதல் வெற்றிபெறலாம்.

*(வரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது ஆண்டு நினைவுதினம்



**பிறப்பு**
24 . 04 . 1953

**இறப்பு**
08 . 04 . 2004

# அமரர் வேலுப்பிள்ளை இராஜரட்ணம்

திதி:16.04.2006 [உரிமையாளர் R.B. புக்கிங் சென்ரர்]

நல்லதொரு குடும்பத் தலைவனாய்
பார்ப்பதற்கு சிறந்தவராய்
நேர்மையின் சிகரமாய்
முயற்சிக்கு இலக்கணமாய்
சராசரி மனிதனாய் நின்று
கஸ்ரங்களைச் சந்தித்து
தன்னுடைய நிலையை
தனித்துநின்று தக்கவைத்த
பெருந்தகையாளர்
சிறந்த வழிகாட்டியாய்
பாசமிகு தந்தையாய் நண்பனாய்
நல்ல கணவனாய் இருந்து
அனைவர் மனதிலும் இடம் பிடித்து
எம் வாழ்க்கை ஆரம்பிக்கும் வயதில்
உங்கள் உயிரை கொடிய நோய்க்கு
காவு கொடுத்தவரே!

திடீரென மறைந்ததால் திணறிப்போயுள்ளோம்
கம்பீரமான அந்த உடலை
தின்ற சாவிற்க்கு சாவு வராதா?
வருடங்கள் யுகங்கள் ஆனாலும்
உங்கள் நினைவுகள் என்றும்
எம் மனதில் பசுமையாய்ப் பாய்ந்தோடும்
அப்பா நீங்கள் எங்களை சுமந்த
நினைவுகளோடு வாழ்கின்றோம்
இனி வரும் காலமும்
நீங்கள் எங்களுடன் வாழ்வீர்கள்
என்ற நம்பிக்கையோடு
வாழும் காலம் வரை உங்கள்
நினைவுகளைச் சுமந்து வாழும்

No.19, BA, தம்பி லேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்.

இத்துடன் அன்னார் நிறுவிய R.B. Booking Center நிறுவனமானது தனது 25ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்வதையிட்டு அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ் ஆசனத்தொடர்புகளுக்கு
**R.B.ஆசனப்பதிவகம்,**
நவீன சந்தை அருகில், ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 7016, 8356




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழையால் வெள்ளக்காடாகும் பாடசாலை

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பில் பிரபலமான பாடசாலை சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை. ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் இப்பாடசாலை மாணவர்களில் கணிசமானவர்கள் சித்தியடைகின்றனர். மாவட்டமட்டத்தில் முதல் பத்து இடங்களுக்குள் அம்மாணவர்களில் பலர் இடம்பிடிக்கின்றனர்.

இப்பாடசாலை ஆண்டு ஒன்று முதல் ஒன்பது வரை வகுப்புகளைக் கொண்டது. அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் இருப்பதால் இருபது வகுப்புப் பிரிவுகள் உள்ளன.

மழைபெய்தால் இப்பாடசாலைப் பகுதி வெள்ளக்காடாகிவிடும். இது இப்பாடசா

**வன்னிமடல்**

லைக்குப் பெரும் சாபக்கேடாகவுள்ளது. மழை காலத்தில் பல நாள் விடுமுறை தினங்களாகி விடுகின்றன.



மழைகாலத்தில் சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை

***வகுப்பறைகள் பற்றாக்குறை***

இங்கு போதிய அளவு வகுப்பறைகள் இல்லை. ஆசிரியர்கள் அமர இடமுமில்லை. அதிபரின் அலுவலகத்துடன் உள்ள கட்டடம் உடைந்துவிழும் அபாய நிலையில் உள்ளது. இந்திய அமைதிகாக்கும் படையினரின் இராணுவ நடவடிக்கையில் அக்கட்டடம் சேதமடைந்திருந்தது. விஞ்ஞான ஆய்வு கூடம், நூலகம் போன்ற அத்தியாவசிய வசதிகள் இப்பாடசாலையில் இல்லை.

அத்துடன், மாணவர்களுக்கு மட்டுமன்றி, ஆசிரியர்களுக்கும் போதிய தளபாட வசதிகள் கிடையாது. குடிதண்ணீர்ப் பிரச்சினை மாணவர்கள் எதிர்நோக்கும் பெரும் சிக்கலாகும். பல ஆண்டுகளுக்கு முன் நீர்தாங்கி ஒன்று அமைக்கப்பட்டது. ஆனால், அது பயன்படுத்தப்படவேயில்லை.

கடந்த காலங்களில் வலயக் கல்விப் பணிமனையும் இந்த வளாகத்தில் இயங்கி வந்தது. அந்தப் பணிமனைக்கும் மழையினால் பல லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டது; பல லட்சம் ரூபா பெறுமதியான கணனிகள், மின்பிறப்பாக்கி உட்படப் பலவும் மழையால் சேதமாகியிருந்தன. பாடசாலை வளாகத்தில் ஒரு விடுதி உண்டு. இது வலயக் கல்விப் பணிப்பாளர் தங்கும் இடமாகும். இங்கு மூன்று முதல் நான்கு அடிவரை மழை வேளைகளில் நீர் நிறைந்து இருக்கும்.

பாடசாலைக் காணியினை ஊடறுத்து வாய்க்கால் ஒன்று உள்ளது. இதனூடாகத் தொடர்ந்தும் நீர் ஓடிக்கொண்டிருக்கும். இதனைக் கடந்தே மாணவர்கள் மலசலகூடத்திற்குச் செல்லவேண்டும். விளையாட்டு முற்றத்திற்கும் அவ்வாறே செல்லவேண்டும். மழை காலம் முடிவடைந்து கோடை காலத்தில் சேறும் சுரியுமாகவே பாடசாலை வளாகம் காணப்படும். அத்துடன் துர்நாற்றம் வீசுகிறது. இதனால் பாடசாலை மாணவர்கள் சுகாதார சீர்கேட்டினை எதிர்கொள்கின்றனர்.

**பொன்பரன்**

முன்னர் பெருந்தொகைப் பணச் செலவில் இங்கு மண் கொட்டப்பட்டது. ஆனால், அதனால் எவ்வித பிரயோசனமும் இல்லை. வீதிகள் அகலமாக்கப்பட்டதுபோதும் உரிய முறையில் வடிகால் அமைப்பு இல்லை. சிறுவர் நலனில் அதிக அக்கறை காட்டுவதாகக் கூறிக்கொள்ளும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தரமான புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலையைச் சீர்ப்படுத்த முன்வரவேண்டும் என்பதே இப்பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் ஆகியோரின் வேண்டுகோளாகும்.

எதிர்வரும் மாரிகாலத்தில் இப்பாடசாலை சீராக இயங்கவேண்டும் என்பதே இப்பகுதி மக்களின் எதிர்பார்ப்பாகும். ✱

# இனக்கலவரம் பரவுமோ என்ற அச்சம் அம்பாறை மக்களிடமும்

**23** வருடங்களுக்கு முன்னர் எவ்வாறு தலைநகரில் தமிழ்மக்கள் ஓடஓட வெட்டியும் சுட்டும் கொலைசெய்யப்பட்டார்களோ அவ்வாறு இவ்வாரம் திருமலையில் நடந்த சம்பவங்கள் நினைவு கூரத்தக்கவை.

1983இல் கொழும்பில் இடம்பெற்ற சிங்களக் காடையர்களின் அட்டகாசம் 'ஜூலைத் தீயாக' தமிழர்களை அழித்தது. அப்போது அரச இராணுவம் கைகட்டிப் பார்த்துக்

**இராஜபுத்திரன்**

கொண்டுநின்றது. அதற்கான நஷ்டஈடு 23 வருடங்களின் பின்பு கடந்த மாதம் அதே கொழும்பில் வைத்து வழங்கப்பட்டது. நஷ்ட ஈட்டை வழங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கண்கலங்கிய நிலையில் இனியொரு இனக்கலவரம் இந்நாட்டில் ஏற்படாது என்று வாய்விட்டுக் கூறினார். இவ்வாறு ஜனாதிபதி கூறி ஒரு மாதம் கூட ஆகவில்லை. திருமலையில் இவ்வாரச் சம்பவம் அதே ஜனாதிபதி ஆட்சியில் அரங்கேறியுள்ளது.

1983களுக்குப் பின்னர் 1985களில் அம்பாறைத் தமிழ்க்கிராமங்கள் எரியூட்டப்பட்டன. பல நூறு மக்கள் சுட்டும் வெட்டியும் கொல்லப்பட்டனர். இது அப்போதைய அரசின் நரித்தந்திரத்தால் முஸ்லிம் தீவிரவாத இளைஞர்களால் நடத்தப்பட்டதுடன், வீரமுனை பிள்ளையார் ஆலயத்தில் பட்டப்பகலில் சகட்டு மேனிக்குச் சுட்டதில் 56 தமிழர்கள் துடிதுடித்து மரணமானார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

காரைதீவில் புத்திஜீவிகள் உள்ளிட்ட 129 தமிழர்கள் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டனர். பல கோடி ரூபா சொத்துகள் சூறையாடப்பட்டதோடு, எரியூட்டவும் பட்டன என்று அறிக்கைகள் கூறுகின்றன.

திராய்க்கேணி ஏழைத்தமிழ்க் கிராமத்தினுள் புகுந்த அதே இளைஞர்கள் இராணுவத்தின் முன்னிலையில் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டனர். அம்பாறை, வளத்தாப்பிட்டி, மல்வத்தை தமிழ்மக்களும் இரவோடிரவாக வயல்வழியாக உயிர் தப்பி தம்பிலுவிலிலும் காரைதீவிலும் தஞ்சமடைந்தனர்.

பாண்டிருப்பு, கல்முனைப் பகுதியிலும் தமிழர்கள் ஓடஓட விரட்டப்பட்டனர். வீடு வாசல்கள் எரியூட்டப்பட்டன. இதனை யாரும் கூறுவதில்லை. அப்போது இலங்கை இராணுவம் பார்த்துக்கொண்டு இருந்தது. இந்த வரலாற்றை மறைத்து பள்ளிவாசலில் நடைபெற்ற ஓரிரு சம்பவத்தை மட்டும் வைத்துக்கொண்டு ''பாதிக்கப்பட்டோம், பாதிக்கப்பட்டோம்'' என்று முஸ்லிம் தலைவர்கள் என்று கூறிக்கொள்ளும் சிலர் எக்காளமிடுகின்றனர்.

கொடுத்து இருபக்கமும் நன்மை தேடியவர்கள் யார்? சாதாரண பொதுமக்களா? இல்லை. அப்படியெனில் யார்? இத்தனையையும் செய்துவிட்டு நாம் மட்டும் பாதிக்கப்பட்டிருக்கிறோம், எமக்குச் சமபங்கு தேவையென்றும் மூன்றாம் தரப்பு தேவையென்றும் குரல் கொடுப்பதை எவ்வாறு ஏற்றுக்கொள்வது? இது நியாயமா?

## கடந்த கால வரலாறு உணர்த்தும் பாடமிது

***தமிழ்க் கிராமங்களுக்கு நேர்ந்த கதி***

1985, 1990 களில் கல்முனை, பாண்டிருப்பு, காரைதீவு போன்ற தமிழ்க் கிராமங்களிலிருந்து பல ஆலயங்கள் உடைத்து நொறுக்கப்பட்டன. இவற்றைச் செய்தது யார்? இது கட்டுக்கதையா? தமிழர்களின் பூர்வீக நிலங்களை அபகரித்தது யார்? பல நூறு தமிழ் இளைஞர்களைக் காட்டிக்

மட்டு., ஏறாவூர்,செங்கலடிப் பிரதேசங்களிலும் இன்றும் தமிழ்ப்பிரதேச வீடுகள் சேதமடைந்த நிலையிலிருப்பதைக் காணலாம். தமிழர் தரப்புக் கூறுகிறது. இந்த இனவன்முறையைக் கட்டவிழ்க்கக் காரணமானவர்கள் இன்று உலகில் இல்லையெனக் கருதினாலும் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்கள் இன்றும் உள்ளனர். அவர்களது மனச்சாட்சிக்கு விரோதமான முறையில் நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது. இவற்றுக்கான நஷ்டஈடு அமைச்சர் அஷ்ரப் இருந்தபோது வழங்கப்பட்டது. ஆனால், உண்மையில் சொத்துக்களை இழந்து பாதிக்கப்பட்டவர்களை விட ஒரு முள்ளுக்கொப்பும் முறியாத பலர் (பெரும்பாலும் முஸ்லிம்கள்) இந்த நஷ்ட ஈட்டைப் பெற்றமைதான் வேடிக்கையானது. அந்தவகையில் இன்றைய ஆழிப் பேரலை நிவாரணமும் அதற்கு விதிவிலக்கல்ல.

***இலங்கை வரலாற்றில் மற்றொரு கறை***

நிற்க, இன்று திருமலை வன்முறை இலங்கை வரலாற்றில் மற்றுமொரு கறையை ஏற்படுத்தியுள்ளது. 1985களில் சித்திரை வருடப்பிறப்பை எதிர்கொண்டிருந்த வேளையில் எவ்வாறு காரைதீவுக் கிராமம் தாக்கி அழிக்கப்பட்டதோ, அவ்வாறே இன்று 2006

**அம்பாறைமடல்**

இல் திருமலை நகரில் நடைபெற்றுள்ளது.

சித்திரைத் தீயாகக் கொழுந்துவிட்டு எரியும் இந்த இனவாதத்திற்கு மஹிந்த அரசும் விதிவிலக்கல்ல என்பதை உரத்துச் சொல்லியுள்ளது. ஆயுதம் தூக்கியவர்களிடையே இடம்பெறும் மோதல் வேறு இடையில் எதுவுமறியாத பொதுமக்களை இழுப்பது என்பது வேறு. யாராயிருந்தாலும் பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடாது.

இவ்வாறு திருமலையில் மாமனிதர் விக்கியின் சூட்டோடு புகைய ஆரம்பித்த வன்முறைத் தீ கொழுந்துவிட்டெரிந்து திருமலைத் தமிழர்களைக் கொளுத்தியது. பட்டப்பகலில்அரங்கேறிய இந்தக் கோர நாடகம் கூறிவதென்ன? அதையிட்டு விலாவாரியாக கூறவேண்டியதில்லை.

(16ஆம் பக்கம் பார்க்க)

# பாரம்பரிய கலை வடிவங்களைப் பேணும் மெற்றாஸ்மயிலின் மற்றொரு படைப்பு

*பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் இசைநாடகம், காத்தவராயன் கூத்து ஆகியவற்றின் ஒலி இறுவட்டு, ஒலிப்பேழை வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறுகின்றது. பாரம்பரிய கலை வடிவங்களைப் பேணுவதன் அவசியம், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் பணிகள் தொடர்பாக விளக்குகின்றது இந்தக் கட்டுரை.*

"மரபுவழி இசை நாடகங்கள் ஒன்பது" என்ற ஒன்பது நாடகப் பிரதிகளை உள்ளடக்கி நாடக உலகிற்குக் கையளித்த கலாபூஷணம் செல்லையா மெற்றாஸ்மயில் அவர்கள் இன்று இன்னுமொரு வரலாற்றுச் சிறப்புவாய்ந்த கைங்கரியத்தை நிறைவேற்றி இருக்கிறார்.

பத்து இசை நாடகங்களுடன் காத்தவராயன் சிந்து நடைக்கூத்து ஒலிவடிவமாகப் பதிக்கப்பட்டு வெளியீடு செய்யப்படுகின்றது என்ற செய்தி மரபுவழி நாடக ரசிகர்களுக்குப் புளகாங்கிதத்தை ஏற்படுத்துவதாக அமைகின்றது.

மரபுவழிக் கையளிப்பிற்கான மூலவளங்கள் அருகிப் போயுள்ள இக்காலகட்டதில் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் இந்த வெளியீடானது காலத்தின் தேவை கருதிச் செய்யப்பட்ட வரலாற்றுப் பதிவாகும்.

இன்று இசை நாடகங்கள் எப்பொழுதாவது மிகவும் அரிதாகவே மேடையேறுகின்றன. கலைஞர்களைத் தேடிப்பிடிப்பது என்பது குதிரைக்கொம்பாக இருக்கிறது. இந்நிலையில் நாற்பத்து நான்கு கலைஞர்களை ஒன்றிணைத்து நாடகங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இவர்களுள் அநேகர் மரபுவழிக் கலைஞர்கள். இளங்கலைஞர்களும் பங்கேற்றுள்ளனர். ஹார்மோனியம், தபேலா, மிருதங்கம், உடுக்கு என்பன அணிசெய்கின்றன.

**நா.விமலநாதன்**
**ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி.**

நாடகங்களை நேரிலே பார்த்து ரசிப்பது போன்ற உணர்வு தோன்றும் வண்ணம் நாடகங்கள், பாடல்கள், வசனங்களுடன் சேர்ந்து காட்சிகாட்சிகளாக ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஏறத்தாழ நான்கு வருடங்களாக நடைபெற்ற தொடர்ச்சியான ஆவணப்பதிவு செயற்பாடு இது. ஐம்பது முழு இரவுகள் விழித்திருந்து இப்படையலை உருவாக்கி இருக்கிறார் மெற்றாஸ் மயில்.

அரங்க அனுபவம், இசை ஞானம், குரல் வளம், நடிப்புத்திறன் கைவரப்பெற்ற கலைஞர்கள் சிறந்தமுறையில் தமது கலைத்திறனை இதில் வெளிக்காட்டியுள்ளார்கள்.



கலாபூஷணம் செல்லையா மெற்றாஸ்மயில் அவர்கள் தனது கலைத்துவ ஆளுமையினால் நாடகங்களை ஜனரஞ்சகமான முறையில் கட்டுக்கோப்பாக்கி இருக்கிறார். தனது மிகுந்த பொருள், நேரச் செலவில் அவரது ஆதரவாளர்களின் துணை அனுசரணையையும் பெற்று முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அனைவரையும் ஒன்றிணைத்து முழு மூச்சுடன் செயற்பட்டு கலாபூஷணம் செல்லையா மெற்றாஸ்மயில் அவர்கள் ஒரு வரலாற்றுப் பொறுப்பை நிறைவேற்றி உள்ளார். இவருக்கு ஈழத்து இசை நாடக உலகம் நிறையவே கடன்பட்டிருக்கின்றது.

ஈழத்தமிழரின் பாரம்பரிய கலை வடிவங்களில் ஒன்றான இசை நாடகங்கள் அடங்கிய ஒலிப்பேழைகள் ஒவ்வொரு கலை ஆர்வலர்களின் இல்லத்திலும் ஒலிக்க வேண்டும். இசை நாடகங்களின் தேக்க நிலை மாற்றமடைந்து மக்கள் மத்தியில் மீண்டும் உயிர்ப்புடன் வாழ்வதற்கு இவ்வெளியீடு [illegible] செய்யும் என நம்புகின்றேன். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Gateway2uk Education

Education Provider DfES, BCS, Home Study, ACCA,

## Free Spot Admissions Seminar 02/05/2006

Meet
Mr.Graham Minshaw (International Consultant),
Mr.Kiran. Nagpure (Regional Manager Gateway2UK).

**Courses:**

- Computing & Information Systems
- Business & Management Studies
- Accounting & Finance Facilities Management
- Hospitality, Travel Management, Medical and Nursing
- ACCA, Specialist and Professional Programmes
- Engineering, Medical related couress
- Information Technology
- Accountancy & Finance
- Business & Finance
- Marketing
- Economics
- BBA, MBA
- LLB
- HND
- IMIS

- Full visa support - No visa full fees refund after deduction of hundred pounds registration fee.
- Student loan support
- Scholarships application Welcome

**For Further Information:**
Gatway 2UK Education,
1,Sycamore Avenue, South Ealing, London,
W5 4LH, UK

**Venue:** Seminar on 2/5/2006 at 10am to 4pm book your appointment in advance.

**SriLanka Office**
**M.H.Riyas**

## SKY LINE Travels & Services

Professional Overseas Educational Consultants

No.7-1/2, W.A.De Silva Mawatha,(Facing Galle Road) Colombo-06, Sri Lanka.
**Hotline: 0773 175 767**
**Office : 0114 942 337**
Mail: mohamedhanifaa_riyas@yahoo.co.uk



# UNIT
## NEW YEAR OFFER

| | |
|---|---|
| **Mother Boards** | |
| AsusP4V8X-MX-UAYZ | 6600/- |
| AsRock P4i65-Intel-SATA | 6900/- |
| AsRock 775i65 - Intel-SATA | 8000/- |
| AsRock K8NF4G SATA2-AMD | 8000/- |
| Intel Original LGA D101 | 9400/- |
| **Hard Disk** | |
| 40 Gb | 5750/- |
| 80 Gb | 6600/- |
| **Display Cards** | |
| 64 Mb AGPVGA (NVIDIA) | 3900/- |
| 128 Mb AGPVGA (NVIDIA) | 5500/- |
| PCI Express VGA 128MB | 8750/- |
| **Optical Drives** | |
| CDROM HP | 1900/- |
| CD-RW SONY | 3300/- |
| CD-RW ASUS | 3700/- |
| DVDSONY | 3250/- |
| DVDCOMBO SAMSUNG | 4900/- |
| DVD-RW | 7400/- |
| **Monitors** | |
| View Sonic 15" | 11600/- |
| DaeWoo15" | 11200/- |
| **Woofers** | |
| Logitech 2.1 M20 | 3000/- |
| Perx 4.1Home Theatre | 6000/- |
| Perx 4.1Home Theatre | 7000/- |
| Perx 5.1 Home Theatre (5000W) | 14000/- |
| Perx 5.1 Home Theatre (8000W) | 20000/- |
| Perx 2.1 Home Theatre (7200W) | 24000/- |
| Perx 5.1 Home Theatre (8200W) | 30000/- |
| **Printers** | |
| Canon Pixma IP1000 | 5400/- |
| HP 3920 | 5500/- |
| HP 3744 | 5700/- |
| HP LaserJet 1020 | 19200/- |
| Canon Laser Shot 2900 | 18200/- |
| **TV Tuner** | |
| Internal cum Capture | 4750/- |
| External | 5000/- |
| **Scanner** | |
| Benq | 5600/- |
| Canon LIDE 25 | 7300/- |
| KeyboardsFrom | 400/- |
| MouseFrom | 200/- |
| External HDD BAY | 2500/- |
| Speaker | 550/- |
| Processor Fans (Intel Original) | |
| P4 PGA | 1000/- |
| P4 LGA | 1500/- |
| ATX Casing From | 3000/- |
| **UPS** | |
| PowerTree 650VA | 4300/- |
| DCP / Sunpac 650VA Auto Shutdown | 4600/- |

**All HP, Canon Laserjet Original Toners & Inktek Max toners**
Special prices available for Resellers, assemblers, GO & NGO's

Used Monitors Available

இச்சலுகை குறிப்பிட்ட சில தினங்களுக்கு மாத்திரம் மேலும் தேவைகள், சலுகைகளுக்கு

**347, K.K.S. Road**
**Manohara Theatre Junction,**
**Jaffna.**
**T.P: 021 - 4590720**





# இசிருட்டிய நவீன CAR வாடகைக்கு

★ திருமணம் (அலங்காரத்துடன்)
★ சுற்றுலா ★ விசேட வைபவங்கள்

போன்ற அனைத்து தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக் கொள்ளலாம். (48465) (24.17.21.14)

தொடர்பு: நட்சைம்,
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22, சோமசுந்தரம் அவனியூ, கண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
T.P.: 0777-903090
0777 246117



வசீகர தோற்றத்திற்கு

# சந்தனாலேப

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சி மருந்து)

வெண்சந்தனம், மர்மஞ்சள், குங்குமப் பட்டை, கஸ்தூரி, மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை.
தேமல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கண்ணைச் சுற்றி கருவளையம், சருமம் வரட்சியடைதலை தடுக்கும். சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும்.
உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவுபடுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும்.
சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் விசத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும்.
எடுப்பான கம்பீரமான தோற்றத்தை தரும்.

வேகமான செயற்திறன் மிக்க

# மகா கினிராஜ தைலம்

சகல வாத நோய்களுக்கும், எரிவு, தகர்வு, வீக்கம், கடுப்பு, இடுப்புவலி, கைகால் விறைத்தல், மூட்டுவலி, நரம்பு வலிகள், தசை பிடிப்பு, குதிகால் வலி போன்றவற்றையும், தலைவலி, தடுமல் ஜலதோசம், மூக்கடைப்பு, தொடர் தும்மல், காதுவலி, பல்வலி, இளைப்பு, கன்னங்கட்டி போன்ற சரீரத்தின் உள்ளேயும் வெளியேயும் ஏற்படும் எந்தவொரு நோயையும் துரிதமாக் குணமாக்குவதுடன், உடல் ரீதியான மற்றும் உளரீதியான சுகமளித்து உடலுக்கு புத்துயிரளிக்கும்.
நாட்டுமருந்துக் கடைகளிலும், பாமர்ஸிகளிலும் கிடைக்கும்.

(வெளிப்பூச்சுக்கு மட்டும்)

# சஞ்சீவக்க
## ஆயுர்வேத பற்பொடி

பல்வலி, முரசு கரைதல், இரத்தம் வடிதல், பல்ஆட்டம் காணுதல், மரத்துப்போதல், காவி படிதல், வாய் நாற்றம், பற்சூத்தை முதலிய உபாதைகளை விலக்கி பற்களை உறுதியாகப் பேணி வாயை நறுமணம் கமழ வைக்கும் அதேவேளை முத்துக்கள் போன்று பற்களை வெண்மை கொண்டதாக்கி முகத்துக்கு பொலிவைத் தரும்.

தயாரிப்பு:
சஞ்சீவக்க் ஆயுர்வேத தயாரிப்பு,
152, சீ. .பாம்குரோவ் தோட்டம்,
பத்தலகெதர, வெயான்கொடை, ஸ்ரீலங்கா.
தொ.பே: 033-2287567 ஆயு.உ. 231
பெக்ஸ்: 033-2288288

மொத்த விற்பனை பிரதிநிதி:

சிவா நறுமணப் பூங்கா,
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்,
தொ.பே: 021-2222567

இராசையா மருந்துக்கடை,
202, பஜார் வீதி,
வவுனியா.
தொ.பே: 4589727




## PERSIONAL MATHS CLASSES

ஆண்டு 9-11 வரையிலான மாணவர்களுக்கு தனிப்பட்ட ரீதியாகவோ or குழு ரீதியாகவோ கணித வகுப்புகள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். மீள் பரீட்சார்த்திகளும் தொடர்பு கொள்ளலாம். தொடர்புகளுக்கு:-
(49172) **021 222 9800,0776853418** (21.19.14)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
05 - 04 - 1944



மறைவு
18 - 03 - 2006

அமரர்

## இரத்தினசாமி ஜெயச்சந்திரன்

(வல்வெட்டித்துறை)

18.03.2006 சனிக்கிழமையன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரது இறுதிச் சடங்குகளில் நேரில் கலந்து கொண்டோருக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் பல வழிகளில் உதவிகள் புரிந்த புரிகின்ற அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, நாளை (17.04.2006) அன்னாரின் வீட்டில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*வேம்படி*
*புதுவளவு ஒழுங்கை,*
*வல்வெட்டித்துறை.*
(49230)(21.14.19)

தகவல்:
குடும்பத்தினர்

## பாலர் பராமரிப்பு நிலையத்திற்கு உதவிப்பொருள்

சாவகச்சேரி பூவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்திற்கு யாழ்.மாவட்ட தமிழர் ஊனர்வாழ்வுக் கழகத்தினர் சுமார் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

பால்மா வகைகள், பிளாஸ்ரிக் வாளிகள், துவாய்கள், சிறுவர்களுக்கான உடுபுடைவைகள், மருந்து வகைகள், பாத்திரங்கள், கூரை விரிப்புகள், மண்ணெண்ணெய் அடுப்பு ஆகிய பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. கழகத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் சு.ஜெயராசசிங்கம் இந்தப் பொருள்களை வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

# மரண அறிவித்தல்



## சரவணை கந்தசாமி

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி பத்திரகாளி கோயிலடியைச் வதிவிடமாகவும் கொண்ட சரவணை கந்தசாமி அவர்கள் 12.04.2006 புதன்கிழமை காலமானார்.

அன்னார் சரவணை நல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும் சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சரஸ்வதி, காலஞ்சென்ற மகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சற்குணவதியின் அன்புக் கணவரும் கோமேஸ்வரி, இரத்தினேஸ்வரி, நாகேந்திரராஜா, மகேஸ்வரி (கனடா), ரவீந்திரன் (கனடா), நந்தினி (லண்டன்), ரவிசங்கர் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் துரைசிங்கம், ரகுநாதன் பாலா (கனடா), குவேந்திதாஸ் (லண்டன்), கலாவதி, கல்பனா (கனடா), விஜிதா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், கிர்த்திகா, கிருஷாந் (லண்டன்), துஷாந்த், ஜானுஷாந், தனுஷாந், தாட்ஷாயினி, கலையரசி, சகானா, அருள்பிரஷாந், நிமல்ராஜ், அகில்ராஜ்,பிரன்ஷன் (கனடா), பிரமியா (கனடா), விதுஷன், அஸ்வினி, ஆரபி (கனடா), வாகீசன், செயோன் (லண்டன்), ஆதிநாத், அர்ஷனா (சுவிஸ்) ஆகியோரின் பேரனும் தம்பித்துரை, யோகம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2006) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் மு.ப. 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்மன் வீதி,*
*பத்திரகாளி கோயிலடி,*
*திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.*
(49489) (33-11)

தகவல்:
**மனைவி, மக்கள்,மருமக்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டமிட்ட வகையில் தமிழர்களின் கடைகளுக்குத் தீ; தொண்டர் நிறுவன அலுவலகங்களும் தப்பவில்லை!

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாகவே இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்கள் கொலைகள், குண்டுவெடிப்புகள் என் பன இனப்பிரச்சினைக்கான தீர்வினை இந்த அரசு மேற்கொள்ளுமா என்ற சந்தேகத்தினை


பாதுகாப்பில் ஈடுபடும் பொலீஸ்.

மக்கள் மத்தியில் உருவாக்கியுள்ளது.

திருகோணமலை மரக்கறிச் சந்தையை அடுத்துள்ள பகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு அதனை அடுத்து இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் என்பனவற்றினால் தமிழ் மக்களின் உயிர்கள் பறிக்கப்பட்டு உடைமைகள் அழிக்கப்பட்டு சூறை யாடப்பட்டுள்ள செயல்கள் தமிழ்

**திருமலை மடல்**

மக்கள் மீதான திட்டமிட்ட நடவடிக்கைகளாகவே கருதப்படுகின்றன.

குண்டுவெடிப்பு இடம்பெற்று முடிந்த சில மணித்துளிகளிலேயே தமிழர்களுக்குச் சொந்தமான 90 வீதமான வர்த்தக நிலையங்கள் சூறையாடப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இத்தகைய நடவடிக்கையின் விளைவாக பல மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, திருகோணமலை நகரின் பிரதான பகுதிகளான ஏகாம்பரம் வீதி, மத்திய வீதி ஆகிய பகுதிகளில் உள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான'வர்த்தக நிலையங்களே இவ் வாறு திட்டமிட்ட வகையில் தீ வைப்பிற்கு இலக்காகியுள்ளன; சூறையாடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தின் விளைவாகக் கொலையுண்ட வர்களின் சடலங்கள் தொடர்ந்தும் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை - இரண்டு தினங்களாகவே நகரிலும் புறநகர்ப் பகுதிகளிலும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டும் வன்செயல் சம்பவங்கள் தொடர் கதையாகவே இருந்து வருகின்றன.

கடந்த வெள்ளியன்று புறநகர்ப் பகுதிகளான பாரதிபுரம், மிகுந்தபுரம் பகுதிகளில் இடம்பெற்ற பயமுறுத்தல்கள் மற்றும் வன்செயல் சம்பவங்களைத் தொடர்ந்து எல்லைப்புறப் பிரதேசங்களில் வாழும் மக்கள் அச்சத்தின் விளைவாகத் தங்கள் கிராமங்களை விட்டு இடம் பெயர்ந்து வருகின்றனர்.


வன்முறையால் அழிந்த சொத்துக்கள்.

## நடேசபுரம் நடேசர் ஆலயமும் இரண்டாவது முறையாகத் தீக்கிரை

தங்களுக்கான போதிய பாதுகாப்பற்ற நிலையிலேயே தாங்கள் இடம்பெயர்ந்து செல்வதாகவும்- அரசு தங்களுக்கான போதிய பாதுகாப்பினை வழங்கவேண்டும் என்றும் - இவர்கள் கோரி வருகின்றனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களில் 142 குடும்

## ஊரடங்கு அமுலில் இருந்தவேளையிலும் வன்செயல்கள் தொடர்ந்தன

பங்கள் அன்புவழிபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர். இவர்களுக்கான சமைத்த உணவு மற்றும் ஏனைய தேவைகளை கிழக்கு மனிதவள பொருளாதார நிறுவனமான 'எஹெட்' வழங்கும் வகையிலான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குண்டுவெடிப்பு, அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற சம்பவங்களின் விளைவாக இதுவரை 19இற்கும் அதிகமானோர் பலியான நிலையில் திருகோணமலை அரசினர் பொது மருத்துவமனையில் 30 பேர் வரை தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


வன்முறையால் பலியான உயிர்.

இதற்கிடையே, கடந்த வெள்ளியன்று திருகோணமலை நகரின் எல்லைப்புறக் கிராமமான நடேசபுரம் பகுதியில் உள்ள நடேசர் ஆலயம் தீ வைப்பிற்கு இலக்காகியுள்ளது.


பலியானவர்களின் உறவுகள் கதறல்.

கடந்தகால வன்செயல் சம்பவங்களின் விளைவாப் பாதிக்கப்பட்ட - சேதமடைந்த இந்த ஆலயத்தின் புனரமைப்புப் பணிகள் அண்மையில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட நிலையிலேயே தீ வைப்பிற்கு இலக்கானமை மக்களின் மனங்களைப் பெரிதும் நோக வைத்துள்ளது.

இதனை அடுத்துள்ள மிகுந்தபுரம் பகுதியில் இனமத பேதமற்ற நிலையில் சமூகப் பணிகளை ஆற்றிவரும் திருகோண [illegible] அக பணிமனையும் தீ வைப்பிற்கு இலக்காகியுள்ளது.

பத்து வருடங்களுக்கும் மேலாக இந்த நிறுவனம் எந்தவிதமான எதிர்பார்ப்புகளுமற்ற நிலையில் பணி யாற்றிவரும் நிலையிலேயே தீ வைப்பிற்கு இலக்காகி உள்ளமை வேதனைக் குரியதாகும். இத்தகைய நிலையானது மாவட்டத்திலுள்ள ஏனைய தன்னார்வத் தொண்டு

**சங்கீத்**

நிறுவனங்களையும் சிந்திக்க வைத்துள்ளது.

திருகோணமலை நகரிலும் புறநகர்ப் பகுதிகளிலும் வெள்ளியன்று மாலை 5 மணியளவில் இரண் டாவது நாளாகவும் மேற்கொள்ளப்பட்ட ஊரடங்கு உத்தரவு சனியன்று காலை விலக்கப்பட்டது. ஆனால், நகரப் பகுதியில் சன நடமாட்டம் மிகவும் குறைவானதாகவே காணப்பட்டது.

இதேவேளை, சனிக்கிழமையன்று ஒருசில வர்த்தக நிறுவனங்கள் திறக்கப்பட்ட வேளை நகரவாசிகளும் கிராமப் புறங்களில் வாழும் மக்களும் தங்களுக்கான அத்தியாவசிய உணவுப் பண்டங்களைக் கொள்வனவு செய்வதில் ஈடுபட்டிருந்ததனைக் காணமுடிந்தது.

அடுத்த கணம் என்ன நடக்குமோ என்ற நிலையிலேயே நகரவாசிகளும் புறநகர்ப் பகுதிகளில் வாழும் மக்களும் மணித்துளிகளை எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். அச்சத்தின் மத்தியில் வாழும் இந்த மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டியது அரசின் தலையாய கடனாகும்.

ஆனால், அரசு தன்னுடைய பொறுப்பைத் தட்டிக்கழிப்பதன் மூலம் பிரச்சினைகளும் வன்செயல்களும் உருவாகும் சாத்தியக் கூறுகள் அதிகமாகவே உள்ளன.

எனவே, இந்த வேளையிலாவது அரசும் அரச இயந்திரங்களும் தங்கள் பொறுப்பினை உணர்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளையும் உரிய பாதுகாப்பினையும் வழங்க முன்வர வேண்டும்; செய்வார்களா? ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1972, ரேவதி, 8 இல் செவ்வாய்,கிரகபாவம் 43, அரச திணைக்களமொன்றில் உயர் பதவி வகிக்கும் **B.A. (Special)** மணமகளுக்கு அரச உத்தியோகம் பார்க்கும் மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2849, மே/பா உதயன். (49237)

யாழ். இந்து கௌரவ குடும்பம், 71ஆம் ஆண்டு, பூராடம் கிரகபாவம் 30¾ , உயரம் 5'1'' செவ்வாய் தோசம் அற்ற, படித்த மணமகளுக்கு பட்டதாரி ஆசிரியர் அல்லது பெரிய அரச உத்தியோகத்தர், கொழும்பில் பெரிய நிறுவனத்தின் உரிமையாளர் மணமகன் தேவை. தொடர்பு:0776248679. (49468)

யாழ். இந்து கௌரவ குடும்பம், 86ஆம் ஆண்டு சித்திரை நட்சத்திரம் 68½ கிரகபாவம், உதயச் செவ்வாய் உள்ள மிக அழகான படித்த மணமகளுக்கு **U.K.**, டென்மார்க் நிரந்தர வதிவுரிமையுடைய மணமகன் தேவை. தொடர்பு 0776248679. (49468)

யாழ். இந்து கௌரவ குடும்பம், 80ஆம் ஆண்டு, உத்தராடம் 3ஆம் பாதம், கிரகபாவம் 20, செவ்வாய் தோஷமற்ற, அழகிய, படித்த, மணமகளுக்கு பட்டதாரி அல்லது நல்ல அரச உத்தியோகம் உள்ள மணமகன் தேவை. தொடர்பு: 0776248679 (49468)

யாழ். இந்து கௌரவ குடும்பம், 75ஆம் ஆண்டு, சுவாதி நட்சத்திரம், கிரகபாவம் 23 **A/L** படித்த, அழகான பெண்- 8இல் செவ்வாயுள்ள பட்டதாரி அல்லது **U.K.**, மணமகன் தேவை. தொடர்பு: 0776248679 (49468)

யாழ். இந்து கௌரவ குடும்பம், 73ஆம் ஆண்டு, உத்தராடம் முதலாம் பாதம், கிரகபாவம் 24¼ உள்ள எஞ்சினியர் மணமகளுக்கு டாக்டர், எஞ்சினியர், விரைவுரையாளர் மணமகன் தேவை. தொடர்பு: 0776248679(49468)

யாழ். இந்து கௌரவ குடும்பம், 76ஆம் ஆண்டு, கேட்டை, 12இல் செவ்வாய், 10¾ கிரகபாவம் உள்ள டாக்டர் மணமகளுக்கு டாக்டர், விரிவுரையாளர், எஞ்சினியர் மணமகன் தேவை. தொடர்பு: 0776248679 (49468)

யாழ். இந்து கௌரவ குடும்பம், 72ஆம் ஆண்டு, மூல நட்சத்திரம், 7இல் செவ்வாய் 47 கிரகபாவம் எஞ்சினியர் நோர்வே சிற்றிசன் உள்ள 5'4'' மணமகளுக்கு டாக்டர், எஞ்சினியர், **B.Sc.,** மணமகன் தேவை. ஸ்பொன்சர் செய்து தரப்படும். தொடர்பு: 0776248679. (49468)

யாழ். இந்து கௌரவ குடும்பம், 80ஆம் ஆண்டு சதயம், உதயச் செவ்வாய் கிரகபாவம் 28½, **B.Sc.,** பட்டதாரி வங்கியில் வேலை புரியும் அழகான மணமகளுக்கு டாக்டர், எஞ்சினியர் விரிவுரையாளர் மணமகன் தேவை. தொடர்பு: 0776248679 (49468)

யாழ். இந்து கௌரவ குடும்பம்,73 ஆம் ஆண்டு, உத்தராடம், கிரகபாவம் 24¼, செவ்வாய் தோஷமற்ற எஞ்சினியர் மணமகளுக்கு டாக்டர், எஞ்சினியர் விரிவுரையாளர் மணமகன் தேவை. தொடர்பு: 0776248679. (49468)

## சமயபாட செயலமர்வு

தென்மராட்சி,ஏப்.16

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கிறிஸ்தவ சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இருநாள் செயலமர்வு எதிர்வரும் 26ஆம், 27ஆம் திகதிகளில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான வகுப்புக்களில் கிறிஸ்தவ சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் இச்செயலமர்வுகளில் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார்.

(ஜ-117)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1973, 7 இல் செவ்வாய் 30 பாவம் உடைய தனியாக தொழில் செய்யும் மணமகனுக்கு அதே செவ்வாய் குற்றமுள்ள ஜாதக, பண்பான மணமகள் தேவை. தெளிவான விவரங்களுடன் **T.P.** நம்பரையும் தரவும். தொடர்பிற்கு விளம்பர இல. 2850 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (49409)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1969, கார்த்திகை, 4ஆம் பாதம் கிரகபாவம் 9, **B.Sc. (Cey.), M.Sc., (Cey.)** ஆசிரியருக்கு 24-28 வயதுடைய அழகான நற்குணமுள்ள **A/L Maths** சித்தியடைந்த **/B.Sc. Maths** மணமகள் தேவை. தொடர்பு: 0776038913, 0776006579 (46494)

யாழ்.இந்து கௌரவ குடும்பம்,68, மிருகசீரிடம், உதயச் செவ்வாய் கிரக பாவம் 54¼, **U.K.(P.R.)** உள்ள எலக்றோனிக் எஞ்சினியர் மணமகனுக்கு டாக்டர், எஞ்சினியர் மணமகள் தேவை. தொடர்பு: 0776248679 (49468)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 73ஆம் ஆண்டு. அனுஷ நட்சத்திரம், 17½ கிரகபாவம், செவ்வாய் தோசம் அற்ற டாக்டர் **M.B.B.C. U.K.** நிரந்தர பிரஜை. மணமகனுக்கு அழகான மணமகள் தேவை. தொடர்பு: 0776248679 (49468)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

**Prima** உயிர் **Broiler** மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம் (**Electronic** நிறுவை). தொடர்பு: (நல்லூர் வீடியோ சென் ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி/48914)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட No.1 Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 24.04.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், கரன் - ஆலடி-உடுவில், சந்நிதி பாம் - தொண்டைமானாறு, முருகன் -சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/48915)

## வீடு வாடகைக்கு

நல்லூர், செட்டித்தெருவில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு. நாள் வாடகைக்கும், திருமண வைபவங்களிற்கும் வெளிநாட்டில் இருந்து வருபவர்களுக்கும் வழங்கப்படும். தொடர்பு: 077 3186842 . (49059)

யாழ்.வீதி, சிறாம்பியடியில் வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: 077-9086864.(49496)


### சிறுகுறிஞ்சாப் பவுடர்

சிறுகுறிஞ்சா இலைப்பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையும், உப உணவுமாகும். குருதியில் குளுக்கோசையும் கொலஸ்ரோலையும் கட்டுப்படுத்தும் காரணியுடன் விற்றமின் A,C உடன் இரும்பு, நாகம், குரோமியம், கல்சியம், நார்ப்பொருள்கள் போன்ற நன்மை பயக்கக்கூடிய பொருள்களும் உண்டு.

தொடர்பு:- **BIOTEC INTERNATIONAL**
131/2, பலாலி வீதி, திருநெல்வேலி (பாம் ஸ்கூல் அருகில்)
T.P.021 4590907
32/3, ரெயில்வே அவனியூ, கொழும்பு -05.
T.P.0112 852269

(48357) (21.11.14)





## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையில் உள்ள **L.G. Cooimax Tulip** குளிர்சாதனப் பெட்டி, **Mitsubishi V.C.R. Butterfly Table top grinder** (இட்டலி அரைக்கும் இயந்திரம்), **Lap Top, Pram, Office Table,** பழைய வீணைகள் 2, குழந்தைகள் தொட்டில், **Dressing Table** ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு இல.39, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (49492)

## கார் விற்பனைக்கு

நிசான்சனின் 13 - **xxx** தொடர் இலக்கமுடைய 'புள்ளப்சன்' கோல்ட் கலர் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.55, கோயில் வீதி, சுண்டிக்குளி. **T.P. 0777064467** (49465)

## வீடு விற்பனைக்கு

பழைய பூங்கா வீதியில் கொய்யாத்தோட்டம் பகுதியில் ஒரு பரப்புக் காணியில் அமைந்த கடையுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 0776273163. (49407)

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை புங்கன்குளம் வீதியில 7½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக்கப்படும் (கணக்கர் சந்திக்கு அருகில்) தொடர்பு: **T.P.** 0776454368, 0112733059, 21 2263097. (49493)

## காணி விற்பனைக்கு

நுணாவில் கிழக்கு, **A9** வீதியில் 9 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 071 4269831 (49071)

மானிப்பாய் மெமோறியல் ஒழுங்கையில் நல்ல சுற்றாடலில் அமைந்துள்ள 5 பரப்பு வெறும் காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: **T.P.:** 0777131555. (49411)

கல்வியங்காடு - பருத்தித்துறை வீதி, புலவனார் வீதியில் ஒன்றரைப் பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: ச.சோமசுந்தரம் 30, அரசடிப் பிள்ளையார் வீதி, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். (49915)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

கிரேட்டேயன் நாய்க்குட்டிகள், அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: **New R.S.K. Farm** மான்ஸ், பாடசாலை வீதி, உடுவில். (49094)

## தவறிவிட்டது

தி.உதயசூரியன் என்பவரது முக்கிய ஆவணங்கள் அடங்கிய **Bag** 14.04.2006 அன்று முத்திரைச் சந்திக்கும் நுணாவிலுக்கும் இடையில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்யும்போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 171, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (49491)

## கிறிஸ்துவின் உயிர்ப்பு விழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.16

யாழ்ப்பாணக் கல்லூரி நடத்தும் கிறிஸ்து உயிர்ப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் 'உயிரோடு இருப்பவரை கல்லறையில் தேடுவதேன்' என்னும் இசை, நாடக நிகழ்வும் நடைபெறும். (எ-202)

* * *

கொழும்புத்துறை, ஏப்.16

உயிர்ப்பு ஞாயிறு தினத்தையொட்டி கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய மைதானத்தில் விளையாட்டுப்போட்டிகள், கிரிக்கெட் போட்டி என்பன இன்று நடைபெறவுள்ளன.

பங்குத்தந்தை அருட்திரு. அன்ரன் மத்தாயஸ் அடிகளார் தலைமையில் விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகும். பி.ப 2 மணிக்கு திருமணமானவர்களுக்கும் இளைஞர்களுக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டி இடம்பெறும். (எ-30)

## இனக்கலவரம்.....

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

18 பொதுமக்கள் உள்ளிட்ட 48 பேர் இவ்வாரம் வடக்கு - கிழக்கில் பலியாகியுள்ளனர். திருமணம் செய்யப்போகும் இருசாரார் மத்தியிலும் புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு அவசியம். அதேபோல் ஜெனீவாப் பேச்சுக்குச் செல்வோரிடத்திலும் அவை அவசியம்.

*அரசின் அடம்பிடிப்பு*

எதற்கெல்லாம் பயன்படுத்தும் ஹெலியை அரைமணி நேரம் பறப்பதற்கு கிழக்கிலிருந்து வன்னிக்கு விடுவதொன்றும் குற்றமல்ல. இந்த அடம்பிடிக்கும் தன்மை அமைதிப் பேச்சுக்கு ஒத்துவராது.

மொத்தத்தில் பேச்சுக்களில் நம்பிக்கை இழந்த நிலையில் மக்கள் உள்ளனர்.

'அடி உதவுமாப்போல் அண்ணன் தம்பி உதவார்' என்று கூறுவர். கேட்டுப் பெறமுடியாவிட்டால் வேறு மார்க்கம்தான் என்ன? என்று கேட்கத்தோன்றுகிறது. திருமலையில் இப்படி அடாவடித்தனம் அரங்கேற மட்டக்களப்பிலும் அக்கரைப்பற்றிலும் கைவிரலுக்குள் அடக்கக்கூடிய ஒரு தொகை கொலைகள் இடம்பெற்றவண்ணமிருந்தன. உதிர்வதெல்லாம் இளசுகள்.

இந்நிலையில் ஜெனீவாப் பேச்சுமட்டுமல்ல, உள்ளூராட்சித் தேர்தலும் ஒத்திவைக்கப்படவேண்டிய நிர்ப்பந்தமும் எழுந்துள்ளது. இன்றேல் மேலும் பல உயிர்களை இழப்பதோடு கூடுதல் விலை கொடுக்கவும் நேரிடும்.

உலக நாடுகள் இதற்கும் கண்டனம் தெரிவிக்கும், அதற்கும் கண்டனம் தெரிவிக்கும், இதனை இரு தரப்பினரும் உணர்ந்துகொள்ள வேண்டும். வண்டில் பாரம் பூமியிலேதான். மக்கள்தான் கஷ்டப்படுபவர்கள். இதனால் மனித நேயம் குறைந்து வக்ரகுணம் புத்தாண்டில் உருவாகிறது. நல்லது நடக்க காலம் எடுக்குமென்பதை நிஜ சம்பவங்கள் கைப்புண்ணாகக் காட்டி நிற்கிறது. ★




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவுப் பகுதிப் போக்குவரத்தில் அராலி - வேலணைப் பாதை

**வரலாற்று நோக்கில் ஒரு பார்வை.....1**

**பண்ணைப் பாலத்துக்கு மாற்றீடாக, தீவுப் பகுதிக்கு அராலித்துறையூடாகப் பாலம் ஒன்றை நிறுவுவது தொடர்பாக கடந்த சில வாரங்களாக செய்திகள் வெளியாகியிருந்தன. இவ்வாறு பாலம் ஒன்றை நிறுவவேண்டியதன் அவசியம் குறித்தும், இது விடயமாக கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் சான்றுகள் காட்டி விளக்குகின்றார் கட்டுரையாளர்.**

இலங்கையின் வடமேற்கே யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மேற்கே அமைந்துள்ள தீவுத் தொகுதியே தீவகம் என அழைக்கப்படுகின்றது. வேலணைத்தீவு, புங்குடுதீவு, நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, மண்டைதீவு, காரைநகர் ஆகிய மக்கள் குடியிருப்பினைக் கொண்ட எட்டுத்தீவுகளையும் பல மக்கள் வாழாத தீவுகளையும் உள்ளடக்கியதே இத்தீவுத் தொகுதியாகும்.

இப்பிரதேசம் சுமார் 75.0 சதுர மைல் பரப்பளவினைக் கொண்டிருந்தபோதிலும் 65.5 சதுர மைல் பரப்பளவிலேயே மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இத்தீவுகளில் 1981ஆம் ஆண்டுக் குடிக்கணிப்பின் பிரகாரம் 81602 மக்கள் வாழ்ந்திருந்த போதிலும் 1991ஆம் ஆண்டுக் குடித்தொகையின் பிரகாரம் 97000 மக்கள் வாழ்ந்திருக்க வேண்டும். 2005ஆம் ஆண்டு மதிப்பீட்டின் படி 105000 மக்கள் வாழ்ந்திருக்க வேண்டுமாயினும் 48506 மக்களே வாழ்ந்து வருகின்றனர்.

அதாவது இடப்பெயர்வுகள் ஏற்படாதிருக்கும் பட்சத்தில் வாழக்கூடிய மக்களில் அரைப்பங்கிற்கும் குறைவாகவே இப்பிரதேசங்களில் மக்கள் வாழ்ந்து வருவதற்கு பல்வேறு அரசியல், பொருளாதார, பண்பாட்டுக் காரணிகள் பெரும் பங்கு கொண்டிருக்கின்றன. எனினும் மிகவும் முக்கியமான காரணிகளாக போக்குவரத்து வசதியின்மையும் பாதுகாப்பின்மையுமே முக்கியத்துவம் பெற்றுள்ளன என்பது வெளிப்படையான உண்மைநிலையாகும். கணிசமான பங்கினர் சர்வதேச இடப்பெயர்வுக்குட்பட்டிருக்கின்ற போதிலும் ஏனையோர் விடயத்தில் மீள் இடப்பெயர்வினை மேற்கொள்ளாமைக்கு

**பேராசிரியர் கா.குகபாலன்**
**தலைவர், புவியியற்றுறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

மேற்குறித்த இரு காரணிகளே பெரும் பங்கு கொள்கின்றன எனலாம்.

1991ஆம் ஆண்டு வேலணைத்தீவு, புங்குடுதீவு, மண்டைதீவு, காரைநகர் ஆகிய பிரதேசங்களிலிருந்து மாபெரும் இடப்பெயர்வின் விளைவாக 78500 மக்கள் பண்ணைப் பாலத்தினூடாகவும் பொன்னாலைப் பாலத்தினூடாகவும் வெளியேறி குடாநாட்டிலும் நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் சர்வதேசங்களிலும் இடப்பெயர்வாளராக வாழவேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பாரம்பரிய பொருளாதார அமைப்புடன் தம்மை ஈடுபடுத்தி வாழ்ந்த மக்கள் வெளி யேறி பல்வேறு சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். இந்நிலையில் 1981-2005ஆம் ஆண்டுகளில் தீவுப்பகுதி மக்களின் எண்ணிக்கை பின்வருமாறு:


இந்நிலையில் 1991ஆம் ஆண்டு இத்தீவுகளில் ஏறத்தாழ 15.0 சதவீதமான மக்களே தொடர்ந்தும் இங்கு வாழ்ந்து வந்தனர். இவர்களிலும் குறிப்பிடத்தக்கோர் காலத்துக்குக் காலம் கப்பல்கள் மூலம் தென்னிலங்கைக்குச் சென்றிருந்தனர். கடற்பயணத்தினூடாக பயணம் செய்து ஏனைய பிரதேசங்களுக்குச் செல்லும் நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, நெடுந்தீவிலிருந்து மக்கள் அக்காலங்களில் உடனடியாக இடப்பெயர்வுக்குட்படமுடியாத நிலை காணப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அட்டவணை I
தீவுப்பகுதியின் குடித்தொகைப்போக்கு 1981-2005

| பிரதேசம் | 1981 | 1991 இடம் பெயர்வுக்குப் பின்னர் | 2005 |
|---|---|---|---|
| வேலணைத்தீவு: | 31551 | 399 | 20518 |
| புங்குடுதீவு: | 14622 | 857 | 4377 |
| நெடுந்தீவு: | 5620 | 4688 | 5658 |
| நயினாதீவு: | 4247 | 4233 | 3081 |
| அனலைதீவு | 3853 | 2587 | 2149 |
| எழுவைதீவு: | 528 | 572 | 692 |
| மண்டைதீவு: | 3076 | 43 | 1409 |
| காரைநகர்: | 18105 | 840 | 10622 |
| மொத்தம் | 81602 | 14219 | 48506 |

2005ஆம் ஆண்டுக்குடித்தொகையின் பிரகாரம் இத்தீவுகளில் வாழ்ந்துவரும் மக்களின் எண்ணிக்கையினை அட்டவணை I தருகின்றது. 1991ஆம் ஆண்டு வாழ்ந்துவந்த மொத்த மக்கள் தொகையுடன் ஒப்பிடும்போது மூன்றரைமடங்கு மக்கள் அதிகமாக வாழ்ந்து வருகின்றனர். யாழ்ப்பாண மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வாழ்ந்து வரும் மக்களில் கணிசமானோர் தாம் வாழ்ந்த பிரதேசங்களுக்குச் செல்ல வேண்டும் என அரசையும் அரச அதிகாரிகளையும் வற்புறுத்தி வருகின்ற நிலையில் தீவுப்பகுதியிலிருந்து வெளியிடப்பெயர்வினை மேற்கொண்டவர்கள் மீண்டும் தமது சொந்தக்கிராமங்களுக்குச் செல்வதற்கு பெரியளவில் அக்கறை கொண்டவர்களாக இருக்கவில்லை. காரணம் யாதெனில் 1990ஆம் ஆண்டிற்கு முன்னிருந்த சாதாரண நிலை மாறி அசாதாரண நிலை காணப்படுவதேயாகும். அத்துடன் தாம் எக்காரணங்களுக்காக வெளியேற்றப் பட்டோமோ மீண்டும் அவை ஏற்படாதென்பதற்கு என்ன உத்தரவாதம் என்ற மனப்பாண்மையும் அவர்களிடையே காணப்படுகின்றமையுமேயாகும்.

பொருளாதார ரீதியாக வளவாய்ப்புக் குறைந்த பிரதேசமாகினும் தமது பாரம்பரியக் கிராமம் என்ற அடிப்படையில் பெரும்பாலானோரின் பொருளாதாரத் தேட்டங்கள் பண்ணைப்பாலத்திற்கு வெளியிலிருந்துதான் கிடைக்கப்பெற்றாலும் தமது பாரம்பரியக் கிராமம் என்ற உணர்வின் மேலீட்டால் மக்கள் நெருக்கமாக வாழ்ந்து வந்துள்ளனர். இந்நிலையில் பாதுகாப்பின்மை, பய உணர்வு, போக்குவரத்துப் பிரச்சினை, நிலப்பயன்பாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், நிலவுடமையாளரின் வெளியேற்றம், கல்வி நிலையில் தாக்கம் போன்ற பல காரணிகள் மீள்குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்தும் காரணிகளில் முக்கியமானதாக இருக்கின்றன. எனவே, பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த மக்களை மீள்குடியேற்றத்திற்குத் தடையாகவுள்ள காரணிகளை இனங்கண்டு நிவர்த்தி செய்யும்போது முழுமையாகவில்லாதுவிடினும் கணிசமான மீள் குடியேற்றத்திற்கு வாய்ப்பாக அமையும் எனலாம்.




**காரைநகர் - பொன்னாலை கடற்பாதை**

இந்நிலையில் மிகநீண்ட காலமாக மக்கள் அனுபவித்துவரும் பிரச்சினைகளில் பிரதானமானது தீவுப்பகுதிக்குள்ளேயும் வெளியேயுமான போக்குவரத்துப் பிரச்சினையேயாகும். 19ஆம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதி வரை மேற்குறித்த தீவுகள் ஒவ்வொன்றும் தனிமைப்படுத்தப்பட்டு – நான்கு பக்கங்களும் கடலால் சூழப்பட்டு காணப்பட்டிருந்ததுடன் கடல் மார்க்கமாகப் பிரயாணம் செய்தே வேறு பிரதேசங்களுக்குச் சென்று வந்தனர். காரைநகர் நாற்புறமும் கடலால் சூழப்பட்டிருந்த போதிலும் அதன் கிழக்கேயுள்ள கடற்பகுதி பரவைக் கடலாக - அதாவது மாரிகாலங்களில் நீரினால் சூழப்பட்டதாகவும் கோடைகாலங்களில் வற்றி வரண்டுவிடும் பண்பினைக்கொண்டு காணப்படும். பொன்னாலைக் கடல் என்றழைக்கப்படும் பிரதேசத்தினூடாக மக்கள் நீண்டகாலமாகப் பயணம் செய்து குடாநாட்டை அடைந்தனர். இந்நிலையில் பிரித்தானியர் ஆட்சியில் 1878ஆம ஆண்டு யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பொறியியலாளராகக் கடமையாற்றி வந்த முதலியார் எப்.எம் ஆம்ஸ்ரோங் (F.M. Armstrong) என்பவர் பொன்னாலைக் கடலினூடாக கற்தெருவொன்றினை அமைத்து குடாநாட்டுடன் நேரடி வாகனப் போக்குவரத்தை ஏற்படுத்திக் கொடுத்தார். அதனைத் தொடர்ந்து காரைநகர் மக்கள் இலகுவாக யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் மிக நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பாக அமைந்தது.

**புங்குடுதீவு - வேலணை**

# தீவக மக்களின் நீண்டநாள் கனவு நனவாவது எப்போது?

**கடற்பாதையும் வரலாறும்**

இலங்கையில் பரவைக்கடலூடாக மிகநீளமான கடற்பாதை புங்குடுதீவு மடத்துவெளித்துறை வேலணைத்துறையை இணைத்துள்ள வாணர்பாலம் ஆகும். புங்குடுதீவு மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான கற்பாதை அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தினை இலங்கையை ஆட்சி செய்த பிரித்தானியர்களுக்கோ அல்லது அன்றைய அரசியல்வாதிகளுக்கோ ஏற்பட்டிருக்கவில்லை.

இப்பாதை அமைக்கப்பட்டால் அதனால நன்மையடைபவர்கள் நேரடியாகப் புங்குடுதீவு மக்களாயினும் ஏனைய தீவுகளில் வாழ்ந்துவரும் மக்களும் பயனடைவர் என எவரும் எதிர்பார்த்திருக்கவில்லை. ஏனெனில், அக்காலங்களில் ஏனைய தீவுகளிலிருந்து கடல் வழிப் பாதையானது ஊர்காவற்றுறை யூடாகவும் அலுப்பாந்தியூடாகவுமே காணப்பட்டிருந்தது.

சாதாரணமாக நெடுந்தீவிலிருந்து மக்களது பயணமாயினும் சரி சந்தைக்கான பொருள்கள் கொள்வன வாயினும் சரி நெடுந்தீவு மாவலித்துறையிலிருந்து ஊர்காவற்றுறையூடாகவும் அலுப்பாந்தியூடாகவுமே நடைபெற்றுவந்துள்ளது. அதாவது மாவலித்துறையிலிருந்து புங்குடுதீவின் தென்கரையோரமாக அலுப்பாந்திக்கான கடற்பயணத் தூரம் 30.0 கிலோ மீற்றராகவிருந்துள்ளது.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுள்ளோரின் சிறந்த தெரிவு

றோயல் குளுக்கோஸ்

100% சுத்தமானது!

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!

Packed By:- ROYAL INDUSTRIES COLOMBO 12 ☎:0777-277670

அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்




ஏக விநியோகஸ்தர்கள்:

சிவா நறுமணப்பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ☎: 021 222 2567

(C-48633)

100g றோயல் குளுக்கோசின் ஆகக்கூடிய சில்லறை விலை 23.90/=

## கண்ணீர் அஞ்சலி

இணுவில் இந்துக் கல்லூரியில்
20 ஆண்டுகளுக்கு மேலாக ஆசிரியராய்
உப அதிபராய் அர்ப்பணிப்புடன்
கடமையாற்றி 07-11-2004இல்
ஓய்வுபெற்றும் கல்லூரியின் வளர்ச்சி
கண்டும் பெருமையுற்றதோடு, தன்னால்
இயன்ற நிதி வளத்தையும்
வழங்கிக் கொண்டிருந்த



**செல்வி பாக்கியவதி இராமலிங்கம்**

அவர்களின் மறைவை அறிந்து கல்லூரிச் சமூகம் ஆழ்ந்த கவலை அடைகின்றது.

**யா/இணுவில் இந்துக் கல்லூரி**
**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்.**

**குறிப்பு:** அன்னாருக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரையும் இன்று காலை 11 மணிக்கு கல்லூரியில் ஒன்றுகூடுமாறு அனைவரையும் வேண்டுகிறேன்.

(49515) (24-11-19) **- அதிபர்.**

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ!

## விண்ணக வாழ்வின் 16 ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர்**
**சின்னத்தம்பி தங்கமயில்**

மண்ணில் 04 - 04 -1937 விண்ணில் 01- 04 - 2006

*உங்கள் வாழ்வு அழகிய நினைவு*
*உங்கள் பிரிவு மௌனத்தில் துன்பமண்ணா*
*ஆறாத்துயர் தந்து*
*ஈடற்ற இழப்பதனைத் தந்து*
*மீளாத் துயில் கொண்டதேனோ?*
*உங்கள் பாசம் உள்ளுணர்வில்*
*உயிர்த்துடிப்பில் வேராகத் துணையிருக்க*
*அண்ணா! என்ற நாமம் எப்போ எம் நாவில் வரும்*
*என்றும் எம்மில் ஒளிர்கின்றீர் உத்தமரே...!*

சந்தை வீதி,
உடுப்பிட்டி.

உடன்பிறப்புகள்
தவமணி (மணி), தங்கவேல் (ராசா),
தவமலர் (யோகேஸ்).

(49503) (18-11-19-24)

## நாமகள் சனசமூக நிலையம்

**மாணவரின் கல்வி வளர்ச்சி நிதிக்கான அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்**

| | |
|---|---|
| முதலாம் பரிசில் | : 00935 |
| 2ஆம் பரிசில் | : 11375 |
| 3ஆம் பரிசில் | : 10712 |

ஆறுதல் பரிசில்கள்:
11078, 790, 1737, 1622, 17, 1246, 913, 10173, 518, 10141.

**பரிசில்கள் 10 நாள்களுக்குள் பெற்றுக்கொள்ளவும்.**

கீரிமலை வீதி,
சித்தன்கேணி. (49512) (24-11-19) **- நிர்வாகத்தினர்.**

# தளபதிகளின் வருகை.....

*(5ஆம் பக்கத் தொடர்ச்சி)*

இச் சம்பவத்தில் ஐந்து படையினரும் கியூடெக் நிறுவனத்தின் இரு பணியாளர்களும் கொல்லப்பட்டனர்.

புதன்கிழமை சுன்னாகத்திலும் ஊர்காவற்றுறையிலும் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

மறுநாள் தென்மராட்சியில் நால்வர் சுட்டுக்கொல்லப்பட்டனர். குறுகிய இடைவெளி நேரத்தில் இக்கொலைகள் இடம்பெற்றுள்ளன.

வெள்ளிக்கிழமை - புத்தாண்டு தினத்தில் - நகரப் பகுதியில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் சுடப்பட்டுள்ளார். அன்று பகல் சாவகச்சேரியில் கிளைமோரில் சிக்கி இரு பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். அன்றிரவு யாழ். நகரில் சிவன் கோயிலடியில் கிரனேட் வீசப்பட்டது.

குடாநாட்டில் தொடரும் இத்தகைய தாக்குதல் சம்பவங்கள் மீண்டும் கொந்தளிப்பு நிலையை உருவாக்கியுள்ளன என்பதையே சுட்டிக்காட்டுகின்றன.

இக்கொந்தளிப்பு நிலைக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுப்பதன் மூலமே நெருக்கடி நிலையைத் தவிர்க்கலாம்.

களத்தில் அரசும், படைத்தரப்பும் கொண்டுவரப்போகும் மாற்றங்கள்தான் ஜெனீவா பேச்சுக்கள் வெற்றிபெற உதவப்போகின்றன.

களத்தில் மாற்றங்களை ஏற்படுத்தி, ஜெனீவாவில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டை நடைமுறைப்படுத்தி, அடுத்தகட்டத்துக்குள் சமாதான முயற்சிகள் நுழைய அரசு விரைந்து செயற்படவேண்டிய அவசரமும், அவசியமும் உண்டு என்பதை ஜனாதிபதி உணர்ந்து செயற்படவேண்டிய கட்டம் வந்துவிட்டது என்பதை மட்டும் கூறிவைக்க விரும்புகிறோம். ஜனாதிபதி அதிரடியாகச் செயற்படப்போகிறாரா? இல்லையா? என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். ✱

**கொழும்பு ஸ்ரீரஞ்சனி புத்தகசாலையினரின் அனுசரணையுடன் ஸ்ரார் வெளியீடுகள்**
தரம் 1,2,3,4,5,6,7,8,9,10,11 அறிவொளி
(விலை12/-)
(மாதாந்த வினாத்தாள் தொகுப்பு)
பரீட்சை நோக்கு (90/-)
தவணைகளுக்கான வினாத்தாள் தொகுப்பு
**சகல புத்தசாலைகளிலும் பெறலாம்.**
(சி/48947) **0777 259499** (24-11-19)

## S.T.R. திருமண சேவை

மேற்குறிப்பிட்ட எமது நிலையம் ரூபன் வாணிபம் அருகில், எரிந்த பேக்கரி முன்பாக, அளவெட்டி என்ற முகவரியில் இடம்மாற்றம் செய்யப்பட்டு இயங்கி வருகின்றது. இந்நிறுவனத்திற்குப் பெண் உதவியாளர் ஒருவர் தேவை. காலை 8 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை சமுகம் அளிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

அத்துடன், 1975ஆம் ஆண்டு பிறந்த மகம் நட்சத்திரம், 4இல் செவ்வாய், கிரகபாவம் 24 கொண்ட பெண்ணுக்கு சைவ போசன அரச தொழில் புரியும் மணமகன் தேவை. போதிய சீதனம் வழங்கப்படும். அதுமட்டுமன்றி எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு குறிப்புகள் உண்டு. உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:
**S.T.R. திருமண சேவை**
ரூபன் வாணிபம் அருகில்,
எரிந்த பேக்கரி முன்பாக, அளவெட்டி.
பதிவு இல.: **VSW/FIN/BR/967/2005**

(49498) (24-11-19)

## கண்ணீர் அஞ்சலி

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் திட்டமிடல் நிதி உதவியாளர் **செல்வி பஞ்சாட்சரம் பாலகுமாரியின்** அன்புச் சகோதரர்

**பஞ்சாட்சரம் கிருபாகரன்**

அவர்கள் அகாலமரணமடைந்தமையால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(சி/48968) (24-11-19) **- கல்லூரிச் சமூகம்.**

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி





| அமரர் | அமரர் |
|---|---|
| **சிதம்பரி கணேசரட்ணம் (ரட்ணா)** | **விசுவர் கிருஸ்ணன் (கிருஸ்ணா)** |
| 18.03.1959 | 24.08.1954 |

மலர்வு

உதிர்வு
16.01.2006

*எங்கள் குடும்ப கோயிலின் தீபங்களே!*
*விடு நோக்கி வந்த வேளை விரைந்து*
*நீங்கள் விண்ணுலகம் சென்றதேனோ?*
*உங்களை இழந்து நாம்படும் துயரம்*
*பாராமல் பரமனடி சேர்ந்திரே!*
*உங்கள் இருவரின் ஆத்மா*
*சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.*
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

(49517) (18-11-19-24)

நாவற்குழி, தச்சன்தோப்பு. **- குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### சிவசுப்பிரமணியம் புஸ்பலீலாவதி



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் தற்போது கொக்குவில் மேற்கில் வசித்து வந்தவருமான சிவசுப்பிரமணியம் புஸ்பலீலாவதி 15.04.2006 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் சிவசுப்பிரமணியத்தின் பாசமிகு மனைவியும் மல்லிகா, ரஞ்சிதமலர் (சுவிஸ்), சந்திரா (ஜேர்மனி), கோமதி, கமலேஸ்வரன், ராகேஸ்வரன், சிவநேசன் ஆகியோரின் பாசமிகு தாயும் விஜயராசா, யோகராசா (சுவிஸ்), நவக்குமார் (ஜேர்மனி), ஜெயராசா, செல்வவனஜா, ஜெயலதா, அமுதா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொக்குவில் மேற்கில் உள்ள அன்னாரது மகன் கமலேஸ்வரன் வீட்டில் இன்று (16.04.2006) ஞாயிற்றுக்கிழமை 2 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சொர்ணவடலி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*
**T.P.: 222 5771** (49513) (24-11-19)

தகவல்:
**கமலேஸ்வரன்** (நிதுஷ் ஜுவெல்லறி, மானிப்பாய்),
**ராஜேஸ்வரன், சிவநேசன்** (மகன்மார்).

### திருமதி யாகப்பர் செல்வநாயகம் சுகிர்தலங்காரம்



சுன்னாகம், புனித அந்தோனியார் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யாகப்பர் செல்வநாயகம் சுகிர்தலங்காரம் அவர்கள் 13.04.2006 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிரியர் பிலிப் யாகப்பர் செல்வநாயகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி வரப்பிரகாசம் மோட்சலங்காரத்தின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான திரு. திருமதி பிலிப் எலிஸபேத்தின் அன்பு மருமகளும் கிறகரி பிறேமகாந்தன் (**B.A. M.phi.**, ஆசிரியர், தி/திருவள்ளுவர் வித்தியாலயம், பூநகர் ஈச்சிலம்பற்று, திருமலை), ஆன்பிரியதர்சினி (**B.A.**, கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களம், மாகாணப் பணிப்பாளர் அலுவலகம்), பிலிப்பிறேமதாசன் (**B. Com.**, கெயர் நிறுவனம், பரந்தன், கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தாயும் யஸ்தஸ் கிறிஸ்ரி (உரிமையாளர், அன்ரோ றெக்ஸ்ரைல்ஸ், திருகோணமலை), யூலியானா ஆகியோரின் அன்பு மாமியும் அன்ரோ வரப்பிரகாசத்தின் அன்புப் பேர்த்தியும் நீற்றம்மா, அஞ்சலீனா, பெனடிற், யோசேப், செல்வரத்தினம், கிறிஸ்தோப்பர் ராஜநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் **Dr.**அருளப்பன், சாந்தப்பர், மங்களேஸ்வரி, மரியகொறற்றி, மேரி அன்னம்மா, சுதா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (16.04.2006) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்று, பூதவுடல் புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புனித அந்தோனியார் வீதி,*
*சுன்னாகம்.* (49507) (24-11-19)

தகவல்:
**மகள்.**

**BIT Syllabus Included**

Restricted 15 Members only in a batch

50% Concession

**Next Batch starts on 22/04/2006**

MCSE, CCNA, CCNP, CCIE மற்றும் A+ பரீட்சைகளுக்கான இலவச ஒழுங்கமைப்பு

Hardware & Networking
பயிற்சிகளுக்கு பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட செய்முறை பயிற்சிக்கூடம்.

100% உள்நாட்டிலோ / வெளிநாட்டிலோ வேலைவாய்ப்பு ஒழுங்குகள்

Valuable course materiel Free

100% Practical oriented field training centre

An Indian Engineers study centre

பயிற்சிகள் பற்றிய விபரங்களுக்கு தொடர்பு நிர்வாகம்

Near Jaffna Hindu College,
Opp Lane to PandiKottu Pillayar Kovil,
K.K.S. Road, Opp Lane to Velankanni Church,
Kasthuriyar Road,
Jaffna.

**UNIT Education**
16/1, Kilnar Lane,
Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



ஓவியச் செல்வன், ஓவியச் சுடர்மணி, ஓவியப் பேரொளி, ஓவியக்கலைச்செம்மல், கலைஞானச்சுடர் குகஸ்ரீ கலாபூஷணம்

**பெரியதம்பி சுப்பிரமணியம்**

(ஆட்டிற்ஸ் மணியம்)

ஈழ மண்ணின் ஓவியப் பெருமையினை
இலங்கையிலும், இந்தியாவிலும், உலகிலும் மிளிர வைத்தவரே!
ஓவியத்தில் வானுயர் சாதனை படைத்வரே!
ஓவியம் என்றால் 'ஆட்டிஸ்ற் மணியம்' என்று சொல்லும்
அளவிற்கு - ஓவியத்துக்கு உதாரணபுருஷன் ஆனவனே!
உங்கள் புகழ் என்றும் நிலைத்திருக்கும்!
உங்கள் நாமம் ஈழத் தமிழர்களின் வரலாற்றில்
ஓவியத்துறையில் நிலையான நாமமாக முன்னிலை
வகிப்பது எமக்கெல்லாம் பெருமை சேர்ப்பதே!
அன்னாரின் ஆத்ம சாந்திக்காக நல்லூர்க் கந்தனைப்
பிரார்த்திக்கின்றோம்.

கொழும்பு. (49520) (54-45-15) குடும்ப நண்பர்கள்.

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

**தவேந்திரன்-கார்த்தீபன்**

தோற்றம் 07.12.1992 — மறைவு 09.04.2001

*16.04.2006*

"அன்பினால் எமை வென்ற அன்புச் செல்வம் கார்த்திபா!
நீ ஆண்டவன் பாதம் சென்று ஐந்து ஆண்டுகள்
சென்று மறைந்து ஓடிப்போனாலும் - எம்
நெஞ்சில் உன் நினைவுகள் என்றும் அழிந்து போகாது"
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

சந்தை வீதி,
இமையாணன்,
உடுப்பிட்டி. (49524) (54-45-15)

என்றும் உன் நினைவுகளோடு வாழும்
அ.தவேந்திரன் (சோக்கர்)
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



வட்டு. கிழக்கு சித்தன்கேணி 'ஜனசக்தி' சனசமூக நிலையத் தலைவர்

அமரர்

**கந்தையா மணிராசா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது நிலையத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வட்டு. கிழக்கு,
சித்தன்கேணி. (49529) (54-45-15) ஜனசக்தி சனசமூக நிலையம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திரு.நமசிவாயம்
அவர்களின் அன்பு மாமி

**திருமதி கார்த்திகேசு செல்லம்மா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(49530) (54-45-15)

ஆசிரியர் கழகம்
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## மரண அறிவித்தல்

### போதகர் சாம் விக்கிரமரட்ணா



இலங்கை அப்போஸ்தல சபையின் முன்னாள் தலைவர், அப்போஸ்தலரும், போதகரு மாகிய சாம் விக்கிரமரட்ணா அவர்கள் (14.04.2006) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னாரின் அடக்க ஆராதனை 18.04.2006 செவ்வாய்க்கிழமை நண்பகல் ஒரு மணியளவில் மொறட்டுவ அப்போஸ்தல சபையில் நடைபெற்று பின்பு மாதம்பிட்டிய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை எல்லா தேவ ஊழியர்களும், சகல சபையாரும் ஏற்றுக்கொள்ளவும்.

அப்போஸ்தல சபை,
மொறட்டுவ.
0112645580, 0112641449 (49532) (54-45-15)

தகவல்:
வட பிராந்திய
அப்போஸ்தல சபையார்.

## மரண அறிவித்தல்

### குழந்தைவேலு விஸ்வலிங்கம்

(பொன்னுக்கோன் மாஸ்ரர்-ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)



பிறவுண் வீதி, நீராவியடியைப் பிறப்பிடமாகவும் ஊர்காவற்றுறை-புளியங்கூடலை வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேலு விஸ்வலிங்கம் அவர்கள் நேற்று (15.04.2006) சனிக்கிழமை மாலை அமரத்துவமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குழந்தைவேலு-தங்கம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற சின்னத்துரை-வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்லத்துரை ஓவசியரின் சகோதரனும் சந்திரமணி, வள்ளிநாயகி, கதிர்காமநாதன், விக்னராஜா (சுவிஸ்), கேதீஸ்வரன் (ஜேர்மனி), கலேஸ்வரன் (பொறியியலாளர் கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவராஜா (முன்னாள் அதிபர் யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்), சிவராசா (கொழும்பு), ஜெகதீஸ்வரி, மல்லிகா (சுவிஸ்), சோதீஸ்வரி (ஜேர்மனி), சந்திரவதனி (கனடா), ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான முருகேசு, கந்தையா மற்றும் செல்லப்பா, காலஞ்சென்ற சரவணமுத்து ஆகியோரின் மைத்துனரும் சசிகா (இறுதியாண்டு சித்தமருத்துவத்துறை யாழ். பல்கலைக்கழகம்), பிரதீபன் (பொறியியல்துறை கனடா), வினுதீப் (தொழிநுட்பக்கல்லூரி), சிவகீசன் (2005 வர்த்தகப் பிரிவு கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜெயகீசன் 2006 கணிதப் பிரிவு கொக்குவில் இந்துக் கல்லூரி), உதயகீசன் (யாழ். மத்திய கல்லூரி), கார்த்திகா (2005 கலைப் பிரிவு இந்து மகளிர் கல்லூரி), (சோபிகா இந்து மகளிர் கல்லூரி), கௌசிகா (யாழ். வண். நாவலர் மகாவித்தியாலயம்), சுவிஸைச் சேர்ந்த விமல், விதுஷா, விதுஷன், ஜேர்மனியைச் சேர்ந்த ஆகாஷ், அகல்யா, கனடாவைச் சேர்ந்த காருணி, சின்மஜி ஆகியோரின் அருமைப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2006) ஞாயிற்றுக்கிழமை 89/9, பிறவுண் வீதி, நீராவியடியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 3மணிக்கு கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(49535)

89/9, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள ஸ்ருடியோவுக்கு பில்கிளார்க், வெளிப்படப் படப்பிடிப்பாளர், படப்பிடிப்புப் பயிற்சியாளர் தேவை. இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

நேரில் தொடர்பு கொள்ளவும்.
பண்டிக் கோட்டுப்பிள்ளையார்
கோயில் முன்பாக
604, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம் (49531)

## அஸ்ரன் கல்வி நிலையம்

நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

தரம் 01முதல் O/L வரையாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் எமது கல்வி நிலையத்திற்கு தரம் 06 முதல் O/L வரையிலான சகல பாடங்களுக்குமான ஆசிரியர்கள் தேவை.

தகைமையுடையோர் 20.04.2006
இற்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.
T.P.:02 1222 6141 (49433)


**ராஜா** யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
பரத், மல்லிகா கபூர் நடித்த

**அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது**

10.30,2.30,6.30,9.30, ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

**நாகம்ஸ்** சுன்னாகம்

புதுவருட வெளியீடாக ஜீவா, சந்தியா
மற்றும் பலர் நடித்த

**டிஸ்யூம்**

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00, 10.00

**[illegible]** யாழ்ப்பாணம்

எஸ்.ஜே.சூர்யா, நயன்தாரா, விவேக் நடித்த

**கள்வனின் காதலி**

[illegible] 10.30, 2.30, 6.30, 9.30


## மரண அறிவித்தல்கள்

### தம்பாபிள்ளை செல்வரத்தினம் (முருகையா)

(ஓய்வுபெற்ற பொறியியலாளர், பெருந்தெருக்கள் திணைக்களம்)



கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் கட்டுவனைப் புகுந்த இடமாகவும் தற்போது லண்டனில் வாழ்ந்துவந்தவருமான தம்பாபிள்ளை செல்வரத்தினம் (முருகையா) அவர்கள் 14.04.2006 வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் மங்களபூபதியின் (பேபி, ஆசிரியர்) பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான தம்பாபிள்ளை-தங்கம்மா தம்பதியரின் பாசமிகு இளைய மகனும் காலஞ்சென்றவர்களான குட்டித்தம்பி-இராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் நிரூபன் (விஜி), துஷானி (சுஜி), சொரூபன் (ரெஜி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான முத்தையா, சுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), நேசம்மா, துரைராஜா மற்றும் இராசமணி, கனகம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை), பாலசிங்கம் (ஓய்வுபெற்ற தபால் உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், லண்டனில் வசிப்பவர்களான பத்மாவதி, கணேசலிங்கம், மல்லிகாதேவி, இந்திராணி, சந்திரமலர், சந்திராதேவி, கருணாகரன், கிருபாகரன், தேவக்குஞ்சரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஸ்ரீஸ்கந்தநேசனின் பாசமிகு மாமனும் தனுஜனின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (16.04.2006) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

S.Nirooban
44, Consfield Avenue,
New MAlden
Surrey KT3 6HD
U.K. T.P.: 00442089494748 (49528) (54-45-15)

தகவல்:
மாதினி இராஜலிங்கம்
(மருமகள்)
கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு.

### சீனியர் வேலுப்பிள்ளை



மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும் சோமசுந்தரம் அவனியு யாழ். நகரை வசிப்பிடமாகவும் கொண்ட சீனியர் வேலுப்பிள்ளை அவர்கள் கடந்த (12.04.2006) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நவமணியின் அன்புக் கணவரும் தமிழ்ச்செல்வி (செல்வா), சந்திரமோகன் (மோகன்), தயாபரன் (தயா), கலைச்செல்வி (கலா), வசீகரன் (வசீ) ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரராசா, கௌசல்யா, பாலராஜ், பிறேமளா ஆகியோரின் மாமனும் அனுராஜ், நத்தாலி, மதன்ராஜ், சிந்துப்பிரியா, சரனியா, தீபிக்கா, பிரவீதா, கேவின் ஆகியோரின் அருமைப் பேரனும் வேயாவின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

35, சோமசுந்தரம் அவனியு,
யாழ்ப்பாணம். (49526) (54-45-15)

தகவல்:
வசீகரன் (வசீ)
(மகன்).

### திருமதி சின்னத்தம்பி செல்லாச்சி

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி செல்லாச்சி அவர்கள் நேற்று (15.04.2006) சனிக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை-சின்னக்குட்டி தம்பதியரின் அருமை மகளும் அமரர் சின்னத்தம்பியின் பாசமிகு மனைவியும் இராஜரட்ணம், அன்னலட்சுமி, ஸ்ரீராஜ லெட்சுமி, சந்தானலெட்சுமி, மகாலிங்கம் (ஜேர்மனி), இராஜலிங்கம் (இந்தியா), சிவலிங்கம் (கனடா), தனலெட்சுமி, ஜெயலெட்சுமி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், நவரட்ணம் காலஞ்சென்ற புஸ்பராசா, நல்லையா, மகாலிங்கம், ஜெயராணி (ஜேர்மனி), கௌரி (இந்தியா), செல்வராணி (கனடா), குலசேகரம், ஜேசுதாசன் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2006) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

445, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (49504) (54-45-15)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

### சிவராசா மயூரன்



ஏழாலையைப் பிறப்பிடமாகவும் 9/6, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்ற தற்காலிக முகவரியைச் சேர்ந்த சிவராசா மயூரன் அவர்கள் 14.04.2006 வெள்ளிக்கிழமை அகால மரணம் அடைந்துவிட்டார்.

அன்னார் சிவராசா- இராசமலர் தம்பதியரின் அன்புப் புதல்வனும் சந்திரிக்கா, யதுசன் (மத்திய கல்லூரி மாணவன் A/L 2007), டனுசா (இந்து மகளிர் கல்லூரி O/L மாணவி), ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற மாரிமுத்து கமலம், கனகரட்ணம், செல்லமுத்து ஆகியோரின் அன்புப் பேரனும் ஆறுமுகம் ராணி (கொழும்பு), சிவமணி ரஞ்சினி (கொழும்பு), கணேசமூர்த்தி சசிகலா (கொழும்பு), கனகராசா ஜொய்சி (பதுளை), அருணாச்சலம் நாகநந்தினி (லண்டன்), ரவிக்குமார் பிறேமிலாதேவி (கொழும்பு), செல்வராஜ் மேரி (லண்டன்), றோஸ்மலர், விக்னேஸ்வரி (கனடா) ஆகியோரின் பெறாமகனும் காலஞ்சென்ற இராசரெத்தினம் (தம்பாலை), ஜெயரெட்ணம் (ஏழாலை) ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக்கிரியைகளின் பின்னர் தகனக்கிரியைகளுக்காக இன்று (16.04.2006) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 9/6, 4 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (49533) (54-45-15)

தகவல்:
சிவராசா குடும்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராளி வீரச்சாவு

கிளிநொச்சி,ஏப்.16

மன்னார், தட்சணாமருதமடுப் பகுதியில் ஸ்ரீலங்காப் படையின் ஆழ ஊடுருவும் பிரிவினர் நடத்திய கிளைமோர் தாக்குதலில் போராளியான இசைவாணன் (முத்துராசா ஜெயந்தன் - ஓமந்தை) என்பவர் வீரச்சாவடைந்தார் எனப் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (ஐ)

# இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலை நகரம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இரவு நேர ஊரடங்கு அமுல் செய்யப்பட்டுள்ளது. நேற்று மாலை 6 மணிக்கு அமுலுக்கு வந்த ஊரடங்கு உத்தரவு இன்று காலை 6 மணிக்கு நீக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

(ஐ-3-14)(22)

# கடைக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகனை ஆயுதபாணிகள் சுடுவதைக் கண்டு ஓடிச்சென்று தடுக்க முயன்ற தந்தையாரான செபமாலை தேவராசா (வயது-58) என்பவரை நோக்கியும் ஆயுதபாணிகள் சுட்டனர். அவருக்கு தலையிலும் கையிலும் குண்டுகள் பாய்தன. தலையில் சுடப்பட்ட மகன் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். படுகாயங்களுடன் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட தந்தையார் பின்னர் அங்கிருந்து யாழ். போதனா மருத்துவமனைக்குக் கொண்டு விரைவப்பட்டார். உயிரிழந்த இளைஞனின் சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து பருத்தித்துறைப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது. பெரும் எண்ணிக்கையான படையினர் வீதிகளில் சோதனைநடவடிக்கைகளைத் தீவிரப் படுத்தினர்.

இதேவேளை -

வடமராட்சியின் பல பகுதிகளிலும் படையினரின் வீதிச் சோதனைகள் அதிகரித்துள்ளன. போக்குவரத்துச் சபை பஸ்கள் உட்பட சகல வாகனங்களும் படையினரால் சோதனை செய்யப்படுகின்றன.

(ஐ-173-70-14-15)(30)

# கிழக்குத் தளபதிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த சுற்று ஜெனீவா பேச்சுவார்த்தைக்கு முன்பாக கிழக்குத் தளபதிகளுடன் விடுதலைப் புலிகளின் தலைமை முக்கிய ஆலோசனைகளை நடத்த வேண்டி இருந்ததால் அவர்களை வன்னிக்குப் பாதுகாப்பாக அழைத்துவருவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு புலிகள் நோர்வேயிடம் கோரி இருந்தனர்.

புலிகளின் கிழக்குத் தளபதிகள் வன்னி வந்து திரும்பிய பின்னரே அடுத்த சுற்றுப் பேச்சு இடம்பெற முடியும் என்ற நிலைமை உருவானதால் பேச்சுக்களை ஒத்திவைப்பதற்கும் இணக்கம் காணப்பட்டது.

கண்காணிப்புக்குழு தனது ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யும் கடற்கலங்களில் ஆயுதங்கள் இன்றி விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதிகள் வன்னி வந்து திரும்பலாம் என்று முன்வைக்கப்பட்ட யோசனையைப் புலிகள் ஏற்றுக்கொண்டனர். இரு தரப்பு இணக்கப்பாட்டுடன் கண்காணிப்புக்குழு தனது பயணத்திட்டத்தை வகுத்தது.

இணக்கம் காணப்பட்ட அந்தப் புதிய திட்டத்தின் படி -

புலிகளின் கிழக்குத் தளபதிகள் கிழக்கில் இருந்து பயணிப்பதற்கான கப்பலை கண்காணிப்புக்குழுவே ஒழுங்கு செய்தது.

கிழக்கில் உள்ள புலிகளின் தளபதிகளான கேணல் பானு, கேணல் சொர்ணம் ஆகியோர் வன்னிக்கு வந்து செல்லும் காலப் பகுதியில் அவர்களுடைய பொறுப்புகளைக் கவனிப்பதற்காக கேணல் ஜெயம், கேணல் தீபன் ஆகியோர் முல்லைதீவில் இருந்து கிழக்கே புறப்படவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை மற்றும் கண்காணிப்புக் குழுவினர் சகிதம் கேணல் ஜெயமும், கேணல் தீபனும் போராளிகள் சகிதம் நேற்றுக்காலை முல்லைத்தீவு கரையை அடைந்தனர். அங்கிருந்து அவர்களைக் கிழக்குக்கு ஏற்றிச் செல்வதற்கும் பின்னர் கிழக்குத் தளபதிகளை இங்கு ஏற்றிவருவதற்குமாக 'சேருவில - 2' என்ற கப்பலை கண்காணிப்புக்குழு ஒழுங்கு செய்தது.

பயணத்திட்டதின் படி புலிகளின் தளபதிகள் முல்லைத்தீவுக் கரையில் இருந்து தங்கள் படகுகளில் சென்று கடலில் நங்கூரமிட்டு நின்ற கப்பலில் ஏறிக்கொண்டனர். ஆனால், கண்காணிப்புக்குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்ட அந்தக் கப்பலுக்கு - கடற்படை எந்தவிதத்திலும் தலையிடாது என்று காணப்பட்ட இணக்கத்துக்கு மாறாக - கடற் படையின் டோறாப் படகுகள் பாதுகாப்பு வழங்கும் வகையில் கடலில் ரோந்து வந்தன என்றும் -

கடற்படைப் படகுகளில் இருந்து கப்பலின் கப்டனுக்கு அறிவுறுத்தல்கள் விடுக்கப்படுவதை தாங்கள் வழிமறித்துக் கேட்டதாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

கப்பலைச் சுற்றி நான்கு டோறாப் படகுகள் தரித்து நின்றன. அவற்றில் இருந்து இருபது தடவைகளுக்கும் மேலாக கப்பல் கப்டனுடன் தொடர்பு ஏற்படுத்தப்பட்டதைப் புலிகள் அறிந்துகொண்டு உஷாரடைந்தனர்.

கப்பலைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டு அதன் பயண வழியையும் தாங்களே தீர்மானித்துப்பணிப்புரை வழங்கும் விதமாக கடற்படையினர் செயற்படுவது தெரியவந்ததும் தளபதிகளும், போராளிகளும் கப்பலை விட்டு இறங்கி வெளியேறிவிட்டனர். இதனால் கிழக்குத் தளபதிகளுக்கான பயணத்திட்டம் குழம்பிப் போனது.

இணக்கப்பாட்டுக்கு மாறாக கடைசி நேரத்தில் கடற்படையினர் செய்த குறுக்கீடுகள் குறித்து விசனமடைந்த புலிகள் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் அதுபற்றி முறையிட்டனர்.

### கண்காணிப்புக்குழுவின் தலைவருக்குக் கடிதம்

கப்பல் பயண ஏற்பாடு குழம்பியது குறித்து விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு உடனடியாகவே கடிதம் ஒன்றை அனுப்பிவைத்தார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது :-

எங்கள் தளதிகளின் கடற்பயணம் தொடர்பாக 13 ஏப்ரல் 2006 இல் உங்களுக்கு அனுப்பட்ட கடிதத்தில் விதந்துரைக்கப்பட்ட பயண ஒழுங்கிற்கு முற்றிலும் மாறாக இன்ற 15 ஏப்ரல் 2006 எங்கள் தளபதிகள் முல்லைத்தீவுக் கரையில் பயணத்திற்கு ஆயத்தமாகும்போது இடம்பெற்ற - உங்களுடனான இணக்கப்பாட்டிற்கு விரோதமான - சம்பவங்கள் பற்றி உங்கள் உடனடிக் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

ஜெனீவாப் பேச்சுகளுக்குச் செல்வதற்கு முன்பு எமது தலைமைப்பீடத்தினது மத்திய குழு சந்திக்கவேண்டும் என்பது பற்றியும் அதன் அவசியம் பற்றியும் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக உங்களிடம் வலியுறுத்தி வந்தமையை நீங்கள் நன்கு அறிவீர்கள். அதே போன்று அனுசரணையாளர்கள் என்ற வகையில் நோர்வேத் தூதுவர், நோர்வேயின் விசேட தூதுவர்களின் கவனத்திற்கும் கொண்டு சென்றமையும் அவர்கள் இதற்கான ஏற்பாடுகளை உடன் ஒழுங்குசெய்ய முயற்சிப்பதாகக் கூறியமையையும் நினைவுபடுத்த விரும்புகிறோம்.

ஆனால், ஒரு மாதகாலமாக எந்தவித சாதகமான பதில்களையும் தெரிவிக்காது காலத்தை இழுத்தடித்துவிட்டுப் பேச்சுவார்த்தைக்கான திகதிகள் நெருங்கிய நிலையில் எமது வழமையான அனைத்துப் போக்குவரத்து ஏற்பாடுகளையும் நிராகரித்து எமது தலைமைப்பீடத்திற்குப் பாரிய இக்கட்டையும் நெருக்கடிகளையும் சிறிலங்கா அரசாங்கம் ஏற்படுத்தியமையை நீங்கள் நன்கறிவீர்கள்.

இந்த இக்கட்டமான நேரத்தில்தான் நீங்கள் ஒரு தற்காலிகமான உடனடி ஏற்பாடாக முழுமையாகக் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டோடு கடற்படையின் எந்தத் தலையீடுமின்றி எமது தளபதிகளினது போராளிகளினதும் பாதுகாப்பான போக்குவரத்தை ஒழுங்கு செய்வதாகவும் அதற்கான நடைமுறைகளைக் கரையிலிருந்து கண்காணிப்புக்குழு ஒழுங்குபடுத்தும் கப்பல்வரை எமது கடற்கலங்களில் சென்று ஏறுவதற்கும் [illegible]ய பின் முழுமையாகவே கண்காணிப்புக்குழுவால் ஒழுங்குபடுத்தப்பட்ட கப்பலில் [illegible]ர்களின் பூரண பாதுகாப்பு வழித்துணையுடன் பயணிப்பதாகவும் எந்தவிதமான கடற்படை யினது பிரசன்னமோ, குறுக்கீடோ இருக்காது எனவும் அதேபோல் இறங்கும் இடத்திலும் இதே நடைமுறையைப் பேணுவதாகவும் வாக்குறுதியளித்திருந்தீர்கள்.

உங்கள் உறுதிமொழியை நம்பியே எமது தளபதிகள் இன்று (சனிக்கிழமை) அதிகாலையில் பயணிப்பதற்கான முழு ஏற்பாடுகளோடும் சமுகளித்திருந்தவேளை எமக்கு அளிக்கப்பட்ட உறுதிமொழிகளுக்கு முரணாக கரையிலிருந்து செல்வதற்கு சிவில் படகு ஒழுங்குபடுத்தவேண்டும் எனவும் கண்காணிப் புக்கு [illegible] ஒழுங்குபடுத்தும் கப்பலை விடு தலைப் புலிகளின் படகு எனக் கருதி கடற் படை வழித்துணை வழங் கும் என்று புதிய - ஏற்றுக்கொள்ள முடியாத - நிபந்தனைகளை விதித்தமை எமது தளபதி களின் பயண ஒழுங்கை இல்லாது செய்துள் ளது. இதனால் கண்காணிப்புக்குழுவின் வாக்குறுதிகள் மீதான நம்பிக்கையை இழக்கச் செய்ததுடன் சிறிலங்கா அரசினதும் படைத் தரப்பினதும் சமாதானத்திற்கு விரோதமான போக்கை மீண்டும் அனைவருக்கும் அம்பலப்படுத்தியுள்ளது.

கண்காணிப்புக்குழுவினால் ஒழுங்குபடுத்தப்பட்ட கப்பலுக்கு அண்மையில் கடற்படையின் 04 டோறாப் படகுகள் தரித்திருந்தன. அதிலிருந்து கடற்படையினர் 20 தடவைக்கு மேலாக கண்காணிப்புக்குழுவினால் ஒழுங்குபடுத்தப்பட்ட கப்பலின் கப்டனைத் தொடர்புகொண்டு தமது அனுமதி இன்றி கரைக்குச் செல்லவேண்டாம் என்று பணித்ததுடன் புறப்படுவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்னர் தமக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றும் கட்டளையிட்டனர். இறுதியாக நேரம் போய்விட்டதால், கப்பலில் ஏறியுள்ளவர்களுடன் புறப்படுமாறும் கடற்படையினர் பணித்துள்ளனர்.

இந்தக் கப்பலைக் கடற்படையினரே துறைமுகப் பொலீஸாருடாக ஒழுங்குபடுத்தியுள்ளதுடன் இதற்கான எரிபொருளையும் கடற்படையினரே நிரப்பியுள்ளனர். திருமலைத் துறைமுகத்திலிருந்து கடற்படையினரின் டோறாவே இக்கப்பலை வழிகாட்டி முல்லைத்தீவிற்கு அழைத்துவந்துள்ளது. இக்கப்பலின் கப்டன் கடற்படையினரின் கட்டளைகளுக்கு அமைவாகவே செயற்பட்டார். இவையாவும் நாம் கண்காணிப்புக்குழுவினருடன் ஏற்படுத்திய உடன்பாட்டிற்கு முற்றிலும் முரணானவையாகும்.

இச்செயற்பாடானது எமது தலைமைப் பீடத்தை ஆத்திரமடையவும் ஏமாற்றமடையவும் செய்துள்ளது. அதேவேளை, அடுத்த கட்ட ஜெனீவாப் பேச்சிற்கு செல்வதற்கு முன்பாக எமது தலைமைப்பீடம் கூடி முடிவெடுக்கும் சூழலையும் முற்றாக இல்லாமல் செய்துள்ளது.

ஒருபக்கம் சமாதானப் பேச்சிற்கு ஆயத்தமாக இருப்பதுபோல அறிவிப்புக்களைச் செய்துகொண்டு இருதரப்பும் ஏற்றுக்கொண்ட யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு விரோதமாகச் செயற்படுவதோடு விடுதலைப் புலிகளைப் பேச்சுமேசைக்குச் செல்லவிடாது தடுப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் அரச படைகள் தீவிரப்படுத்தியிருப்பதையே இந்நடவடிக்கை எமக்கு உணர்த்தியுள்ளது.

இதுவரைகாலமும் இருந்த நல்லெண்ண நடைமுறைகளையும் நிராகரித்து யுத்தநிறுத்த சூழலை இல்லாதொழித்து, மிகமோசமான நிலைமையை உருவாக்குவதற்கு அரசு முயல்கிறதோ என்ற பலமான சந்தேகத்தையும் இந்த நடவடிக்கை எமக்கு உணர்த்தியுள்ளது.

இது ஜெனீவாப் பேச்சுகளுக்குச் செல்வதற்கான எமது தீர்மானங்களையும் முயற்சிகளையும் கேள்விக் குறியாக்கியுள்ளதோடு இத்தகைய துரதிஷ்டவசமான சூழ்நிலைக்கு முழுக்கமுழுக்க சிறிலங்கா அரசினதும் படைகளினதும் உடன்பாடுகளுக்கு விரோதமான போக்கே காரணமாக அமைந்துள்ளது என்பதையும் சுட்டிக்காட்டுகிறோம்." என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)(30)

## மரண அறிவித்தல்

### ஜோசவ் திரேசம்மா

கொழும்புத்துறையை வசிப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற ஜோசவ் (மணி) அவர்களின் அன்பு மனைவி திருமதி ஜோசவ் [illegible]ரேசம்மா அவர்கள் நேற்று (15.04.2006)சனிக்கிழமை கர்த்தருக்குள் இளைப்பாறுதல் அடைந்துவிட்டார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (16.04.2006) சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் நல்லடத்திற்காக இலங்கை, பெந்தகோஸ்தே சபை கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

35, ஆனந்தன் வடலி வீதி,
கொழும்புத்துறை. (49536)

தகவல்:
ஜோன்சன் (மகன்).


SKY COMPUTERS (PVT) LTD.
Affiliated with Irish International University (U.K)
No. 89, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel: 021 - 4590325 : Fax: 021 - 4590325

MS OFFICE - 2 MONTHS
MS-WORD - 1 MONTH
MS-EXCEL - 1 MONTH
MS-ACCESS - 1 MONTH
MS-POWER POINT - 1 MONTH
MS-Office 2000/=
DESK TOP PUBLISHING - 2 MONTHS
ADOBE PHOTOSHOP - 1 MONTH
ADOBE PAGEMAKER - 1 MONTH
CORELDRAW - 1 MONTH
INTERNET & EMAIL
COMPUTERSED ACCONDING HARD WARE TECHNOLOGY 3 MONTHS
KIDS PROGRAM சிறுவர்களுக்கான பயிற்சி நெறி
E - mail : skycom@WOW.lk
Today you learn Tomorrow you lead

மாபெரும் இரசாயனவியல் கருத்தரங்கு
"D Block elements"
Tue.(18.06), Wed.(19.06) 9 a.m.
"Hybridization"
Thurs - 9 a.m.
"அசேதன உப்புக்களின் பண்பறிபகுப்பு"
Fri - 9 a.m.
இடம்: NEW SCIENCE CENTRE
வெளிமாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்
By: அன்பழகன் B.Sc.

NEW SCIENCE CENTRE
A/L 2007
ORGANIC
ஆரம்பம்: 17.04.2006 Mon. 9 a.m.
By: அன்பழகன் B.Sc.

SPOKEN ENGLISH WITH GRAMMAR AND G.A.Q. PAPER CLASS
By: A.BRITTO
காலம்: 18.04.2006 (புதன்கிழமை)
நேரம்: காலை 8.30
இடம்: கொக்குவில் ஞானபண்டிதர் பாடசாலைக்கு அருகில்.


EXPOAIR எக்ஸ்போ எயார்
your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.04.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# யாழ்ப்பாணத்தில் மூன்றாவது வருடத்தைக் கொண்டாடும் பி.ஸி. ஹவுஸ்

பி.ஸி. ஹவுஸ் நிறுவனத்தின் யாழ்ப்பாணக்கிளை அண்மையில் அதன் மூன்றாண்டு நிறைவை வெற்றிகரமாகக் கொண்டாடியது. கடந்தாண்டில் 90% விற்பனை வளர்ச்சியோடு இந்த மூன்றாவது நிறைவு கொண்டாடப்பட்டுள்ளமை ஒரு சிறப்பம்சமாகும்.

கம்பனியின் வளர்ச்சியில் இதனை ஒரு மைல்




கல்லாகக் குறிப்பிட்ட பி.ஸி. ஹவுஸ் நிறுவனத் தலைவர் எஸ்.எச். மொஹமட் றிஷான் ''யாழ்ப்பாண மக்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையை இது புலப்படுத்துகின்றது. அத்தோடு தகவல் தொழில்நுட்ப அறிவு யாழ்ப்பாண மக்களுக்கு எந்தளவுக்குத் தேவைப்படுகின்றது என்பதையும் இது சுட்டிக்காட்டுகின்றது. வட பிராந்தியத்துக்கான தகவல் தொடர்பு தொழில்நுட்பத் தீர்வுகளை வழங்குபவர்கள் என்ற வகையில் மிகப் பிந்திய, நவீன தொலைத்தொடர்பு உற்பத்திகளை வழங்க வேண்டும் என்ற எமது ஈடுபாடானது இந்தப் பிராந்திய மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது என்றே நான் கருதுகின்றேன்'' என்று கூறினார்.

யாழ்ப்பாணக் கிளையின் முகாமையாளர் உபைதுஸ் ஸுகூர் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், மிகவும் கஷ்டமான நிலைமைகளிலும் கூட யாழ்ப்பாணத்தின் இளைய நட்சத்திரங்களிடையே குறிப்பாக பின் தங்கிய கிராமப் பகுதிகளைச் சேர்ந்தவர்களிடம் கம்பியூட்டர் அறிவை வளர்க்க எம்மால் முடிந்துள்ளது. இந்த முயற்சியின் ஒரு பகுதியாக நாம் பல பாடசாலைகளுக்கு தகவல் தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்தை வழங்கியுள்ளோம். கிராம மட்டங்களில் பல இலவச கம்பியூட்டர் வகுப்புக்களை நாம் நடத்தியுள்ளோம். மக்களின் ஆற்றல்களை மேம்படுத்துவதற்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதோடு இணைந்ததாக நாம் இதனைச் செய்துள்ளோம்'' என்றார்.

யாழ்ப்பாண பி.ஸி. ஹவுஸ் கிளை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நகர மையப்பகுதியில் அமைந்துள்ளது. மாணவர்கள் முதல் தொழில்சார் நிபுணர்கள் வரை இங்கு வரும் சகல தரங்களையும் சேர்ந்த வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தகுதியும் அனுபவமும் வாய்ந்த அதிகாரிகள் இங்கு சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

''யாழ்ப்பாணத்தில் இந்தத் தொழில் முயற்சியின் வெற்றியானது, இந்த நாட்டின் சமாதானச் செயற்பாடுகளோடு நேரடித் தொடர்பு கொண்டது. அண்மையில் இடம்பெற்ற ஜெனிவாப் பேச்சுக்களின் பின் நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படும் என்ற நம்பிக்கை வர்த்தக சமூகத்திடம் மலர்ந்துள்ளது. தகவல் தொழில்நுட்ப அறிவை வளர்த்து மேம்படுத்திக் கொள்வதில் யாழ்ப்பாண மக்கள் அதீத ஆர்வத்தை வெளிக்காட்டி வருகின்றனர். மிகக் குறுகிய ஒரு காலப்பகுதிக்குள் நாட்டின் சகல பாகங்களிலும் அறிவை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகத்தினைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற எமது தீரநோக்கு கொண்ட சிந்தனையோடு சமாந்தரமாக இது செயற்படுகின்றது'' என்று றிஷான் மேலும் கூறினார்.

PABX பல் ஊடக புரொஜெக்டர்கள், மென்பொருள்கள் உட்பட பல உற்பத்திகளை பி.ஸி. ஹவுஸ் வழங்குகின்றது. வட பகுதியில் இதன் சேவைகளுள் இடத்துக்கு இடம் சென்று வழங்கும் சேவைகள், பராமரிப்பு உடன்படிக்கைகள், பல்வேறு உப உற்பத்திகளின் சந்தைப்படுத்தல் என்பனவும் அடங்கும். வீட்டுப் பாவனையாளர்கள், கம்பனிகள், அரசசார்பற்ற நிறுவனங்கள், பொதுப்பயன்பாடு மற்றும் நிதி நிறுவனங்கள் என குடாநாட்டின் பல்வேறு தரப்பினரையும் வட பிராந்தியம் முழுவதும் பி.ஸி. ஹவுஸின் சேவைகள் சென்றடைந்துள்ளன.


பான்வெல்கட்ட
கோமாரிக்கா

ஆரோக்கியமான, வசீகரமான, மென்மையான சருமத்தை பெற பான்வெல்கட்ட சவர்க்காரத்தை பாவியுங்கள். இது சுருக்கங்கள், வறண்ட தோல் ஏற்படுவதை தடுக்கும்.



பான்வெல்கட்ட
கோமாரிக்கா

விஷக்கிருமிகளை அழிக்கவல்ல ஆயுர்வேத வாசனை சவர்க்காரம்


இது ஒரு சித்தாலேப தயாரிப்பு

**வட புல விநியோகஸ்தர்:-**
**வனிக்கா மெடிக்கல்ஸ்**
**85, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
தொலைபேசி:- 0212226291
தொலைநகல்:- 0212222445
மின்னஞ்சல்:- vanlkaa@sltnet.lk

**உற்பத்தியாளர்:-**
ஹெட்டிக்கொட இன்டஸ்ரீஸ் (பிரை) லிமிட்
33-3 3 ஸ்ரீ தர்மராம வீதி, இரத்மலானை,
தொலைபேசி:- 2736910
தொலைநகல்:- 2735465



சொக்லட், வனிலா சுவையூட்டப்பட்டது




Action
Nutritional Food Drink




போஷாக்கு நிறைந்த பானம்




*Action* இன் போஷணை அனுகூலங்கள்:

*Action* ஆனது 11 கனியுப்புக்கள், 13 விட்டமின்கள், புரதம், காபோவைதிரேற்று, கொழுப்பு அடங்கலாக 27 அத்தியாவசிய போஷணை பதார்த்தங்களை முழுக்குடும்பத்திற்கும் (1 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகள்) வழங்குகின்றது. அத்துடன் *Action* பீற்றா கரோட்டினையும் கொண்டுள்ளது.

தயாரிக்கும் முறை:
சூடாகவோ குளிர்பானமாகவோ நீங்கள் விரும்பியவாறு பருகலாம்.
1) நிரம்பிய இரண்டு கரண்டிகள் *Action* இனை 240ml டம்ளரில் போடவும்.
2) அதற்கு சிறிதளவு இளம் சூடான நீர் சேர்த்து கலக்கவும்.
3) மேலதிக நீர் சூடாகவோ, குளிராகவோ தேவையான அளவு சேர்த்து சுவையான பானத்தை தயாரித்துக் கொள்ளவும்.

Ingredients:
Non - fat milk, whole milk, malto dextrin, whey powder vitamins, minerals and permitted flavour (vanilla or chocolate)

Astron
Manufactured by:
Astron Limited,
688, Galle Road, Ratmalana, Sri Lanka.
Tel: 2636741 Fax: 2636173 E-mail: astron@astron.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோர்வே வெளியேறுமா?

சமாதான முயற்சிகளுக்கு நோர்வே நாடு வழங்கி வருகின்ற அனுசரணை தொடர்பில் ஜேவிபி ஹெல உறுமய போன்ற கட்சிகளும், சில அடிப்படைவாத அமைப்புகளும் தொடர்ந்தும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

நோர்வே நாடானது விடுதலைப்புலிகளுக்கு பக்கச் சார்பாக செயற்படுவதாகவும், தமிழர்கள் ஈழத்தை பெறுவதற்கு உதவி செய்வதாகவும் இந்த அடிப்படைவாதிகள் கூச்சலிட்டு வருகின்றனர்.

ஆனால் நோர்வே நாடானது அன்றைய இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அழைப்பின் பேரிலேயே அனுசரணைப்பணிக்கு முன்வந்தது.

அதேபோல விடுதலைப்புலிகளும் நோர்வேயின் அனுசரணைப்பணிக்கு இணங்கியிருந்தனர். அந்த வகையில் இலங்கைத்தரப்புகளால் அழைக்கப்பட்ட மத்தியஸ்தரான நோர்வே நாட்டினை தற்போது எதிரிகளாகவும், துரோகிகளாகவும் சித்தரித்து வெளியேறக் கோருவது சிந்திக்க வேண்டிய விடயமாகவுள்ளது. விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகளாக கருதி, மத்திய அரசாங்கத்தின் முடிவுகளை அனுசரித்து செயற்பட்டால் மாத்திரமே யாரையும் இந்த அடிப்படைவாதிகள் மத்தியஸ்தராக ஏற்றுக் கொள்வர். 1987இல்இலங்கை இனப்பிரச்சினையில் தலையிட்ட இந்தியா தமிழர் தரப்பிற்கு எதிராக செயற்பட்டதனால்தான் இந்த அடிப்படைவாதிகள் பின்னர் இந்தியாவை ஆதரிக்க காரணமாக அமைந்தது.

- என். ஜீவேந்திரன்

நோர்வே நாட்டைப்பொறுத்தவரை சிற்சில குறைபாடுகள் காணப்பட்ட போதிலும் இரு தரப்பையும் சமமாக மதிக்கின்ற பண்பினை வெளிப்படுத்துவது முக்கியமானதாக அமைகிறது. அரசாங்கம் என்பதற்காக அவர்களது சகல செயற்பாடுகளையும் நோர்வே நியாயப்படுத்த வேண்டும் என எதிர்பார்ப்பது தவறானதாகும். அவ்வாறு செயற்பட்டால் நோர்வே நாடானது விடுதலைப்புலிகளது நம்பிக்கையை இழக்க வேண்டிவரும். அதேபோல விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டால் அரச தரப்பின் நம்பிக்கையை இழக்க வேண்டி வரும். உண்மையில் சந்திரிகா அரசாங்கமோ, ரணிலின் அரசாங்கமோ அல்லது முன்பு நோர்வேயை எதிர்த்த மகிந்தவின் இன்றைய அரசாங்கமோ நோர்வேயின் அனுசரணையை பக்கசார்பானது எனக்கூறவில்லை. அவ்வாறு இருந்தால் அந்நாட்டினை அனுசரணைப் பணியிலிருந்து வெளியேற்றி இருக்கலாம். இனியும் வெளியேற்ற முடியும்.

எனவே, அடிப்படைவாதிகள் தமது சுயநல அரசியல் நோக்கங்களுக்காக சர்வதேசத்திற்கு பூச்சாண்டி காட்ட முற்படுவது கேலிக்குரியதாகவே உள்ளது. மேலும் இவ்வாறான செயற்பாடுகளால் இலங்கை நாட்டின் நன்மதிப்பு சர்வதேச ரீதியாக களங்கத்திற்கு உட்படும் என்பது இயல்பானது. அத்தோடு இதன் சாதகத்தன்மை விடுதலைப்புலிகளுக்கே போய் சேரும் என்பது இவர்களுக்கு விளங்காமலிருப்பதும் புதுமையானதே.

# இலங்கை திராவிட இயக்கம் – சில நினைவுகள்

1957களின் இறுதியில் யாழ் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வடக்கின் ஏனைய பிரதேசங்களிலும் கிளைகளை அமைத்த இலங்கை திராவிட முன்னேற்றக்கழகத்தின் சாதி அமைப்பு முறைக்கு எதிராக கடும் பிரச்சாரத்தை மேற்கொண்டது. 1957 டிசம்பர் 28, 29 ஆகிய தினங்களில் இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம் சமூக சீர்திருத்த மாநாடு ஒன்றினை யாழ்ப்பாணத்தில் நடாத்த திட்டமிட்ட போதிலும் திடீரென ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக இந்த மாநாடு பிற்போடப்பட்டதுடன் இதன் பிரதி விளைவாக பருத்தித்துறை கடற்கரையில் பொதுக்கூட்டம் ஒன்று நடாத்தப்பட்டது. தமிழகத்தைச் சார்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரமுகர்களான நாவலர் நெடுஞ்செழியன், ஈ.வி.கே. சம்பத், பேராசிரியர் க.அன்பழகன் போன்றோர் வருகை தர உள்ளனர் என அறிவிக்கப்பட்டிருந்தமையினால் பெருந்திரளான மக்கள் பருத்தித்துறை கடற்கரை மைதானத்தை வந்தடைந்திருந்தனர். இவ்வாறு கூடிய மக்கள் மத்தியிலே ஓர் கயிறு கட்டப்பட்டிருந்ததுடன் இக்கயிற்றின் இரு மருங்கிலும் மக்கள் கூடியிருந்தனர்.

தமிழகத்தைச்சார்ந்த பேச்சாளர்களுக்கு இந்திய அரசு இலங்கை வர அனுமதியளிக்கவில்லை. எனினும், இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளரை பிரதான பேச்சாளராகக் கொண்டு கூட்டம் நடாத்தப்பட்டது. பெருந்திரளான மக்கள் இளஞ்செழியனின் உரையைக் கேட்க கூடியிருந்ததுடன் கூட்டத்தின் நடுவே கயிறு கட்டப்பட்டு மக்கள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டிருந்தனர். பிரதான உரையை ஆற்றவிருந்த திரு ஏ. இளஞ்செழியன் கூட்டத்தின் நடுவே கயிறு கட்டப்பட்டிருந்ததற்கான காரணத்தை அமைப்பாளர்களிடம் கேட்டறிந்தார். சாதி ரீதியாக மேல் சாதியினர், கீழ் சாதியினருடன்




இரண்டறக்கலக்க விரும்பாததன் காரணமாகவே கயிறு கட்டப்பட்டிருந்தது. இதனையறிந்து திரு. இளஞ்செழியன் தமது உரையின் போது சாதிபிரிவிற்கு காரணமாயுள்ள வர்ணாச் சிரமத்தையும் இந்து மதக்கடவுள்களையும் கடுமையாக விமர்சித்தார். இதனால் வெகுண்டெழுந்த சாதியவாதிகளும், மதவாதிகளும் 'கடவுளை திட்டாதே இந்து மதத்தை சாடாதே' என கோசங்களை எழுப்பி மேடையை நோக்கி கற்களை வீசினர். இதனால் மேடையில் இருந்த யாழ் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயளாளரும் கூட்டமைப்பாளருமான இரா.திருமறவன் (மாணிக்கம்) காயத்திற்குள்ளானார். இதனால் வெகுண்டெழுந்த கீழ்சாதியினர் என கூறப்படுவோர், மேல் சாதியினர் எனக் கூறப்படுவோர் நின்ற பகுதியை நோக்கி கற்களை எறிந்ததுடன், இரு பிரிவினருக்கும் இடையில் கலகம் மூண்டது. இக்கைக்கலப்பு சம்பவம் வடக்குவாழ் தாழ்த்தப்பட்டோர் எனக் கூறப்படும் மக்கள் மத்தியில் ஓர் உத்வேகத்தை அளித்ததுடன் வடகிழக்கு வாழ் மக்கள் மத்தியில் இலங்கை திராவிட முன்னேற்றக்கழகம் பற்றிய நம்பிக்கையையும் ஓங்கச் செய்தது. இதேவேளை அதுநாள்வரை வடகிழக்கு வாழ் மக்கள் மத்தியில் செயற்பட்டு வந்த இயக்கங்களும், அமைப்புகளும் இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிரான துஷ்பிரச்சாரத்தை மேற்கொள்ளவும் ஊக்குவித்தது.

பிற்போடப்பட்ட சமூக சீர்திருத்த மாநாடு 1958 மே. 24, 25 ஆகிய தினங்களில் யாழ் நகர மண்டபத்தில் நடைபெறும் எனும் பிரச்சாரத்தை இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம் மேற்கொண்டது. இக்காலகட்டத்தில் யாழ் வாழ் மக்கள் மத்தியில் பெரும் மதிப்பை பெற்றிருந்த தென்புலோலி புலவர் கந்தமுருகேசனார் இம்மாநாட்டினை நடத்துவதற்கான பொறுப்பினை ஏற்றிருந்தார். இதனால் இலங்கை திராவிட முன்னேற்றக்கழகத்தின் செல்வாக்கு மேலும் உயர்ந்தது. இந்த செல்வாக்கு அதிகரிப்புடன் இலங்கை திராவிட முன்னேற்றக்கழகத்திற்கு எதிரான பிரச்சாரம் முடுக்கிவிடப்பட்டது. தமிழரசுக்கட்சி சார்பான 'சுதந்திரன்' பத்திரிகை, இலங்கை திராவிட கழகம் ஒழுங்கு செய்திருக்கும் மாநாட்டிற்கு எதிரான கருத்துக்களை முன்வைத்தது. இதனை மறுத்து இலங்கை திராவிட முன்னேற்றக்கழகம் வெளியிட்ட துண்டுப்பிரசுரம் ஒன்றில் இம்மாநாட்டைப்பற்றிய செய்தியினையும் மறுபுறத்தில் பின்வரும் செய்தியினையும் வெளியிட்டிருந்தது.

இலங்கை திராவிட முன்னேற்ற கழகத்தின் வளர்ச்சியைக்கண்டு பொறாமை கொண்டு அதை தடுத்து நிறுத்தி விடலாம் என்ற நோக்கோடு, சுதந்திரன் பத்திரிகை அடிக்கடி பொய்யும், புனையும் கலந்து மயானக்குரல் எழுப்பி வருகின்றது. அதன் பிரதிபலிப்பாக 22.12.1957ல் வெளியான சுதந்திரனில் யாழ்நகரில் கூடும் மாநாட்டைக் குழப்பும் வகையில் சூதுச்செய்தியை வாரி வீசியிருக்கின்றது. அப்போலிச்செய்திகளை நம்பி இயக்கத் தோழர்களும் ஆதரவாளர்களும், தங்கள் பணியினின்றும் கொஞ்சமும் நழுவாமல் முன்னிலும் வேகமாக பணியாற்றி யாழ் நகர மாநாட்டை சிறப்பிக்க வேண்டுகிறோம். வெற்றி நமதே!

இவ்வாறான, எதிர்ப்புகளுக்கு மத்தியில், மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்ற இலங்கை திராவிட முன்னேற்றக்கழகம் இக்காலகட்டத்தில் நாட்டின் அனைத்து தமிழ் மக்களையும் தம்வசம் இழுக்கும் வகையிலான தமது கொள்கைத் திட்டத்தினை முன்வைத்தது.

வெ.முத்துலிங்கம் எழுதிய 'எழுதாத வரலாறு - இலங்கை திராவிட இயக்கம் பற்றிய ஆய்வு' எனும் புத்தகத்திலிருந்து பெறப்பட்டது.

## தலைகாட்டல்

எங்களுக்கு
துப்பாக்கிகளில்
அப்படியொரு
பிரியமும் இல்லை

எங்கள் வாழ்வு
துப்பாக்கி
முனைகளால்
சூறையாடப்பட்டது

எனவே
எங்களை
அறியாமலே
அவைகளை
தோள்களில்
சுமக்கும்
தார்மீகம்
தலைகாட்டியது

நீதியை
சிலுவையில்
அறையும்
தீர்ப்புகள் பெருகிய
அநீதிபதிகளின் காலம்
அதுவாயிருந்தது

எங்களின்
துர்ப்பாக்கியங்களை
துரத்துவதற்கு
துணையாகியது
இந்தத்துப்பாக்கிகள்தா
ன்

எங்கள் துப்பாக்கி
முனைகளால்
நியாயம்
தலைகாட்டிக்
கொண்டது.

கு.பா. தீபச்செல்வன்
கிளிநொச்சி
ஆனந்தபுரம்

## இவ்வார விழிப்பில்...

- யுத்தமும் பெண்களும்
- புத்தளம் முஸ்லிம்களும் எதிர்பார்ப்புகளும்
- கலாசாரங்களும் ஒற்றுமையும்
- ஹிக்கடுவை மக்களது வாழ்க்கை நிலை
- கதிர்காமம் - காட்சிக்கோவை
- பலாங்கொடை தமிழர்களது எதிர்பார்ப்புகள்

ரீ.என்.எல் - செவ்வாய் இரவு 7.25 மணிக்கு

## அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

### உறுப்புரை - 24

இளைப்பாறுகைக்கும் ஓய்விற்கும் ஒவ்வொருவரும் உரிமையுடையர். இதனுள் வேலை செய்யும் மணித்தியால வரையறை, சம்பளத்துடனான காலாகால விடுமுறைகள் அடங்கும்.

## கருத்தாடல் களம்

### தமிழர்களுக்கு இரட்டைப் பாதிப்பு

தமிழ் மக்கள் காலங்காலமாக அரச அடக்கு முறைகளுக்கு முகங்கொடுத்து வருகிறார்கள். தனிச்சிங்கள சட்டத்தின் மூலமும், இன்னபிற சட்டங்கள் மூலமும் தமிழர்கள் பாதிப்புகளுக்கு உள்ளானார்கள். பல தடவைகளில் இனக் கலவரங்களுக்கு முகங்கொடுத்தார்கள். மேலும் இன்று வரை பல்வேறு அரசியல், பொருளாதார, சமூக பாதிப்புகளுக்கு உள்ளாகி வருகிறார்கள். இவ்வாறான சூழலில் விடுதலைப்புலிகள் அரசாங்கத்தோடு பேசி ஏதாவது ஒரு தீர்விற்கு வர முயற்சிக்கும்போது சில முஸ்லிம் அரசியல்வாதிகள் அதற்கு எதிராக செயற்படுவது மிகவும் கவலைக்குரியதாகும். உண்மையில் தமிழ் மக்களின் போராட்டத்தோடு ஒன்று சேர்ந்து அரச அடக்குமுறைக்கு எதிராக போராடவேண்டிய இந்த முஸ்லிம் தலைவர்கள் அரசாங்கத்தோடு சேர்ந்து தமிழர்களின் போராட்டத்தை பலவீனப்படுத்துவது முறையானதல்ல. இதனால், தமிழர்கள் இரட்டைப்பாதிப்புகளுக்கு உள்ளாகிறார்கள்.

அருமைநாயகம் நிர்மலா - வந்தாறுமூலை

### தமிழர்களால் முஸ்லிம்களுக்கு பாதிப்பு

தமிழ்த்தரப்புகள் தமக்கு உரிமை மறுக்கப்பட்டதை எதிர்த்து ஆயுதம் தாங்கி போராடுகிறார்கள். அரசியல் ரீதியாகவும் இதற்கு தீர்வுகாண பல்வேறு விதமாக முயற்சிக்கின்றார்கள். ஆனால், இதே தமிழ்த்தரப்புகள் தம்மைப்போன்ற இன்னொரு சிறுபான்மை இனமான முஸ்லிம்கள் தொடர்பில் அலட்சியமாக இருப்பது கவலைக் குரியதாகும். சுமார் 50 வருடங்களுக்கும் மேலாக தமிழ் மக்களது அரசியல் உரிமை பற்றி பேசி வருகின்ற தமிழ்த்தரப்புகள் முஸ்லிம்களது அரசியல் உரிமை பற்றி பேசாமல் இருப்பது எமக்கு ஆச்சரியத்தையும் கவலையையும் அளிக்கிறது. மேலும், இந்த தமிழ் தரப்புகளின் செயற்பாட்டினால் முஸ்லிம்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். உண்மையில் நீதிக்காக போராடுவதாக இருந்தால் அது சகலரது நீதிக்காகவும் போராடுவதாக இருக்க வேண்டுமே ஒழிய தமக்கே மட்டுமான சுயநலப்போராட்டமாக இருக்கக்கூடாது.

ஏ.எம்.எம். சுஹைர் - கிண்ணியா

## கண்ணி வெடிகள் வேண்டாம் !



இலங்கையில் வட கிழக்கு பிரதேசங்களானது 10இலட்சத்திற்கும் அதிகமான கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட பிரதேசங்களாக உள்ளன. இதனால் 2002ஆம் ஆண்டு அரசாங்கம், சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் ஒன்றிணைந்து கண்ணிவெடி அகற்றும் செயற்பாடொன்றை முன்னெடுத்தன.

இச்செயற்பாட்டில் கண்ணிவெடி அகற்றுதல், பாதிக்கப்பட்ட பிரதேசங்களை இனங்காணல், சிவில் சமூகங்களின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல், கண்ணிவெடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வாழ்வாதார வழிவகைகளை உறுதிபடுத்தல் என்பன அடங்குகின்றன.

இன்று, இச்செயற்பாடுகளின் பலனாக பாதிப்புக்குள்ளானவர்களின் தொகை கணிசமான அளவு குறைந்துள்ளதுடன், நூற்றுக்கும் அதிகமான ஏக்கர் பயிர்ச்செய்கை நிலங்கள், ஏனைய பிரதேசங்கள் என்பன பாதுகாப்பான பிரதேசங்களாக மாற்றப்பட்டுள்ளன.

மேலும் 2002ம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு பின் கண்ணி வெடிகள் எதுவும் புதைக்கப்படவில்லை என்பதோடு, ஐக்கிய நாடுகள் சபையின் ஒட்டோவா பிரகடனம் குறித்து அரசு பரிசீலித்து வருவதாக தெரிவித்துள்ளது. இது இவ்வாறிருக்க விடுதலைப்புலிகளும் கண்ணிவெடி குறித்த ஜெனீவா ஒப்பந்தம் தொடர்பில் பரிசீலித்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

கடந்த 3வருட நடவடிக்கைகளினூடாக நாட்டில் பலரது உயிரிழப்புகளையும், அங்கவீனமாவதையும், உடல் ஊனங்களையும் தவிர்த்துக்கொள்ள முடிந்தது. எனினும் எதிர்காலத்தில் கண்ணி வெடிகளை முற்றாக தடைசெய்து நம் நாட்டை கண்ணிவெடிகளற்ற நாடாக மாற்றுவதற்கு இலங்கையர்களாகிய நாம் அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் அழுத்தம் கொடுக்க வேண்டும்

## வாசகர் கவனத்திற்கு...

கருத்தாடல் களத்திற்கு உங்கள் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன.

அத்தோடு விழிப்பின் பதிவுகள் தொடர்பான உங்கள் அபிப்பிராயங்களையும் விமர்சனங்களையும் நாங்கள் எதிர் பார்க்கிறோம்.

எழுதி அனுப்ப வேண்டிய முகவரி

**விழிப்பின் பதிவுகள்**
யங் ஏசியா டெலிவிஷன்
இல, 713. டிபி. விஜயசிங்க மாவத்தை,
பெலவத்தை, பத்தரமுல்லை.

மின்னஞ்சல் முகவரி :- villippu@yatv.net




விழிப்பு நிகழ்ச்சி TNL அலைவரிசையில் செவ்வாய் தோறும் இரவு 7.25 மணிக்கும், ரூபவாஹினி 'ஐ'அலைவரிசையில் திங்கள் தோறும் இரவு 7.30 மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை. தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
16.04.2006

ஏனைய கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் தங்க நேரும்வேளைகளில், தங்கியிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான உத்தியோக பூர்வ விடுதிகளிலேயே ஜே.வி.பியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்கிவருகின்றனர். இந்த விடுதிகள் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியை அண்டியே அமைந்துள்ளன.

நாடாளுமன்ற அமர்வுகள் இல்லாத வேளைகளில் - மாலைவேளைகளில் - நாடாளுமன்ற உறுப்பினர்களின் மனைவிமார், பிள்ளைகள், அவர்களது நெருங்கிய உறவினர்கள் மற்றும் நெருங்கிய நண்பர்கள் போன்றோருடன் இணைந்து உடற்பயிற்சி கருதி இத்தகைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்குமிங்குமாக நடைப்பயணம் மேற்கொள்வதுண்டு.

சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி ஏற்படுத்தூண்டி, ஜேர்மனிய வரலாறு மற்றும் கலாசார உரிமைகளைக் கட்டிக்காக்கப் போவதாகப் பிரசாரம் மேற்கொண்டு புதிய அரசொன்றை நிறுவத் தமக்கு வாய்ப்பளிக்குமாறு ஹிட்லர் ஜேர்மனிய மக்களைக் கேட்டுக் கொண்டார்.

அந்தவேளையில், ஜேர்மனிய அரசியலரங்கில் மூன்றாவது பெரிய அரசியல் சக்தியாக விளங்குவதன் மூலம் மட்டும் நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்வது அத்தனை சுலபமானதொன்றல்ல என்பதைக் ஹிட்லர் உணர்ந்து கொண்டார்.

அதன் தொடர்ச்சியாகப் புரட்சிச் சதியொன்றின் மூலம் நாட்டின் நிர்வாகத்தைக் கைப்பற்றும் முயற்சியில் தோல்வி கண்டதன் காரணமாக ஹிட்லர் தண்டனைக்கு உள்ளாகி சிறையில் அடைக்கப்பட்டார். இதன் காரணமாகக் ஹிட்லரின் தலைமையிலான அரசியல்

சகலருமே லஞ்ச ஊழல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திருடர்கள் எனக் குற்றம் சாட்டுவதை முக்கிய பிரசாரவிடயமாக அவர் பயன்படுத்திக்கொண்டார். அந்தவேளையில், ஜேர்மனிய அரசியல் களத்தில் செயற்பட்ட முக்கிய அரசியல் கட்சிகள் மீதும் ஹிட்லர் இத்தகைய குற்றச்சாட்டைச் சுமத்தத் தலைப்பட்டார்.

ஜேர்மனியில் செயற்பட்ட முக்கிய அரசியல் கட்சிகள் அந்தவேளையில் ஜேர்மனிய மக்களது வெறுப்புக்கு உள்ளாகியிருந்தன. இதனை வாய்ப்பாகப் பயன்படுத்தி இத்தகைய முக்கிய அரசியல் கட்சிகளை வெறுத்து வந்த மக்களை ஒன்று திரட்டி மூன்றாவது அணியொன்றை உருவாக்கும் தமது முயற்சியில் ஹிட்லரால் வெற்றியடைய முடிந்தது.

அந்தவேளையில், பொதுமக்களது கவனத்தைத் தம்பால் ஈர்த்து,

வில்லை".

மேற்குறிப்பிட்ட விவரங்கள் ஹிட்லரின் கட்சியின் பிரசாரச் செயலாளரான கோபல்ஸ்ஸின் நாட்குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்த தகவல்களாகும்.

**'ஹிட்லர் தூக்கிலிடப்படுவார்'**

அதற்கு மேல் தாம் முன்னேற வேண்டுமானால், அந்தவேளையில் பொது மக்களின் பெருவெறுப்புக்குப் பாத்திரமாகியிருந்த ஸ்திரமற்ற அரசை பலப்படுத்தும் வகையில் தமது நடவடிக்கைகளை முன்னெடுத்தாக வேண்டுமெனக் ஹிட்லர் நம்பினார்.

# ஹிட்லரின் வழியைப் பின்பற்றி




திக் கொள்வதற்கான பேச்சுகள் இடம்பெற்று வந்த காலகட்டத்தில், அத்தகைய நடைப்பயிற்சிகளில் ஈடுபட்டுவந்த ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களின் கைகளில் பிரபலமான புத்தகமொன்று எப்பொழுதும் காணப்பட்டு வந்தது. சுகதபால டி சில்வா என்ற நாவலாசிரியர் எழுதிய 'ஹிட்லர் தூக்கில் இடப்படுவார்' என்ற தலைப்பிலான புத்தகமே அதுவாகும்.

குறிப்பிட்ட அந்தப்புத்தகம் அந்தவேளை

கட்சியும் நாளாவட்டத்தில் நலிவடைந்து முற்று முழுதாகச் செயலற்றுப் போய்விட்டது. ஆயினும், சிறையில் காலத்தைக் கழிக்க நேர்ந்த போதிலும் ஹிட்லர் தமது எதிர்பார்ப்பைக் கைவிட்டு விடவில்லை. எவ்வாறு ஜேர்மனியின் அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பதற்கான புதிய திட்டமொன்றைச் சிறையிலிருந்தவாறே அவர் தீட்டி வந்தார்.

சிறைவாசம் முடிந்து விடுதலையாகி


சோமவன்ஸ


வீரவன்ஸ

அவர்களது ஆதரவைத்திரட்டிக் கொள்வதற்கான சகலமுயற்சிகளையும் ஹிட்லர் மேற்கொள்ளத் தவறவில்லை. நாட்டின் சகல பகுதிகளிலும் ஹிட்லருக்கு ஆதரவான சுலோகங்களை எழுதும், சுவரொட்டிகளை ஒட்டும் நடவடிக்கைகளைக் ஹிட்லரின் தீவிர ஆதரவாளர்கள் கனகச்சிதமாக நிறைவேற்றிவந்தனர். அவை மட்டுமன்றி, அரசின் செயற்பாடுகளைக் கண்டித்துப் பிரமாண்டமான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் என்பன ஒழுங்கு செய்யப்பட்டு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டன. அத்துடன், முடிந்த வரை அரசுக்கு எதிரான பொய்க் கட்டுக்கதைகளை உருவாக்கி, அவை மக்களைச் சென்றடையத்தக்க வகையில் உலவ விடப்பட்டன.

கிராமப் புறங்களைச் சேர்ந்த வாக்காளர்களது ஆதரவைத் திரட்டும் நடவடிக்கைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டன. அந்தவேளையில், நடைமுறையிலிருந்த தேர்தல் முறைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நோக்கில், முதல் முறையாகத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதிபெற்ற இளம் சமுதாயத்தினர் ஹிட்லரின் பின்னால் அணிதிரண்டனர்.

**'ஹிட்லர் தூக்கிலிடப்படுவார்'**

கடைசியில் ஹிட்லரின் திட்டம் வெற்றியளித்தது. இடம்பெற்ற பொதுத்தேர்தலில் ஹிட்லரின் அணி ஜேர்மனிய அரசியலில்

அவ்விதம் சிந்தித்த ஹிட்லர், அந்தவேளையில் பதவியிலிருந்த ஸ்திரமற்ற அரசுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் அரசுடன் ஒட்டிக் கொள்ள முயற்சித்தார். அத்தகைய அணுகுமுறைக்கான காரணங்கள் பல இருந்தன. அந்தவேளையில், ஜேர்மனியில் பதவியிலிருந்த கூட்டு அரசின் ஜனாதிபதி 84 வயதைக் கடந்த முதியவராயிருந்தார். அது மட்டுமன்றி, அவர் உடல் நலமற்ற நிலையிலேயே இயங்கி வந்தார். சொல்லப்போனால் இன்றைக்கோ நாளைக்கோ என்ற நிலையில் மரணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார் என்பதே அந்தக் காரணங்களில் முதலாவதாகும்.

ஜேர்மனியில் ஆட்சியிலிருந்த கூட்டு அரசு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலமற்

# ஆட்சிக்கு வரமுயலும் ஜே.வி.பி.!

யில் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பிரபலம் பெற்றிருந்தது. சுதந்திரக்கட்சியுடன் கூட்டு ஏற்படுத்திக் கொண்டு, ஜேர்மனியின் ஆட்சியைக் கைப்பற்ற ஆளும் தரப்புக்கு எதிராகக் ஹிட்லர் மேற்கொண்ட நடவடிக்கைகளைப் போன்று தாமும் சுதந்திரக் கட்சிக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டு ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்ளலாம் என ஜே.வி.பியினர் நம்பியிருக்கக் கூடும். அதன் காரணமாகவே 'ஹிட்லர் தூக்கில் இடப்படுவார்' என்ற அந்தப்புத்தகம் குறித்து ஜே.வி.பியினர் கடும் ஆர்வம் செலுத்தி வாசிக்கத் தலைப்பட்டிருக்கலாம்.

குறிப்பிட்ட அந்தப் புத்தகத்தை மட்டுமல்லாது, ஹிட்லரின் அரசியல் வரலாறு குறித்த எந்தவொரு புத்தகத்தை வாசித்தாலும் கூட, ஹிட்லரின் எழுச்சிக்கும், ஜே.வி.பியினரின் எழுச்சிக்கும் இடையே பல முக்கிய ஒற்றுமைகள் காணப்படுவதை எம்மால் அவதானிக்க இயலும்.

ஜேர்மனியில் ஹிட்லரின் எழுச்சி உருவாகி வளர்ந்து வந்தவேளையில், சர்வதேச ஒப்பந்தங்கள் மூலமாக உருவான அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க வேண்டி நேர்ந்தமையால் ஹிட்லர் விரக்தியடைய நேர்ந்தது. அந்தவேளையில், அடுத்தடுத்து பல பொதுத்தேர்தல்கள் நடத்தப்பட்ட போதிலும் ஜேர்மனியில் உறுதியான அரசொன்றை நிறுவ இயலாத நிலை நிலவிவந்தது.

நாட்டின் அரசியல் நிர்வாகமுறை பொது மக்களது வெறுப்புக்கு உள்ளாகியிருந்தது. முக்கிய அரசியல் கட்சிகளது அரசியல் செயற்பாடுகளுக்கு எதிராகப் பொதுமக்கள் வைராக்கியம் கொண்டிருந்தனர். ஆனால், இத்தகைய ஸ்திரமற்ற அரசியல் பின்னணியைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தியதன் மூலம் ஹிட்லரால் நாட்டின் மூன்றாவது பெரும் அரசியல் சக்தியாகத் தமது கட்சியை உருவாக்கிக் கொள்ள முடிந்தது. சர்வதேச அழுத்தங்களுக்கும் யூத ஆக்கிரமிப்புக்கும் எதிராக ஜேர்மனிய மக்கள் மத்தியில் இனவாத உணர்வுகளைத்

வெளியில் சென்றதும் புதிய கொள்கைத் திட்டமொன்றைக் கடைப்பிடிக்க வேண்டி ஏற்படுமெனக் ஹிட்லர் சிறையிலிருந்த வேளையில் சிந்திக்கத் தலைப்பட்டார். சதிப் புரட்சியொன்றின் மூலம் ஆளும் அரசைப் பதவியிலிருந்து அகற்றிவிட்டு, அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குப் பதிலாக, நாடாளுமன்றத்துள் நுழைந்து கத்தோலிக்க மற்றும் மார்க்ஸிஸ வாதத்துக்கு எதிராகச் செயற்படவேண்டும் எனக் ஹிட்லர் கூறிவந்தார். தேர்தல் மூலமாக அதிகாரத்தைக் கைப்பற்றுவதென்பது, ஆயுதப்போராட்டம் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதை விட நீண்ட தாமதமளிப்பதொன்றாக அமையுமாயினும், அது ஆகக்குறைந்தது அரசமைப்பு ரீதியான அங்கீகாரத்தை உறுதிசெய்யும் என ஹிட்லர் கருதினார்.

சட்ட பூர்வமான செயற்பாடுகள் வழமையாகத் தாமதமாகவே பலனளிப்பவை. ஆனால், என்றோ ஒருநாள் அதன் மூலம் பெரும்பான்மைப் பலத்தை ஈட்டிட முடியும் என ஹிட்லர் நம்பினார். அத்தகைய ஆதரவைத் தேடிக்கொள்ளும் வேளையில் முழு ஜெர்மனியின் நிர்வாகத்தை தம்மால் கைப்பற்றிவிட இயலும் என ஹிட்லர் உறுதியாக நம்பினார்.

'ஹிட்லர் தூக்கில் இடப்படுவார்' என்ற தலைப்பில் சுகதபால டி சில்வா எழுதியுள்ள புத்தகத்தில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

உண்மையில் நாடாளுமன்றத்தின் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்ளும் தமது நோக்கத்துக்கமைய ஹிட்லர் புதிய பிரசார உத்திகளை வகுத்துக்கொண்டார். நாடாளுமன்றத்தில் அந்தவேளையில் உறுப்பினராகவிருந்த

மூன்றாவது பலமிக்க அணியாக ஜேர்மனிய மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சரி, அரசைக் கவிழ்ப்பதற்கு இதுதான் சரியான தருணம்; எவ்வளவு விரைவாக முடியுமோ, அவ்வளவு விரைவில் அதிகாரத்தைக் கைப்பற்றியாக வேண்டும். இல்லையேல், நாட்டின் மூன்றாவது பலமிக்க அரசியல் அணியாக முடிந்த இந்த வெற்றி பலனற்ற தொன்றாக ஆகிவிடக் கூடும்" என ஹிட்லர் எண்ணத் தலைப்பட்டார்.

சிங்கள மூலம் : உபுல் யோசெப் பெர்னாண்டோ
தமிழில் : விபொஸ்ரி

"1928 ஆம் ஆண்டுமுதல் ஹிட்லரது கட்சிக்கான பொதுமக்களது ஆதரவு படிப்படியாக உயர்வடையத் தொடங்கியது. அப்போது அக்கட்சி அதிகபட்சபூரணத்துவ எல்லையையே எட்டியிருந்தது. சமூக ஜனநாயகவாதிகள் மற்றும் இடைநிலைக் கட்சிகளுக்கிருந்த ஆதரவைப் பெருமளவில் ஹிட்லரால் உடைத்துவிட முடியவில்லை. இடதுசாரிக் கொள்கையை ஆதரிப்போரின் முழுமையான ஆதரவைக் ஹிட்லரால் தம் பக்கம் திருப்பிக் கொள்ள முடிந்தது. மக்கள் கட்சி, ஜனநாயகவாதிகள், இனவாதக் கட்சிகள் போன்ற மத்திய தரத்தைச் சேர்ந்தோரின் வாக்குகளைக் ஹிட்லரால் சிதறடிக்க முடிந்து. அதுவரை காலமும் தேர்தலைப் புறக்கணிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைகளால் தேர்தலில் வாக்களிப்பதைப் பகிஷ்கரித்து வந்த இளைய சமுதாயத்தினர், வேலை வாய்ப்பற்றிருந்த தரப்பினர் ஆகியோர் ஹிட்லரின் பிரசாரங்களால் கவரப்பட்டு ஹிட்லருக்கு ஆதரவளிக்கத் தலைப்பட்டனர். [illegible] தீவிரமாகச் செயற்படும் [illegible]யில், ஹிட்லருக்கு இருக்க

றிருந்த காரணத்தால் ஸ்திரமற்ற நிலையில் இயங்கிவந்தது என்பது இவற்றில் இரண்டாவது காரணமாகும். இவற்றைவிட மிக முக்கியமானதொரு காரணமும் இருந்தது. ஜேர்மனிய அரசும் பொதுமக்கள் மத்தியில் மதிப்பிழந்த நிலையிலிருந்தமையே அந்த மூன்றாவது முக்கிய காரணமாகும். இவை மட்டுமன்றி, மரணத்தை எதிர்பார்த்திருந்த ஜேர்மனிய ஜனாதிபதியின் மரணத்தின் பின்னர் அந்தப் பதவியை அடைவதற்காகக் கட்சியின் உள்மட்டத்தில் பல தரப்புப் போட்டிநிலை நிலவிவந்தமை நான்காவது முக்கிய விடயமாகும்.

இத்தகைய அரசியல் பின்னணி குறித்து பல கோணங்களில் ஆராய்ந்து பார்த்ததன் பின்னரே ஹிட்லர் ஆட்சியிலிருந்த அரசில் தமது கட்சியையும் ஒரு பங்காளியாக்கி இணைத்துக் கொண்டார். கவிழும் நிலையிலிருந்த ஜேர்மனிய அரசில் தாமும் இணைந்து கொள்வதனூடாக, அரசையும், மரணத்தை எதிர்பார்த்திருக்கும் ஜனாதிபதி மரணமடைந்ததும் அந்தப் பதவியையும் கைப்பற்றி நாட்டின் நிர்வாகத்தைத் தமது கைகளில் எடுத்துக்கொள்வதே அந்தவேளையில் ஹிட்லரின் திட்டமாக அமைந்திருந்தது. ஹிட்லர் தமது அந்தத் திட்டத்தை முறைப்படி முன்னெடுத்து கடைசியில் நாட்டின் நிர்வாகத்தைத் தமது கைகளில் எடுத்துக்கொண்டார்.

ஜேர்மனிய ஜனாதிபதியோ, கூட்டு அரசோ ஹிட்லரின் திட்டம் குறித்து சிறிதளவேனும் அறிந்திருக்கவில்லை.

(VIII ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புமிகு சேவையாற்றும் சிறுவர் நல அமைப்புகள்

## -ஒரு மீள் கண்ணோட்டம்

**யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவின் செயற்பாடுகளை முடக்குவதற்கு அதிகாரிகள் மட்டத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனத் தெரிய வருகின்றது. தமது குழுவின் செயற்றிட்டங்களுக்கு நிதி உதவிகள் தடுக்கப்படுகின்றன என்பதை சிறுவர் பாதுகாப்புக் குழுவின் இணைப்பாளர் உறுதிப்படுத்தினார்.**

**சிறுவர் நலன் தொடர்பாக அநேக அலுவலர்கள், பல கட்டமைப்புகள் இருப்பினும், மக்கள் சிறுவர் சம்பந்தமான தேவைகளுக்கு அங்கும் இங்கும் அலைந்து திரிகின்ற இந்நிலையில் சிறுவர் நலன் சம்பந்தமாக யாழில் செயற்படும் கட்டமைப்புகள் குறித்தும் நாம் நாடவேண்டிய இடங்கள், அடைய வேண்டிய இலக்குகள் குறித்தும் விவரமான தரவுகளைத் தருவனவாக இந்தக் கட்டுரை அமைந்துள்ளது.**

சிறுவர்களது நலன்கள் குறித்து சமகாலத்தே பல நிறுவனங்கள் அரச தரப்பினர் பல்வேறு கட்டமைப்பு களை உருவாக்கி பல்வேறு மட்டங்களில் செயற்பட்டு வருகின்ற போதும் சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுதல் என்பதும்; இல்லங்களில் சிறுவர்கள் அனுமதிக்கப்படும் அளவுக்கு பல்வேறு முரண்பாடான சிக்கல்களை எதிர்கொள்வதும் குறைந்ததாக இல்லை என்றே கூறவேண்டும். இதற்குத் தனியே அதிகாரிகளினது அல்லது அரச தரப்பினரது அசமந்தப் போக்கு மட்டுமே காரணம் என்று கூறுவதைவிட சம்பந்தப்பட்ட தரப்பினர் குறித்தோர் விடயத்தில் அதிக சிரத்தை காட்டாமல் கட்டமைப்புகளை நிறுவி மேலதிகாரிகளுக்கு இருப்பது போல, செயற்படுவது போல பாசாங்கு செய்வது சிறுவர் நலன் என்கின்ற விடயத்தைப் பொறுத்தவரையில் ஏற்கப்பட முடியாதது. இவற்றுக்கெல்லாம் தீர்வு காண்பதுபோல் யாழ் .மாவட்டத்தில் இந்த அமைப்புகள் யாவும் சீராகவும், சிறப்பாகவும் செயற்படுவது என்பது யாமறிந்ததே. இருப்பினும், இக்கட்டமைப்புகள் யாவும் நிறுவப்பட்டு எதிர்வரும் மார்ச் மாதம் 24 ஆம் திகதி எட்டு வருடங்கள் கடந்து விட்டநிலையில் இக்கட்டமைப்புகள் குறித்து சில விளக்கங்களை அநேகர் அறிந்து கொள்ளும் பொருட்டு அவற்றைத் தொகுத்து இலகு மொழியில் விவரிக்க முயற்சிக்கின்றேன்.

இவற்றுக்கு முன்னதாக, யாழ். மாவட்டத்தில் மாவட்ட மட்டத்தில் நேரடியாகச் சிறுவர் உரிமைகள் சம்பந்தப்பட்டதாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற அமைப்புகளில் பிரதானமான மூன்றை நோக்குவோம்.

1.மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு
2.மாவட்ட கண்காணிப்புக் குழு-சிறுவர் உரிமைகள்
3.சிறுவர் வேலைக்கமர்த்தப்படுதல் தொடர்பான மேலதிக உபகுழு.

இவற்றின் ஆரம்ப காலகட்டத்தில், தோற்றுவாயில் அரசதரப்புக்கு அழுத்தம் (pressure to the state party) கொடுக்கும் நடவடிக்கைகளில் சிறுவர் பாதுகாப்பு மற்றும் யுனிசெவ் ஈடுபட்டிருந்தது. இதனால் இந்த அமைப்புகள் ஐரோப்பிய/ வெளிநாட்டுச் சாயலை உட்புகுத்துகின்றன என்கின்ற குற்றச்சாட்டுகளுக்கும் ஆளாயின. காலச்சக்கரத்தின் வேகத்தில் இன்று அரச தரப்பு அதனைத் தனது கடப்பாடாக (obligation) ஏற்றுக் கொண்டுள்ளமை நோக்கத்தக்கது.

### கட்டமைப்புகளின் வரலாறு, பின்னணி

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரையில், சிறுவர் உரிமைகள், சிறுவர் நலன் தொடர்பாகச் செயற்படுத்தப்பட்ட நிகழ்வுகள் ஏராளம். ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் சமாசமானது 1989 ஆம் ஆண்டு அனைத்துலகப் பொது ஆவணமாக ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து 1990/91 காலப்பகுதிகளில் இதனைத் தழுவி இலங்கை அரசு சிறுவர் உரிமைகள் பட்டயத்தை [முன்னையது convenjion, இது charter) சிறுவர் பாதுகாப்பு என்கின்ற அரச சார்பற்ற நிறுவன உதவியுடன் யாழ். மாவட்டத்தில் சிறுவர் உரிமைகள் கண்காணிப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன.

தேசிய, மாகாண மட்டங்களைத் தொடர்ந்து மாவட்ட மட்ட சிறுவர் கண்காணிப்புக்குழு அரச அதிகாரிகள் [அரச அதிபர் தலைமையில் பிரதேச செயலர் அடங்கலாக ] உதவியுடன் நிறுவப்பட்டு ஏறத்தாழ 02 வருடங்கள் வரை சிறப்பாகச் செயற்பட்டு வந்தன. யாழ் மாவட்டத்திற்கு அப்பால் 1998 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அனைத்து பிரதேச மட்டங்களிலும், பிரதேச மட்டக் கண்காணிப்புக் குழுக்களும் உருவாக்கம் பெற்றன. அரச அதிபர் தலைமையில் மாவட்டக் கண்காணிப்புக்குழு சுகாதாரம், கல்வி, சிறுவர் நன்னடத்தை, தொழிலாளர் திணைக்கள அதிகாரிகள் அங்கத்தவர்களாக [சிறுவர் எண்மர் உட்பட ] கொண்டு செயற்பட, பிரதேசக்குழு பிரதேச செயலர் தலைமையிலும், கிராமிய மட்டச் சிறுவர் பாதுகாப்புக் குழுக்கள் கிராம அலுவலர் தலைமையிலும் அமைக்கப்பட்டன.

பளைப்பிரதேசம் யாழ்.மாவட்டத்துடன் இணைக்கப்பட்டிருந்தமையால், பிற்காலத்தே காரைநகர்

| | | |
|---|---|---|
| சிறுவர் | நலன்கள்/ பொதுவானவை | கிராம மட்ட சிறுவர் அபிவிருத்திக்குழு<br>பிரதேச மட்ட கண்காணிப்புக் குழு<br>மாவட்ட மட்ட கண்காணிப்புக் குழு |
| | பாதுகாப்பு | மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு அறை எண் 30<br>யாழ் போதனா வைத்தியசாலை<br>யாழ்ப்பாணம்<br>தொ.பே.- 021 222 5657 |
| | தொழிலாளர் | பிராந்திய ஆணையாளர்<br>தொழில் திணைக்களம்<br>வீரசிங்கம் மண்டபம்<br>யாழ்ப்பாணம் |
| | சித்திரவதை / கெடுபிடி | சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு<br>யாழ் பொலிஸ் நிலையம்<br>யாழ்ப்பாணம். |

அட்டவணை 1

பிர தேச செயலகமாக இணைக்கப்பட்டமையும் நோக்கத் தக்கது. 15 பிரதேசங்கள், ஒரு மாவட்டம், 456 கிராமமட்டம் [ உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகள் தவிர்ந்தனவாக- 1998 இல் ] என சிறுவர் உரிமைகள் குழுக்கள் வியாபித்திருந்தன. இவற்றின் பிரதான செயற்பாடுகள் வருமாறு :-

-பிரிவுக்குட்டபட்ட சிறுவர்களது நலன்கள் குறித்து கிரமமாகக் கண்காணித்தலும் அறிக்கையிடுதலும்,

-சிறுவர் நலன்சார் திட்டங்களை அமுல்படுத்துதல்.

-பரிந்துரைத்தல், முன்னோடியாகச் செயற்படுதல்.

இவற்றின் ஆரம்பக் காலகட்டம் இவ்வாறாக செயற்பட்டபோதும் - உரிமைகளை மையப்படுத்தியதாக- இடம்பெயர்வு, கிராம மட்டக் குழுக்களது செயற்படு வேகக் குறைவு போன்ற காரணங்களால் கிராமியக் குழுக்கள் கொத்தணி முறையில் செயற்படலாயின.

எனவே, சமகாலத்தே இவை செயலற்று இருப்பின் அல்லது அரச அலுவர்கள் இவை குறித்து அறியாதிருந்ததால் இவை பற்றிய மீள் கட்டுமானத்தின் சிறப்பான அவசியம் குறித்து உணர்ந்து செயற்பட வேண்டியது அவசியமாகின்றது. மக்களது பங்களிப்பும் உந்துசக்தியும் சிறப்பான செயற்பாட்டிற்கு அவசியம். மாவட்ட மட்டத்தில் சிறுவர் சம்பந்தமான நிலையைப் பகுப்பாய்வு செய்தமை, சிறுவர் குரல் என்கின்ற சஞ்சிகை வெளியிடப்பட்டமை, கல்வி, உடுபுடைவை மற்றும் விசேட தேவைகளுடைய சிறுவர்கள் 28 ஆயிரம் பேருக்கு சிறுவர் பாதுகாப்பு, யுனிசெவ் உதவியுடன் வழங்கியமை, சிறுவர்களுக்கான தனிச் சிறைக்கூடம், சிறைச்சாலையில் கல்வி, சிறுவர் நன்நடத்தைப் பாடசாலை மீள் ஆரம்பம் குறித்த பரிந்துரைப்பு என இவற்றின் செயற்பாடுகள் 2002ஆம் ஆண்டுக் காலப்பகுதிவரை சிறப்பான வையாகக் காணப்பட்டமை நோக்கத்தக்கது.

ஐக்கிய நாடுகள் விசேட பிரதிநிதி ஒலரா ஒட்டுண்ணு, முன்னாள் அமைச்சர் ஜயலத் ஆகியோரது விஜயங்கள் இக்குழுவின் செயற்றிறன் மிக்க செயற்பாடுகளுக்கு உதவிற்று. விசேடமாக இக்காலப்பகுதியில் மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம், கல்வித் திணைக்கள அலுவலர் திருமதி எஸ்.மகாலிங்கம் மற்றும் பத்தினியம்மா தில்லைநாயகம் போல், கேதீஸ்வரன், சுந்தரம் பிள்ளை, முத்துக்குமாரசாமி போன்ற அலுவலர்கள், தற்பரன், ஜெனோவா, ஹிலன் போன்ற அரசசார்பற்ற திணைக்கள அதிகாரிகளினது செயற்பாடுகள், நீண்ட கால நோக்குச்சிந்தனை என்பன நினைவு கூரத்தக்கவை.

இதே காலப்பகுதியில் ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் விசேடமாக சிறுவர் பாதுகாப்பு விவகாரங்களைக் கையாள்வதற்கென நாடாளுமன்றத்தில் விசேட சட்ட மூலத்தின் (NCPA ACT) படியாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தோற்றம் பெற்றது. படிப்படியாக மாவட்ட மட்டத்திலும், இந்த அமைப்பு தனது பணிகளை விஸ்தரிக்கலாயிற்று. ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் பேராசிரியர் தயா சோமசுந்தரம் மருத்துவ பீடத்தில் இதற்கான கூட்டங்களை நடத்தி பின்பு அரச இயந்திரமாக அரசதரப்புடன் இணைந்ததான ஓர் அமைப்பாக இக்குழு பரிணாமம் பெற்றது. ஆரம்ப காலங்களில் கண்காணிப்புக்குழு என்பதாக ஒன்று இருக்கும் போது மேலதிகமாகப் பாதுகாப்புக் குழு என்பதாக - அதுவும் ஏறத்தாழ ஒரே அங்கத்தவர்களைக் கொண்டதாக - அவசியம்தானா? எனின் இரண்டுக்குமிடையிலான இடைத் தொடர்பு என்ன? எது பெரிது என பல வாதப்பிரதி வாதங்கள் பேராசிரியர் தயா சோமசுந்தரம், சிறுவர் பாதுகாப்பு அலுவலர் ஹிலன் அவர்களது விளக்கவுரையின் மூலம் தெளிவுபடுத்தப்பட்டது. [ஆதாரம் : மாவட்டக் கண்காணிப்புக்குழு கூட்ட அறிக்கைகள் - 1999 ஆம் மாதம் சரியாக நினைவில் இல்லை ] அதன் சுருக்கம் வருமாறு:

-இரண்டும் வேறு வேறு அமைப்புகள். ஒன்று நிலைமைகளைக் கண்காணிப்பதற்கு அரசின் படிமுறைகளின்படி நிர்வாக கட்டமைப்புகளின் படி செயற்படுவது. மற்றையது மத்திய அரசின் கீழ் நேரடியாக சட்ட மூலத்தின் படி விசேடமாக பாதுகாப்புச் சார்பாகச் செயற்படுவது.

-இரண்டு அமைப்புகளும் பரஸ்பரம் இணைந்து செயற்படமுடியும். இருப்பினும், செயற்பாடுகள், அலுவலகக் கட்டமைப்புகள் ஒன்றில் ஒன்றைக்கட்டுப்படுத்துவனவாக அமைந்து காணப்படா.

- சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாகத் தேசிய பாதுகாப்பு அதிகார சபையுடன் இணைந்து, குழு அங்கத்தவர்களுடன் கலந்தாலோசித்து வேண்டிய நடவடிக்கைகளை, செயற்பாடுகளை செயற்படுத்தக்கூடிய அதிகாரங்கள் மாவட்ட மட்டக்குழுக்களுக்குச் சட்ட மூலத்தின்படி வழங்கப் பட்டுள்ளது- என்பதாக விளக்கமளிக்கப்பட்டது.

இருப்பினும், யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இரு அமைப்புகளும் சிறப்பாகச் செயற்பட்ட காரணத்தினாலும்; இரு அமைப்புகளும் ஒரே அங்கத்தவர்களிடையே அநேகமாக கொண்டமைந்து காணப்பட்டதனாலும் 2003 ஆம் ஆண்டளவில் இணைந்து செயற்குழுக் கூட்டத்தை மட்டும் கூட்டுவதற்கு இணங்கின. இதன் மூலம் குழு அங்கத்தவர்களாகிய அலுவலர்களது நேர விரயம் கவனிக்கப்பட்டது. இருப்பினும், இரு வேறு அமைப்புகள் என்பதில் ஒருமித்த போக்கே காணப்பட்டது. மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவின் செயற்பாட்டுக் குழுத் தலைவர் என்ற வகையில் அரச அதிபர் அதன் செயற்பாடுகளை மேற்பார்வை செய்த போதும், செய்கின்ற போதும், தலைமைதாங்கி நிகழ்வுகள் முன்னேற்றகரமாகச் செயற்பட்டுவந்ததுடன், நேரடியாகத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கீழ் செயற்பட்டு வருகின்றமை யாமறிந்ததே. யாழில். தேசிய அதிகார சபையின் வழிகாட்டுதல்கள், நெறியாழ்கையின் வழிகாட்டுதல்கள், நெறியாழ்கை போதியளவில் கிடைக்காத காரணத்தினால், சுயமாக அரச அதிபரின் வழிகாட்டுதல்களுடனும் தொண்டு நிறுவனங்களின் உதவியுடனும் சிறுவர்களது பாதுகாப்பிற்காகவும், உயரிய நலன்களுக்காகவும் செயற்பட்டு வருகின்றமை எம்மில் அநேகர் அறிந்த விடயம்.

சிறுவர் பாதுகாப்புக்குழு பொதுவாக வைத்தியசாலையுடன் இணைந்ததாகத் தமது அலுவலகங்களை வைத்திருப்பதும் இதுவே காரணமாகும். அண்மையில் பட்டதாரிப் பயிலுநர்கள் சிறுவர் பாதுகாப்பு மேம்பாட்டு அலுவலர்களாக சிறுவர் தேசிய பாதுகாப்பு அதிகார சபையுடன் மத்திய அரசால் நேரடியாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சிறுவர் பாதுகாப்புக் குழுக்களால் - அதன் அலுவலர்களால்- நிர்வகிக்கப்படும் சிறுவர் விவகாரங்களை குடும்ப விஜயம், சிறுவர் நலன் தொடர்பாக செயற்பாடுகளில் ஈடுபட்டு (family visits care plan.. followup the cases) முன்னேற்பாட்டு அறிக்கைகளான (progress reports) ஐ சிறுவர் பாதுகாப்புக் குழுவின் செயலர் என்ற வகையில் சிறுவர் நன்னடத்தை அதிகாரிகளுக்கும், அரச அதிபருக்கும் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழுவிற்கும் அறிக்கையிடுவர். இவற்றை திறம்பட நிர்வகிப்பதற்கென சிறுவர் பாதுகாப்புக் குழு இரு இணைப்பதிகாரிகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும். இந்நியமனமானது மாவட்ட- தேசியமட்ட அலுவலகங்களுக்கிடையிலானதே தவிர, இந்நியமனத்தில் ஏனைய அரச செயற்பாடுகளில் உள்வாங்கப்படும் நெகிழ்வுத் தன்மை அல்லது அரசியல் செல்வாக்கு போன்றவற்றிக்கு இடமில்லை என்பது தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபையின் சட்ட நகல் மூலம் தெளிவாகின்றது.

எது எவ்வாறாகக் காணப்படினும், மேற்படி அரச அலுவலர்களது நியமனமானது மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவின் செயற்பாடுகளை பிரதேசம் கிராமம் என விஸ்தீரணப்படுத்துவதற்கு உதவும் என்பதில் ஐயமில்லை. யாழ். மாவட்டத்திலே நிர்ணயிக்கப்பட்ட கட்டமைப்புக்கு தேசிய பாதுகாப்பு அதிகார சபை [சிறுவர்] இனது உத்தரவாதம் கிடைக்காமையால் அல்லது நிர்வாகக் கட்டமைப்பு [சிறுவர் பாதுகாப்பு குழுவின் ] சீர்மைப்படுத்தப்பட வேண்டியுள்ளதால் பிரதேச செயலகங்களுடன் தற்காலிகமாக இந்த அலுவலர்கள் இணைந்து செயற்பட்டு வருகின்றனர் என்பது நோக்கத்தக்கது. சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் [சிரேஷ்ட, பயிலுநர்] உட்பட சிறுவர் மேம்பாட்டு அலுவலர்கள் பிரதேச செயலக மட்டத்தில் இணைந்து செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்ற போதும், இவர்களது

**றமிதரன்**

அலுவலகம் எது? என்பதில் ஒரு மயக்கநிலை இருப்பதைக் காணலாம். இருப்பினும், நியமன நோக்கத்தின் அடிப்படையில் இவர்கள் அனைவரும் அரசஅதிபரின் மேற்பார்வையில், சிறுவர் பாதுகாப்பு மாவட்டக் குழுவின் கீழ் பிரதேச செயலக சிறுவர் நல அலுவலர்களுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்பது தெளிவாகின்றது. இந்நிலை யாழ்.மாவட்டத்தில் சிறப்பான செயற்பாட்டுக்கு உந்து சக்தியாக அமையும் என்பதில் ஐயமேதுமில்லை.

இவ்வாறாக அமையப்பட்ட சிறுவர் பாதுகாப் புக்குழு யாழ்.பல்கலையுடன் இணைந்து "HOME TRUTHS" [இல்லத்து உண்மைகள்] என்கின்ற ஆய் வறிக்கையை வெளியிட்டமை அண்மைக் காலச் சிறப்பான எடுத்துக் காட்டாகும். இவ்வாறாக இன்றும் செயற்பட்டு வரும் ஒரு அமைப்பாக மாவட்ட மட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு திகழ்கின்றது.

இவற்றுக்கு மேலதிகமாக சிறுவர் தொழிலாளர்கள் தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தும் பொருட்டு தொழில் திணைக்களத்தால் யாழ்.மாவட்டம், தொழிலாளர் திணைக்கள ஆணையாளர் மற்றும் அரச அதிபருடன் இணைந்து, சர்வதேச அனைத்துலக தொழிலாளர் அமைப்பின் ஏற்பாட்டில் மேல்திகக் குழு - சிறுவர் தொழிலாளர் அமைக்கப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது. இருப்பினும், ஏனைய அமைப்புகள் போன்று இது செயல்திறன் மிக்கதாக இல்லாதிருக்கின்ற போதும் இதற்கான ஆயத்த வேலைகள் நடைபெற்று வருகின்றமை கவனிக்கத்தக்கது.

### செயற்பாடுகள் குறித்த விவரணம்

சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமாகக் குறிப்பாக துஷ்பிரயோகம், வன்முறை, நெருக்கீடு, தண்டனை போன்ற விடயங்களைக் கையாள்வதற்கு மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவின் அனுசரணையை நாடலாம். இருப்பினும், கிராம பிரதேச மட்டங்களில் காணப்படும் சிறுவர் நலன்சார் குழுக்களினூடாக மேல் மட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படலாம்.

இதனைப் பின்வரும் அட்டவணை மூலம் தெளிவாக விளக்கிக் கொள்ளமுடியும்.

[பார்க்க அட்டவணை 1]

எம்மில் அநேகர் பிரச்சினை என்று வருகின்ற போது பிரச்சினையின் தாக்கம் குறித்தும், அதன் வகை குறித்தும், இவை தொடர்பாக எவரை- எந்த அமைப்பை அணுக வேண்டியது என்பது குறித் தும் அறிந்திருக்க வேண்டிய கடமைப்பாடு உண்டு என்கின்ற வகையில் மேற்கூறப்பட்ட தரவுகள் உதவும் என நம்புகின்றோம். இவை தவிர, காணாமல் போதல், தடுத்து வைத்தல், காரணமின்றி கைது செய்யப்படுதல் அத்துடன், ஆயுதக் குழுக்களுடன் தொடர்புறு தல் தொடர்பான விடயங்களுக்கு ''கோவில் வீதி, நல்லூரில்'' அமைந்துள்ள 'யுனிசெவ்' அமைப்பினரையும் ஒ.எல்.ஆர். தேவாலயம் அருகில் காணப்படும் மனித உரிமைகள் ஆணைக்குழுவினரின் கூடுதல் உதவிகளையும் பெறமுடியும்.

[VII ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகை அலுவலகத்துக்கு நெல்லி எழுதிய கடிதம்...

# உலகின் முதற் பெண் பத்திரிகையாளர் உருவான விதம்... ①

நா.பரமேஸ்வரன்

**1864**ஆம் ஆண்டு அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலத்தில் பிறந்த நெல்லிபிளைதான் உலகின் முதல் பெண் பத்திரிகையாளர். இவரது சொந்தப்பெயர் எலிசபெத். எலிசபெத் ஐந்து வயதுச் சிறுமியாக இருந்த போதே தனது ஆண் சகோதரர்களுடன் சேர்ந்து அவர்கள் விளையாடும் கடினமான விளையாட்டுகளையும் அவர்களை விட த் திறமாக விளையாடுவாள். எலிசபெத் கூடுதலான நேரத்தை நூலகத்தில்தான் செலவிடுவாள்.

எலிசபெத் 20 வயதையடைந்தபோது அவளது குடும்பத்தினர் பிட்ஸ்பர்க் நகருக்கு இடம்பெயர்ந்தனர். அத்துடன் குடும்ப வருமானமும் மிகவும் குறைவாக இருந்தது. இதனால் பிரஸ்பாக்கில் ஏதாவது ஒரு வேலையைத் தேடிக்கொள்வது என எலிசபெத் தீர்மானித்தாள்.



கடந்த காலங்களில் தான் எழுதிய கதைகளையும் தனது ஆக்கங்களையும் விற்பனை செய்யத்தொடங்கினாள். பொதுவாக இருபது வயதில் பெண்கள் திருமணம் செய்து கொள்வார்கள். அல்லது குடும்பத்தலைவியாவார்கள். எலிசபெத் இவையிரண்டையும் பற்றிக் கவலைப்படாமல் தனக்கு ஒரு தொழிலைத் தேடத் தொடங்கினாள்.

எலிசபெத் வேலை தேடத் தொடங்கிய காலத்தில் பெண்கள் பெரும்பாலும் வீட்டு வேலைக் காரிகளாகவும் கடைகளிலும் தொழிற்சாலைகளிலும் எழுதுவினைஞர்களாகவும் பணியாற்றி வந்தனர். இவ்வாறு பணியாற்றிய பெண்களுக்கு மிகவும் குறைந்த சம்பளமே வழங்கப்பட்டது. இது அவர்களின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவு செய்யப்போதாமலிருந்தது. அத்துடன் நீண்டநேரம் கடமையாற்ற வேண்டியிருந்தது. இக்காலப்பகுதியில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்க வேண்டுமெனவும் ஆண்கள் செய்யும் அனைத்து தொழில்களையும் பெண்களும் செய்ய அனுமதிக்க வேண்டுமெனவும் அமெரிக்காவில் சிலர் குரல் கொடுத்து வந்தனர்.

இவ்வாறிருக்கையில் ஒரு நாள் Pitsbung bispatch பத்திரிகையில் ஒரு கட்டுரை வெளியாகியிருந்தது. பெண்கள் வேலை செய்வதற்கு லாயக்கற்றவர்கள். துரதிர்ஷ்டவசமாக ஆசிரியைத் தொழிலிலும் தாதித்தொழிலிலும் ஈடுபட்டுள்ளனர். பெண்கள் அந்தத் தொழில்களிலிருந்தும் விலகி ஆண்களுக்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என அந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

கட்டுரையை வாசித்ததும் எலிசபெத் கடுங்கோபத்துடன் ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதினாள். அக்கடிதத்தில் பெரும்பாலான பெண்களுக்கு வேலை தேவை. எல்லாப் பெண்களும் திருமணத்தை விரும்புவதில்லை.பெண்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தால் பெண்கள் ஆண்கள் செய்யும் தொழில்களை அவர்களை விடத் திறமையாகச் செய்வார்கள். 'இப்படிக்கு தனிமையில் வாழும் ஒரு அநாதை யுவதி' எனக் குறிப்பிட்டிருந்தார்.

அடுத்த சில நாள்களில் அவளது கடிதம் பத்திரிகையில் பிரசுரமாகியிருப்பதைக் கண்டு எலிசபெத் ஆச்சரியப்பட்டாள். கடிதத்தின் அடியில் தனிமையில் வாழும் அநாதை என்றுதான் கடிதம் எழுதியவர் குறிப்பிட்டுள்ளார். தனது பெயரைக் குறிப்பிடவில்லை.

கடிதம் எழுதியவர் தனது விலாசத்தை அனுப்பினால் இந்த அலுவலகம் அவருக்கு தன்னம்பிக்கையை ஊட்டுவதற்கு உத்தரவாதமளிக்குமென ஆசிரியர் குறிப்பிட்டிருந்தார்.

பத்திரிகையைப் படித்ததும் எலிசபெத் நேரே பத்திரிகை அலுவலகம் நோக்கிப்புறப்பட்டாள். எலிசபெத் செய்தி அறைக்குள் நுழைந்ததும் அங்கிருந்த அனைவரும் தமது வேலைகளை நிறுத்திவிட்டு ஆளையாள் பார்த்தனர். ஒரு பெண் இங்கே என்ன செய்கிறாள், அவளுக்கு என்ன வேண்டும் என்பது போலிருந்தது அவர்கள் பார்த்த விதம்.

எலிசபெத் நிர்வாக ஆசிரியர் ஜோர்ஜ் மடலைப் பார்க்க வேண்டும் என அவர்களிடம் கேட்டாள். மடன் எதிர்பார்க்கவில்லை. தான் பிரசுரித்த கடிதத்திற்குரிய பதில் நேரடியாகவே கிடைக்குமென்று.

(VIஆம் பக்கம் பார்க்க)

# நான் விரும்பிய பெண்களுள்...



ஹர்சினி அன்ரனிசாமி
திருமலை
(11.03.1977-09.01.2004)

அரங்கு என்பது செயற்பாட்டுக்களம். செயற்பாடு என்பது பங்குகொள்வோரின் நியாயமான விருப்பமான செயற்பாடு. அதாவது சாதாரண வாழ்க்கையில் பெண்களின் செயற்பாடுகள் சுய செயற்பாடுகள் அல்ல. நிபந்தனைப்படுத்தப்பட்டவை. விரும்பியதைச் செய்ய முடியாது. ஆனால், அரங்க களங்களில் நியாயமான, விருப்பமான செயற்பாடுகளில் நிறைய ஈடுபட்டு மிக சந்தோசமாக இருக்கமுடியும். இந்த இடத்தை செயல் வலிமை கொண்ட அரங்கு கொடுகின்றது. அரங்கானது ஆடிக் கழித்தவர்களை சாதாரண இயல்பான இருப்புக்கும் எதிர்கால இருப்புக்குமான இடைவெளிகளையும் பின்னடைவுகளையும் அடிமனதில் இருந்து பீறிட்டெழ வைக்கின்றது. அவ்வாறு தன்னைக் கண்டு கொண்டு தன் எதிர்காலத்தை நியாயமான உயர்வுக்குக் கொண்டு வர முடியும் என்பதை அரங்கில் கண்டு கொண்ட பலரில் இவளும் ஒருத்தி. மனங்களின் தடைகளை, கட்டுக்களை அவிழ்த்து மானுடம் சுடரும் விடுதலை வேண்டி பயணிக்கும் அரங்கில் பயணித்த இந்தப் பெண்ணை எம் கண்முன் ஒரு தடவை நினைவூட்டுவோம்.

திருமலை – உவர்மலை எனும் இடத்தில் எலிசபெத் தேவசகாயம் அன்ரனி சாமிக்கு 11.03.77இல் பிறந்தவள் தான் இந்த ஹர்சினி.

**திருமலையில்...**

இளைஞர் யுவதிகளுக்கு நடத்தப்பட்ட ஒரு அரங்கப் பட்டறை. முதன் முதலாக ஹர்சியை அங்கு சந்திக்கிறோம். பயிற்சியில் கண்களை மூடியபடியே ஈடுபடுகிறது ஒரு செயற்பாட்டு நேரம். முடிவில் அவள் சொன்னாள். 'கண் திறக்கக் கூடாதுதான். ஆனால், திறந்து பார்த்தன். கண்திறந்திருக்கின்ற போது அமைதியாய் இருந்தவையெல்லாம் மூடிய போது வேகமாக ஒழிப்பு மறைப்பு இல்லாமல் தம்மை வெளிப்படுத்திச் செயற்பட்டினம். அவையிட்டை இவ்வளவு உணர்வும் ஆசைகளும் பொதிந்து கிடக்கும் என நான் நினைக்கேல்ல. ஆதலால் ... நான் ஒரு கோரிக்கை விடுகிறன். பெண்களுக்கென்று தனியான அரங்கு உருவாக்கவேணும். மற்றவையின் (குறிப்பாக ஆண்கள்) குறுக்கீடு இல்லாமல், தயக்கம் இல்லாமல் தமது உணர்வுகளை வெளிப்படுத்தும் சூழல் உருவாக வேணும். அப்போது பெண்களின் ஆளுமை பெருகும்.'

பெண்களின் வெளிப்பாட்டுக்குத் தனியே இடம் அவசியம் என்ற எண்ணக்கரு வலுப்பெற இவள் காலானாள்.

**மட்டுநகர்.....**

வேதாரணியம் சதுக்கம் எனுமிடம். பெண்களுக்கே தனியாக நடத்தப்பட்ட அரங்கு ஒன்று. இடம் மீதான பயம் நீக்கப்பட்டு இடம் கொடுக்கப்பட்டது இங்கே. மிக ஆழமான வெளிப்பாடுகள் கிளர்ந்த இடம் அது. அரங்கில் ஆழ்மன வெளிப்பாடுகள் கிளர்ந்த இடம் அது. அரங்கில் ஆழ்மன வெளிப்பாட்டின் அவசியம் உணரப்பட்டு மேலும் வலுப்பெற்ற களம் அது. அங்கே இவளது வெளிப்பாடு அசாதாரணமானது. ஆழமான உணர்வுகளை வெளிப்படுத்தினாள். 'நான்

## ஊர்ந்து திரிந்த பெண்ணுக்கு சிறகு முளைத்த கதை

இப்படியானவளா? என்னிடம் இவ்வளவு திறமைகள் உண்டா? அப்படியாயின் என்னால் முடியும் என்னால் முடியும்' என்று குதூகலித்தாள். 'அரங்கு என்பது தனியே நடிப்பதற்கானதல்ல. அது ஆசைகளை வெளிப்படுத்துகிற இடம்' என்றுரைத்தாள். 'நான் இந்த இடத்தில் மீண்டும் புதியதாய்ப் பிறந்தேன்' என்று பரவசமானாள். தன்னைக் காண இடம் தந்த அந்த அரங்க வெளியையும், அதற்குச் சந்தர்ப்பம் தந்த ஆசிரியர்களையும் ஆழமாக நேசிக்கத் தொடங்கினாள். அந்த உறவுக்குள் புதுமை கண்டு உணர்த்தினாள். அடுத்த கட்டங்களில் அந்த உறவை வலுப்படுத்தி உறவு முறையில் மாற்றங்களைக் கொணர்ந்தாள்.

மட்டுநகர் – [illegible] அடுத்த கட்டம். முற்பொழுது தம் வலிமை கண்டு கொண்டாட இடம் தந்து களம் அமைத்த ஆசிரியர்களை வழமை போல் Sir என்று அழைக்காமல் அப்பாச்சி, அண்ணாச்சி, சின்னப்பா, அம்மாச்சி, அக்காச்சி என்று அந்த உறவைப் புதுமைப்படுத்தினர், புனிதப்படுத்தினர். ஆசிரியர் மாணவரிடையே நடைமுறையிலுள்ளதற்கும் மேலாக புதிய உறவுமுறை ஒன்று சாத்தியம், அவசியம் என்பதை எமக்கு வெளிச்சம் போட்டுக் காண்பித்தனர் இவர்கள்.

ஹர்சி அ.செ.குழுவுடன் தன்னை இணைத்துக் கொண்டாள். வவுனியாவில் அரங்கச் செயற்பாட்டுக் குழுவின் பாசறைக்குள்ளேயே வளர இவளோடு சிலர் முடிவு செய்து கால் வைத்தனர். இவளது அன்னை ... 'நீ எனக்கு ஒரே மகள். நீ என்னுடன் இருப்பதற்கே நான் ஆசைப்படுவேன். ஆனால், உனக்கும் ஒரு வாழ்க்கை இருக்கு. நீ புறப்படு. நான் தாங்கிக் கொள்ளப் பழகுவேன், என வழியனுப்பியதாக எங்களிடம் சொன்னாள் ஹர்சி. நடைமுறையிலுள்ள கல்விச் சூழலால் ஏதோவகையில் தாக்கமடைந்து, கசப்படைந்து தாம் முன்பு இடைநிறுத்திய கல்வியை மீண்டும் தொடர இவர்கள் உறுதியும் நம்பிக்கையும் வைத்தனர்.


வவுனியாவில் அ.செ.குழு வீட்டில் இவள் புடம் போடப்பட்டாள். மூன்றே மாதங்களில் உயர்தரப் பரீட்சைக்குத் தயாராகி சிறந்த பேறு காட்டினாள். அரங்கு சார்ந்த பட்டப் படிப்பில் முதற்கட்டம் சித்தியாகி வீறு நடைபோட்டாள். அ.செ.குழுவின் (TAG) பண்பாட்டுக்குள் வாழத் தொடங்கினாள். தனக்கென ஒரு தனித்துவம் உண்டு என அசையாது நின்றாள். குழு வாழ்வின் உன்னதம், தேவை பற்றி நிறையவே எழுதவும் தலைப்பட்டாள்.

(VIஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணந் தீட்டி மகிழுங்கள்.....!

போட்டி இலக்கம் - 15



**தம்பி, தங்கைகளே.....!**

மேலே காணும் படத்திற்கு வர்ணம் தீட்டி கத்தரித்து அனுப்பி வையுங்கள். அழகுற வர்ணம் தீட்டி சிறந்த படங்களை அனுப்புவோரில் முதல் மூவருக்கு முறையே ரூ.150/=, ரூ.100=, ரூ.75 /= பெறுமதியான வர்ணம் தீட்டுவதற்கான உபகரணங்கள் பரிசில்களாக வழங்கப்படும். 5ஆம் தரத்துக்கு உட்பட்ட சிறுவர்களே இப்போட்டி யில் கலந்துகொள்ளமுடியும். எங்கே முயன்று பாருங்கள்! கை வண்ணத்தைக் காட்டுங்கள்!!

*இந்தப் பரிசில்களை வழங்கும் நிறுவனம்:-*

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
*2/2, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.*
*தொ.பே : 222 5542*

*அனுப்பவேண்டிய முகவரி:-*

**'வர்ணம் தீட்டுவோம்' - 15, சூரியகாந்தி 'சிறுவர் பொழில்'**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

வர்ணம் தீட்டி மகிழுங்கள் போட்டியில் ஏராளமான சிறுவர்கள் ஆர்வத்துடன் பங்குகொண்டு படங்களை அனுப்பியிருக்கின்றனர். அவர்களில் பலர் தங்கள் பெயர் விவரம், பாடசாலை விவரம் என்பவற்றைக் குறித்து அனுப்பத் தவறியதால் அவர்களது வண்ணங்கள் தெரிவில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. நீங்கள் வர்ணம் தீட்டி அனுப்பும் படத்துடன் உங்கள் பெயர், பாடசாலையின் பெயர், வகுப்பு போன்ற விவரங்களை தவறாமல் சேர்த்து அனுப்புங்கள்.

வர்ணம் தீட்டுவோம் போட்டி இலக்கம் -14இல் தெரிவுசெய்யப்பட்ட மூவரின் விவரங் கள் வருமாறு:-

- ***முதலாம் இடம் :-***
  *ஜெ.துசியந்தன்,*
  *சோமசுந்தரம் பாலர் பாட்சாலை.*
- ***இரண்டாம் இடம் :-***
  *து.சாம்பவி, தரம் - 4,*
  *சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாசாலை.*
- ***மூன்றாம் இடம் :-***
  *செ.ஜொய்சி,*
  *தரம் - 5,*
  *அம்பன் அ.மி.த.க.பாடசாலை.*

## விடுகதைகள்

- வாழ்க்கையைப் படித்தவர், வாழ்ந்து காட்டி வாழ அறம் தந்தவர். வையகம் போற்றிடும் வான் புகழ் கொண்டவர். அவர் யார்?
- நடமாடும் நான்கு தூண் மண்டபத்தில் மலைப் பாம்பொன்று ஆடும். அது எது?
- வீட்டுக்குள் இரை தேடி களவாடும். வேட்டையாடி விருந்துண்ணும். வீட்டார் வெறுக்காமல் வளர்க்கின்ற செல்லப் பிள்ளை. அது எது?
- சிவந்த பூ தொப்பிக்காரன். விடியலுக்கு காவல்காரன். குப்பை மேட்டிலிருந்து கூவித் தினமும் எழுப்பிடுவான். அவன் யார்?
- கொம்பிரண்டு எனக்குண்டு குத்தமாட்டேன். கண்ணிரண்டு அதில் உண்டு காண்பதற்கு அது என்ன?
- கடவுள் படைத்த கல்லுக்குள் ஈரத்தில், கலங்காமல் கடைசி வரை என் வாசம். நான் யார்?
- பூஞ்சோலை வரவேற்கும் பூவை அவள் வண்ண வடிவழகி தேனெடுக்க வந்திடுவாள். அவள் யார்?
- ஓடி ஓடி உறவு கொள்வேன். நாடு நகரம் எனக்கில்லை. எல்லார்க்கும் சொந்தமாக எடுப்பார் கைப்பிள்ளை. நான் யார்?
- குடை விரிந்த தலைமீது குடம் குடமாய் நீர் சுமந்து கொடையாய் அளித்ததும் எங்கள் குப்பத்துக் கொடைவள்ளல். அவர் யார்?
- ஒரேயொரு தூண் மீது நூறுகால் மண்டபம். ஓராயிரம் பறவைகள் அங்கு வந்து குடியேறும். அவை ஆடவும் ஊஞ்சல் உண்டு. பசியாறவும் கனி உண்டு. அது என்ன?

**திருவள்ளுவர்,யானை,பூனை,சேவல், நத்தை, தேரை, வண்ணத்துப்பூச்சி,ஆறு, தென்னை மரம்,ஆலமரம்**

-கஜன்


### உங்களின் கைவண்ணங்கள்



செ.ஜங்கரன்,
தரம் -7பி,
யா/மானிப்பாய் இந்து கல்லூரி.



கு.பானுகாஸ்,
தரம் - 9,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.



போ.கோபிசாளினி,
தரம் -2டி,
சென்.புனித ஜோண் பொஸ்கோ.



யோ.டர்ஷினி,
உயர்தரம் 2008
யாழ்/இந்து மகளிர் கல்லூரி.




## சிந்தனைத் துளிகள்

* தண்டனை பெற்ற பிறகு தான் தீயவன் தன் குற்றத்தை உணருவான். மழை பெய்த பிறகுதான் பயிர்செய்ய வேண்டுமென்பதை விவசாயி அறிவான்.

* உலகம் ஒருநாடக அரங்கம். அப்படியிருக்க உணர்ச்சியுள்ள மனிதன் எவனும் அதில் பங்கு கொள்ளாமல் தனித்திருத்தல் இயலாது.

* கஷ்டப்பாட்டின் மூலம் பெறப்படும் வெற்றியில்தான் மேலும் செய்ய வேண்டிய முயற்சியைத் தூண்டக் கூடிய சக்தி இருக்கிறது.

* பழங்காலத்துச் சரித்திரம் என்பது நம் கையில் இருக்கும் களிமண் போன்றது. அதற்கு நாம் எப்படி வேண்டுமானாலும் உருவம் கொடுக்கலாம்.

* எந்தச் சுலபமான காரியத்தையும் செய்து முடிக்க கஷ்டமான வழி ஒன்று இருக்கிறது. அதைக் கண்டு பிடிப்பதுதான் கெட்டித் தனம்.

* அனேகமாக நாம் செய்யும் தவறுகள் மன்னிக்கக் கூடிய தவறுதான். ஆனால், அதை மறைப்பதற்கு நாம் கையாளுகிற வழிகள் இருக்கிறதே அவைதான் மன்னிப்புக்கு அப்பாற்பட்டவையாகி விடுகிறது.

சிவசுப்பிரமணியம் - வாமதீபன்
கொக்குவில் இந்துக் கல்லூரி.

### என் அன்னை

*உதிரத்தை உயிராக்கி*
*உருவாக்கினாள் - என் அன்னை*
*பத்து திங்கள் சுமந்து*
*பாரினுக்காய் பரிசளித்தாள் - என் அன்னை*
*கருவிற்குள் மூடினாள்*
*கண்ணிமை போல் காத்தாள் - என் அன்னை*
*கண்ணைக் காக்கும் - இமை போலும்*
*மடியினிலே தாங்கினாள் - என் அன்னை*
*நல்லதொரு பிரஜையாக - நாட்டிற்கு*
*உவந்தளித்தாள் - என் அன்னை*
*இரத்தத்தையே பாலாக்கித் தந்து*
*என்னை உருவாக்கினாள் - என் அன்னை*

நா.விதுஷன், தரம் - 7சி,
[illegible]

## புதுமை கண்டவர்

அப்பிள் மரத்தின் பக்கத்திலே
அயர்ந்து தூங்கினார் ஓரறிஞர்
அழகிய அப்பிள் பழமொன்று
அவரின் தலையில் வீழ்ந்ததுவே.

விழித்து எழுந்த அறிஞருமே
விழுந்த அப்பிள் பழந்தன்னை
வியப்புடன் பார்த்தார் சிலநிமிடம்
விந்தை அல்லோ இது என்றார்.

பழுத்த இந்தப் பழந்தானும்
பறந்து மேலே செல்லாமல்
கீழே விழுந்த மாயமென்ன?
கேள்வி பிறந்தது அவர்மனதில்

நீண்ட நேரம் யோசித்தார்
நித்திரை இன்றி ஆராய்ந்தார்
பூமியில் இருந்து மேல்நோக்கிப்
போகும் பொருள்கள் யாவுமே


புவியின் ஈர்ப்புக் காரணமாய்
பூமிதன்னை நாடியே
பொத்தென வீழ்ந்திடும் உண்மையினைப்
புதிதாய்க் கண்டேன் என்றிட்டார்

அந்த உண்மை தன்னையே அகிலம் அறிய
உணர்த்தியவர்
ஆங்கில நாட்டு அறிஞராம்
ஐசாக் நியூட்டன் அவர் பெயராம்.

செ.ஜங்கரன் , 7பி,
யா/ மானிப்பாய் இந்துக்கல்லூரி.

## நீர்த்தாவரங்கள்

குளம், குட்டை முதலிய நீர்நிலைகளில் தாமரைப் பூக்களைப் பார்த்திருப்பீர்கள். தாமரை நீரில் வளரும் ஒரு தாவரம். அல்லி, நெய்தல், செங்கழுநீர், குவளை முதலிய தாவரங்களும், புல் இனத்தைச் சேர்ந்த கோரை வகைகளும் நீரிலேயே வளருகின்றன. இவையெல்லாம் நீர்த் தாவரங்கள் எனப் படும்.



நீர்த் தாவரங்களுள் சில முழுவதும் நீருக்குள் இருக்கும். இவற்றில் பெரும்பாலானவை அல்கா எனப்படும் கடல்பாசிகளாகும். இவற்றுக்கு வேர், இலை, பூ எதுவுமில்லை. இவை நீரில் கரைந்துள்ள ஒட்சிசனை எடுத்துக்கொண்டு உயிர்வாழ்கின்றன. வேறு சில நீர்த்தாவரங்கள் நீர்ப் பரப்பில் மிதந்துகொண்டிருக்கும். இலைப்பாசி இவ்வகையைச் சேர்ந்தது. இது நீருக்கு வெளியே தெரியும் தண்டுப் பகுதியின் மூலம் காற்றிலிருந்து ஒட்சிசனை எடுத்துக் கொள்ளும். மேலும் இவற்றின் இலைக்காம்புகளின் அருகில் காற்று நிரம்பிய பைகள் உள்ளன. இதனால் இவை நீரில் மிதக்க முடிகிறது.

தாமரை, அல்லி போன்றவையும், கோரைப் புல் வகைகளும் நீரில் ஓரளவு மூழ்கியும், ஓரளவுக்கு வெளியே நீண்டும் இருக்கும். இவற்றின் வேர் நீர்ப்படுகையில் ஊன்றிக் கொண்டிருக்கும். இலையும் பூவும் நீர்ப் பரப்புக்கு மேலே நன்றாக எழுந்து காற்றுப் படும்படி நிற்கும். ஆகாசத் தாமரை, பிசாசுத் தாமரை போன்றவற்றின் வேர் நீர்படுகையில் ஊன்றிக் கொண்டிருக்கும். இலையும் பூவும் நீர்ப்பரப்புக்கு மேலே நன்றாக எழுந்து காற்றுப் படும்படி நிற்கும். ஆகாசத் தாமரை, பிசாசுத் தாமரை போன்றவற்றின் வேர் நீர்ப்படுகையில் ஊன்றியிருப்பதில்லை. இவை குறுகலான வேர் மண்டலத்துடன் கொத்துக்கொத்தாக நீரில் மிதந்து கொண்டிருக்கும்.

கடற்கரையோரங்களிலுள்ள சதுப்பு நிலங்களிலும் உப்பு நீர்நிலைகளிலும் கிண்ணை, கண்டல் போன்ற தாவரங்கள் வாழ்கின்றன. இங்கு தண்ணீர் நிறைய இருந்தாலும் அதிலுள்ள உப்பானது, இத்தாவரங்களின் வேருக்குள் நீர் புகாமல் தடுத்துவிடுகிறது. அதனால் இவற்றுக்குப் போதிய நீர் கிடைப்பதில்லை. எனவே, இவை நீரில்லாத பாலை வனங்களில் வாழும் பாலைத் தாவரங்களைப் போல் பருத்த, சொருசொருப்பான சிறிய இலைகளை உடையனவாக இருக்கின்றன.

- கவிதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தந்தை யா?



குரங்கில் இருந்து வந்தவன் மனிதன் என்றுதான் பொதுவாகச் சொல்கிறார்கள். ஆனால், அதற்கு முன்பாக எலி மனிதனின் மூதாதையராக இருந்திருக்கலாம் என்று இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மயிர்க்காடாக உள்ள சின்னஞ்சிறு சுண்டெலி எங்கே? ஆறடி உயரத்திற்குப் பிரமாண்டமான மனிதன் எங்கே? மொட்டைத் தல்லைக்கும் முழங்காலுக் கும் முடிச்சுப் போடுகிறேன் என்று நினைக்கிறீர்களா?

உடம்பெல்லாம் ரோமக் காடாக உள்ளஅலுமாரிகளுக்குள் துருதுருவெனத் திரிகிற, துணிகளையும் தாள்களையும் கரும்பிப் போடுகிற சுண்டெலி, மனிதர்களின் முன்னோடிகள் என்கின்றனர் ஐரோப்பிய விஞ்ஞானிகள். நம்முடைய மரபணுக்களில் 99 வீதம் எலிகளிடமும் உள்ளதாம். எலிகளின் ஜீன் எனப்படும் மரபணுக்கள் மட்டுமல்ல, அவற்றில் இருந்து உருவெடுப்பதும் நோய்கள் உண்டாகும் முறையும் எலிகளின் பழக்கவழக்கங்களும் மனிதர்களுடையதைப் போல் இருக்கின்றன என்கின்றார்கள். இது எப்படி?

சுமார் 7 கோடி ஆண்டுகளுக்கு முன்பு எலிகளுக்கும் மனிதர்களுக்கும் ஒரே மூதாதையர்தான் இருந்திருக்கிறார்கள். அதன் பிறகு தான், வெவ்வேறு பரிணாம திசையில் வளர்ச்சி பெறத் தொடங்கி விட்டோம். இப்படிப்பட்ட நிலையில் மனித குலத்தின் மரபணு இரகசியங்களைப் புரிந்துகொள்வதற்கான ஆராய்ச்சி வாகனமாக எலிகள் ஆக்கப்படுகின்றன. இத்தகைய ஆராய்ச்சிக்காக பல லட்சக்கணக்கான மரபணு திருத்தப்பட்ட எலிகளை உருவாக்கிட 18 கோடி அமெரிக்க டொலர் செலவில் ஐரோப்பிய யூனியன் திட்டம் ஒன்று அண்மையில் வெனிஸ் நகரில் தொடங்கப்பட்டது. இந்த ஆராய்ச்சியில், மனிதர்களுக்குப் பொதுவாக ஏற்படக் கூடிய சர்க்கரை நோய், இதயநோய், புற்றுநோய், மனநோய் போன்ற நோய்கள் அனைத்தும் எலிகளிடம் உருவாக்கப்படும். இவ்வாறு செய்து, இந்த நோய் நிலைமைகளின் மரபணு மற்றும் சுற்றுச்சூழல் வேர்கள் கண்டறியப்பட்டு, மருந்துத் தயாரிப்பிலும் நோய் சிகிச்சையிலும் புதிய பாதை போடப்படும். எலிகளின் மரபணுக்கு உள்ள ஆற்றலை ஐரோப்பிய யூனியன் புரிந்துகொண்டு விட்டது என்று எலி ஆராய்ச்சித் திட்ட ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் வுலஃப் கேங் வுர்ஸ்ட் கூறுகிறார்.

மூன்றாண்டுகளுக்கு முன்பு முடிவடைந்த மனித மரபணுக்களை வரிசைப்படுத்தும் திட்டத்தின் தொடர்ச்சியாக, இந்த யூரோ மவுஸ் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. மனித உடம்பை உருவாக்குகிற 20,000 ஜீன்கள் ஒவ்வொன்றும் எவ்வாறு உருவெடுத்தன என்பது டி என் ஏ வரிசைப்படுத்தும் திட்டத்தின் மூலம் கண்டறியப்பட்டது. ஆனால், அவற்றில் பாதி ஜீன்களின் புரத உள்ளடக்கம் என்ன என்பது விஞ்ஞானிகளுக்குத் தெரியவில்லை. இப்போது அந்த ரகசியத்தைக் கண்டறிவதற்கு, மனிதர்களைப் போல மரபணு அமைப்பு உள்ள எலிகள் உதவப் போகின்றன என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

# விட்டில் பூச்சியாய்...

விட்டில் பூச்சிகள் இவை யாரையும் பொதுவாகத் தாக்காது, கடிக்காது, விஷத் தன்மையற்றவை. இவற்றால் வேகமாகவும் பறக்க இயலாது. இவை ஈ, கொசுக்களைப் போன்று கொடிய வியாதிகளைப் பரப்புவதும் கிடையாது.

பழுப்பு நிறத்தில் 7/16" இருந்து 9/16" வரை வளரும் விட்டில் பூச்சி மிருதுவான, நீள் வடிவமான உடலினைக் கொண்டது. பொதுவாக இவற்றை வசந்தகால மாலைப் பொழுதில் காணக் கிடைக்குமாம். இவற்றின் வாழ்க்கைக் காலம் 3 நாள்களிலிருந்து ஒரு வாரம் வரை இருக்குமாம்.

இவற்றின் உடலிலிருந்து வரும் ஒளிவெள்ளமானது தனித்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இதன் முழு சக்தியும் ஒளிகீற்றாக வெளியேற்றப்படுவதாகத் தெரிந்தாலும், வெறும் 10% மட்டுமே ஒளியாகவும் பிற 90% வெப்ப சக்தியாகவும் வெளியேற்றப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பொதுவாக இவற்றின் பின் பகுதியிலிருந்தே ஒளியானது வெளிக்கொணரப்படுகிறது. இதன் பின் பகுதி, கிடைத்தற்கரிய இரசாயனங்களான 'லூசிஃபெரின்', 'லூசிஃபெரஸ்' போன்றவற்றை உள்ளடக்கியதாம். அதன் உடலில் உள்ள அரினோஸின் ட்ரைஃபாஸ்பேட் மாற்றும் சக்தியாக இருந்து லூசிஃபெரின், லூசிஃபெரஸ் கலவையை ஒளி சக்தியாக மாற்றுகிறது. அனைத்து உயிரின செல்களிலும் ஏடிபி இருக்கின்ற காரணத்தால் விட்டில் பூச்சியின் இரசாயனக் கலவையை மனித உடலில் ஏற்றும் பொழுது, செல்களுக்குள் ஏற்படும் இரசாயன மாற்றத்தினால் புற்றுநோய்க்கான அறிகுறிகளையும் இன்ன பிற மருத்துவ பயன்பாட்டிற்கும் இவை உதவுகின்றன.

இது மட்டுமல்லாமல் கழிவு நீர் சுத்திரிகரிப்பு சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பன்றிகளின் உயர் இரத்த அழுத்தத்தை போக்குவதற்கும் விட்டில் பூச்சிகள் தேவையாக இருக்கின்றது. அது மட்டுமல்லாமல் விண்வெளித் துறையிலும் இதன் பயன்பாடுகள் அதிக அளவில் உள்ளதாம்.

இவற்றின் இரசாயனங்களை செயற்கையான முறையில் உற்பத்தி செய்ய இயலாத காரணத்தால் வளர்ந்த நாடுகள் பல இவற்றை பெருக்கம் செய்வதில் ஆர்வமாக இருக்கின்றன.

# மனிதன் தோன்றினானா... படைக்கப்பட்டானா?



கடவுள் மனிதனைப் படைத்தார் என்பது, உலகப்பொது நம்பிக்கை. இந்த நம்பிக்கை தொய்ந்து துவண்டு போகாமல் இருப்பதற்காக, ஏதேன் தோட்டம், ஆதாம் ஏவாள், ஆப் பிள் என்று ஏதே தோ கதை கட்டி மக்களைக் கற்பனை உலகில் ஆழ்த்தினர் மதவாதிகள். ஆனால், இத்தகைய மத அடிப்படைவாதிகளின் கற்பனாவாத்தைத் தவிடுபொடியாக் கும் வகையில், இந்தப் பூமியில் உள்ள உயிர் நிலையானதல்ல என்றென்றும் மாறிக் கொண்டே இருப்பது என்று திடுக்கிடும் ஒரு உண்மையை வெளிச்சம் போட்டுக் காட்டி னார் சார்ள்ஸ் டார்வின் என்ற விஞ்ஞானி. அவர், உயிர்களின் பரிணாம வளர்ச்சியை ஆராய்வதற்காக கரபகோஸ் தீவுகளைத் தனது ஆய்வுக் கூட்டமாக்கினார். 1860ஆம் ஆண்டில் உயிர்களின் பரிணாம வளர்ச்சி என்ற கோட்பாட்டை டார்வின் முன்வைத்த பிறகு மனிதர்களும் எண்ணற்ற உயிரினங்களும் எவ்வாறு தோன்றின என்ற பழமை வாதக் கண்ணோட்டத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. எந்த ஒரு விஷயத்தையும் அறிவியல் நோக்கோடு ஆராயும் ஒரு போக்கு உருவெடுத்தது.

ஆனால், இந்த முன்னேற்றப் போக்கில் ஒரு பின்னடைவை ஏற்படுத்தும் ஒரு முயற்சி அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. அறிவுத்திட்டம் என்ற பெயரில், அமெரிக்காவில் அறிவியல் வகுப்புகளை நடத்தும் போது, கோட்பாடுகளைக் கற்பிக்க வேண்டும் என்று ஆராட்சியாளர்கள் உத்தர விட்டுள்ளனர். மனிதனுடைய பரிணாமம் பற்றி மாணவர்களுக்கு விளக்கும்போது, இறுதியிலே ஒரு படைப்பாளி இருந்தார் என்ற எண்ணத்தை அவர்களின் உள்ளத்தில் பதிய வைப்பதே இந்த முயற்சியின் நோக்கம் என்று டார்வின் ஆதரவாளர்கள் கூறி, எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். தங்களது எதிர்ப்புக்குச் செயல் வடிவம் கொடுக்கும் வகையில் அண்மையில், நியூயோர்க்கிலுள்ள அமெரிக்க இயற்கை வரலாறு அருங்காட்சியகத்தில் டார்வின் பொருள்காட்சி ஒன்றைத் தொடக்கியுள்ளனர்.

2006 மே 29 வரை தொடர்ந்து நடை பெறவுள்ள இந்த டார்வின் பொருள்காட்சி யில், டார்வினின் ஆராய்ச்சியுடன் தொடர்புடைய பலபொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அவர் ஆராய்ச்சிக்காக முதலில் கரபகோஸ் தீவுக்கும், இதர தென்னமெரிக்க ஊர்களுக்கும் சென்ற போது சேகரித்த பொருள்கள் இவை. இவற்றிலே முக்கியமானவை உயிருள்ள இரண்டு ஆமைகள், ஒரு பஞ்சோந்தி, கொம்பு முளைத்த தவளை போன்றவை. இந்தப் பொருள்காட்சி ஒரு தலைப்பட்சமாக எந்தக் கோட்பாட்டை யும் ஆதரிக்கவில்லை என்று அருங்காட்சியக அதிகாரிகள் கூறினாலும், புஷ் மற்றும் மதத்தலைவர்களின் அறிவுத்திட்டத்திற்கு எதிரானது இது என்பது பெரும்பாலானவர் களின் கருத்தாகவுள்ளது.

அறிவியல் மற்றும் டார்வின் பற்றிப் பேசும் நாம் ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய வேளை வந்துவிட்டது என்று அமெரிக்க இயற்கை அறிவியல் அருங்காட் சியகத்தின் புரவலர் TOMBROKAW கூறுகிறார்.

# மாரடைப்பைத் தடுக்கும் சிரிப்பு...!



சிரித்தால் உடல் நலத்துக்கு நல்லது. எனவே, நன்றாகச் சிரியுங்கள் என்று வைத்தியர்கள் பொதுவாகச் செல்வதுண்டு. ஆனால், சிரிப்புக்கு மாரடைப்பைத் தடுக்கும் சக்தி உண்டு என்பதையும் மருத்துவ ஆய்வில் கண்டுபிடித்துள்ளனர். இங்கிலாந்தில் உள்ள ஹார்வர்டு மருத்துவ ஆராய்ச்சி கல்லூரியில் இது சம்பந்தமாக ஆராய்ச்சி நடந்தது.

அதில் மாரடைப்புக்கு மன அழுத்தமும் கோபமும் தான் முக்கிய காரணமாக உள்ளது அதைச் சிரிப்பு மூலம் விரட் டலாம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக உடலில் கொழும்பு அதிகமானால் இரத்தக் குழாய்களை அவை அடைத்து உடலில் மற்றப் பகுதிக்கு இரத்தங்கள் போவதைத் தடுக் கும். இதனால் மாரடைப்பு ஏற்படும்.

கொழுப்பு அதிகம் இல்லாவிட்டாலும் கூட மன அழுத்தம், கோபம் போன்றவற்றால் ரத்த நாளங்களில் சுரப்பிகள் பாதிக்கப்பட்டு அதனாலும் மாரடைப்பு ஏற்படுகின்றதாம்.

ஆனால் சிரிக்கும்போது மன அழுத்தமும் சரி கோபமும் சரி ஓடோடி போய்விடுகிறது. எனவே சிரிப்பு மாரடைப்பைத்தடுக்கிறது.


அத்தோடு தினமும் சிறிய அளவில் உடற்பயிற்சி செய்வது நல்லது. இதில் சிறிய பயிற்சி ஒன்று உள்ளது. தினமும் 5இல் இருந்து 10 நிமிடம் வரை ஆழமாக மூச்சை இழுத்துவிடவேண்டும் . இதனாலும் கோபம், மன அழுத்தம் குறையும்.

இத்துடன், அடிக்கடி தண்ணீர் குடிப்பதாலும் கோபம், மன அழுத்தம் குறையும். உடல் உறுப்புகள் செயற்பாடு நன்றாக இருக்கும் என்று ஆய்வு கூறுகிறது.




தயாரிப்பு : சாயினி

# கரப்பான் பூச்சியா ஆச்சரியம்தான்...!



கரப்பான் பூச்சிகளைக் கண்டாலே எல்லாரும் வெறுக்கிறோம். இந்த கரப்பான்பூச்சி நோயைத் தீர்க்கும் அரிய மருந்தாகவும் விளங்குகிறது என்றால் நம்புவீர்களா? ஆம்! 'பிராங்கியல் ஆஸ்துமா' நோயாளிக்கு குறிப்பாக மூச்சுத் திணறல் இடைவிடாமல் மேல், கீழ் மூச்சு இவற்றால் அவதியுறும் போதும், இன்னல்களை உடனே அகற்றும் நண்பனாக உதவி செய்கிறது கரப்பான் பூச்சி.

1896 ஆம் ஆண்டு ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த ஆங்கில மருத்துவத்தில் எம்.டி.பட்டம் பெற்ற டாக்டர் சாமுவேல் கிருஸ்டியன் பிரட்ரிக் ஹானிமென் அவர்களால் உலகுக்கு அறிமுகம் செய்யப்பட்ட 'சிம்லியா சிமிலிபுஸ் க்யூரென்டர்' அதாவது ஒத்தவைகள் ஒத்தவைகளால் குணமடையும் என்ற தத்து வத்தை மையமாகக் கொண்டு பயன்பட்டு வரும் கோமியோபதி மருத்துவ முறையில் கரப்பான், பிராங்கியல் ஆஸ்துமாவின் மருந்தாக பயன்படுத்தப் பட்டு வருகிறது.

'பிளாட்டா ஓரியன்டாலிஸ்' என்பது கரப்பானிலிருந்து தயாரிக்கப்படும் கோமி யோபதி மருந்து. ஆஸ்துமா சம்பந்தமான உபாதைகள் அதிகரித்து நோயாளி பரிதாபமாக மூச்சுத்திணறலில் சிக்கலுற்று திக்குமுக்காடும் போது பிளாட்டா ஓரியன்டாலிஸ் திரவத்தை (15 முதல் 20 சொட்டுகள்) நான்கு கரண்டி வெந்நீரில் கலந்து கொடுக்கும் போது, ஆங்கில மருத்துவத்தில் ஊசி போட்டுத்தான் தணிக்க முடியும் என்ற நிலையிலுள்ள மூச்சுத் திணறலைக் கூட ஊசி இன்றி ஹோமியோபதியில் கரப்பான் பூச்சி மூலம் எளிதில் தணிக்கலாம்.

நாள்பட்ட மற்றும் கட்டுக்கடங்காத ஆஸ்துமாவைக் கூட மட்டுப்படுத்தக் கூடிய ஆற்றல் பெற்றுள்ளது. இந்த கரப்பான்கள் என்றால் ஆச்சரியமா இல்லை!

# உங்களுக்காக.....

**உடல்இளைக்க:-** காலை எழுந்ததும் வெறும் வயிற்றில் ஒரு ஸ்பூன் தேன், ஒரு மூடி எலுமிச்சை சாறு ஆகியவற்றை ஒரு டம்ளர் சுடுநீரில் கலந்து தினமும் குடித்து வந்தால் நாளடைவில் உடல் பருமன் குறையும்.

**பிரண்டைத் துவையல் :-** மூல நோயால் பாதிக்கப்பட்டவர்கள் பிரண்டையைத் துவையலாக அரைத்துச் சாப்பிட்டு வந்தால், மூல நோய் நாளடைவில் குணமாகும்.

**வாய்ப்புண் அகல :** வெண்ணெய் அல்லது நெய்யை வாயில் ஊற்றி, அவை மெல்ல மெல்லக் கரையும் வகையில் மெதுவாக முழுங்கினால், வாய்ப்புண், தொண்டைப் புண் நீங்கும்.

**வேப்பிலைக் கொழுந்து :-** வேப்பிலைக் கொழுந்தைப் பறித்து காலை நேரத்தில் மென்று தின்றால் வயிற்றிலுள்ள பூச்சிகள் வெளியேறும். வயிற்று உபாதைகள் நீங்கும்.

**உடல் சதை பிடிக்க:-**

இரவு நேரத்தில் பால் குடிக்கும்போது அதனுடன் இரண்டு மூன்று பாதாம் பருப்பு அரைத்துக் கலந்து சாப்பிட்டால்

ஒரே மாதத்தில் 'புசுபுசு'வென ஊதி விடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கோயிங் டவுணில்' (Going Down Party)

# ஆடலின் இடம்

## - ஓர் அரங்க மாணவனின் பதிவு

பல்கலைக்கழகத்தில் பலவகைக் கொண்டாட்டங்கள் நடைபெறும். பலர் பங்குபற்றுவதும், பங்குபற்றாமல் விடுவதும், விமர்சிப்பதும் வழமை. இங்கு வரவேற்பு விழா (WelCome Party), ஆண்டு இறுதிப் பார்ட்டி (Year end Party) கோயிங் டவுன் பார்ட்டி (Going Down Party) என்பன மாணவர்களுக்கு மகிழ்வானவை. அதிகமான மாணவர்கள் பங்குபற்றுவதும் உண்டு.

ஈழத்தின் பல பாகங்களில் இருந்தும், மேலும் இலங்கையின் பாகங்களில் இருந்தும் ஒன்றுகூடும் மாணவ சமூகம் ஒன்றிணைந்து உறவாடி கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவேளை தமிழர் தாயகத்தில் பெருக்கெடுத்த நிழல் யுத்தம் எமையெல்லாம் சிதறடித்தது. இனி எப்ப எப்பவோ? என்ற சஞ்சலத்துடன் ஏக்கத்துடன் சிதறிப் போனோம்.

ஆயினும், சில இணக்கப்பாடுகளுக்கு மத்தியில் மீண்டும் ஒரு பெருமூச்செறிந்து ஒன்று சேர்ந்தோம். மூன்றுவருடம், நான்கு வருடம் எனக் கூடித்திரிந்து உறவுகளுடன் கூடி இருப்பதற்கான இறுதி நாள்கள் இவை . இந் நாள்களில் ஒருநாளாக மகிழ்களமாக இந்த 'Going Down Party' அமைந்தது.

மந்திரத்திற்கு கூட சுதந்திரம் இல்லாத அடக்குமுறைக்குள் வெறித்தோடிய முகங்களுடன் அரையாண்டுப் பரீட்சை இயந்திரத்தின் பணியைத் தொடங்கிய எம்மிடையே அனைவரும் ஒன்று சேர்வதற்கும் கூடி மகிழ்ந்திருப்பதற்கும் உறவுகளைப் பகிர்ந்து கொள்வதற்குமான ஒரு களமாகவே Going Down Party அமைந்தது.

மூன்று மாதங்களாக வாடியவளாகம் காலை 9.00 மணியளவில் மங்களகரமாக நிறைந்தது. பல்கலைக்கழகத்தின் எல்லா இடங்களிலுங் உறவுகளை நிழலாக்கித் தன் உடைமையாக்கும் கைங்கரியம் சூடு பிடித்தது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருவிகளுடன் களம் இறங்கினர். மண்டபத்தினுள் ஆரம்பமான ஆசியுரை, வாழ்த்துரை, சிறப்புரைகள் எல்லாம் எம்மைப் பற்றிய தமது கற்பனைகள், ஆசைகள், விருப்பங்கள் என்பவற்றைக் கூறி எம்மை உற்சாகப்படுத்தினர்.

மெல்ல மெல்ல இசை ஒலிக்கத் தொடங்கியது. அதன் ஓசை மண்டபம் எங்கும் வியாபித்தது. அங்கொன்றும், இங்கொன்றுமாக கைகள், தலைகள் என அசைந்தன. அசைவுகளின் வளர்ச்சியும் வேகமும் ஆடலாகப் பரிணமித்தது. வழமையாகவே பல்கலைக்கழக வளாகத்தினுள் தம்பாட்டில் திரியும் மாணவர்கள், தனிமையை விரும்புபவர்கள். எந்த நேரமும் புத்தகமும் கையுமாக இருப்பவர்கள் எல்லோரும் ஆடலினுள் உள்வாங்கப்பட்டனர். இசையின் வேகம், இனம், உள்ளங்களை உலுப்பி எடுத்தது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு அழகிய நடனக்கோலங்களை உருவாக்கினார்கள். ஒருவரை ஒருவர் கட்டித்தழுவி உறவு பகிர்ந்து கொண்டனர். காவடி ஆடினார்கள். சக நண்பர்களை ஏந்தி ஆடினர். முரண்பாடுகளை வளர்த்து கோபமாக இருந்தவர்களையெல்லாம் கட்டித்தழுவி, கண்ணீர்விட்டு கும்மாளம் கொட்டினர். இசையும் இசையினூடுவிரியும் நடனமும் அவர்களுடைய அடிமனதை உலுப்பி, யோசிக்க கற்பனை செய்ய வைத்தது என்பதில் ஐயம் இல்லை. ஏனெனில், ஆடித்திளைத்த மாணவர்களின் மொழிகளே அதற்கு வெளிப்படைச் சான்று.

'எல்லாமே பறந்து போய்ச்சு மச்சான்....
இனி எப்ப எங்களுக்கு இப்பிடி இடம் கிடைக்கும்'
'3 வருசமும் கம்பஸை அனுபவிக்கேல்லை...'
இப்ப தான் நினைக்க கவலையாய் இருக்கு...
" இனி எப்ப யார் யாரை சந்திப்பம்?...!"
"இனி நாங்க லெக்சர் கோலுக்கு வர ஏலாது ா...."
"கம்பஸ் வாழ்க்கை இனிக் கிடைக்குமா?...!" எல்லா வாய்களும் ஆழ்ந்த தேடல்களில் முணுமுணுத்தன.

'இனி எப்ப எங்களுக்கு இப்படி இடம் கிடைக்கும்? இங்கு இடம், இடம் கொடுத்தல் என்பது முக்கியமானது. கிடைக்கும் இடத்தில் சுதந்திரமாகச் செயற்படும் ஒரு பயணம் Tranformation. இப்பயணத்திற்கு ஊடாக வெளியேறுகை இடம்பெறும். இவ்வெளியேறுகையும் ஒருவகை கதாசியே. இங்கு தான் புரிதல், பகிர்தல், உணர்ச்சி வெளிக்கொணர்கை என்பன இடம் பெறும். அதாவது தனக்கு கட்டுப்பாடுகள் இல்லை என உணரும் இடத்திலே தான் தடைகள் அற்ற அழகிய பயணம் நிகழும். ஏனெனில், அரையாண்டு (semester கல்வித்திட்டம் பொறிமுறை இயந்திரத்தின் கற்றல் கடுகதி வேகத்தில் மாணவர்களை ஒன்றிணைத்துச் செயற்படுத்தும் களம் இந்தப் பார்டிகளேயாகும்.

இந்த ஆடல், பாடலுக்குள்ளால் ஏற்படும் பயணம். இப்பயணத்தினால் ஏற்படும் உணர்ச்சி வெளிக்கொணர்கை. இதனால் ஏற்படும் திருப்தி அல்லது மனச்சுமைக் குறைப்பு, உறவுப்பகிர்வு இங்குள்ள மாணவிகளுக்கும் ஏற்பட வேண்டும். இவர்களுக்கான ஆடல் வெளிகளும் இக்களங்களால் கண்டுபிடிக்கப்பட வேண்டும். இவை ஆரோக்கியமானவையாக அமையவேண்டும்.

ஊரில் ஆலகள கூடுகின்ற மரபு குறைவடைந்து வருகின்றது. உலக மயமாக்கலால் எஞ்சிய கிராமங்களும தீக்கிரையாக்கப்படுகின்றன. எமது சமூகம் ஓடிக் களைத்து வினீர் வடிக்கின்றது. அயல் வீட்டுக்காரன் யார் என்று தெரியாத, தனக்குத் தனக்கென்ற ஊழித் தாண்டவ வாழ்க்கை. எம் கோயில் வெளிகளிலும், சனசமூக நிலையங்களிலும், மந்திரம் சொல்லவும் மனிதர்களில்லை. இங்கு கூடி

**காண்பியா**
யாழ்.பல்கலைக்கழகம்

மகிழ ஊரே இல்லை. ஊரின் இதயத்துடிப்பு அடங்கிப் போயிற்று. இந்த உப்புச்சப்பற்ற சமூக வாழ்க்கைக்குள்ளேயே வந்த நாம் ஒன்றாக சேர்ந்து செயற்படும் களம்தான் பல்கலைக்கழக விருந்து. எல்லோரும் ஒன்று கூடி கிடைக்கும் சுதந்திர இடத்தில் செயற்பட்டு, பயணம் பண்ணி, மனப் பாரங்களை இறக்கி வைத்து உறவுகளைப் பலமாக்கி, ஆடித் தீர்த்து தன்னைத் தான் சுய அறிதலுக்கு உடபடுத்திக் கொண்டு எதிர்காலம் பற்றி யோசிக்கின்ற ஆடற்களங்களே (Party) களாகும். ஏனெனில் , கோவில் வெளிகளில் மாத்திரம் ஆடல் தன் மந்திர வலிமையைக் கொண்டிருக்கவில்லை. மாறாக சுதந்திரமான இடத்தில் இடம்பெறும் எந்தவொரு கட்டவிழ்த்த ஆடல், ஆடலுடனான பயணம் அதில் பங்கு பற்றுபவனை மகிழ்வித்து எதிர்கால மானுட வாழ்க்கைக்கு வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை.

---

# பத்திரிகை அலுவலகத்துக்கு...

(IIIஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அவளை ஒரு நிருபராக நியமிக்க விரும்புவதாகக் கூறினார். இதைக்கேட்டு எலிசபெத் புளகாங்கிதமடைந்தாள்.

அப்போது ஒரு சில பெண்களே பத்திரிகையில் எழுதி வந்தனர். அவர்களும் சமையல், மலரலங்காரம் போன்ற விடயங்களையே எழுதி வந்தனர். மடன் எலிசபெத்தை ஒரு நிருபராக்க விரும்பினார்.

வேலைக்குச் செல்லும் பெண்களின் பிரச்சினைகள் பற்றி தொடராக எழுதுமாறு எலிசபெத்தைக் கேட்டுக் கொண்டார் மடன். எலிசபெத்துக்கும் அவரது திட்டம் பிடித்திருந்தது. ஆனால், அவள் முதலில் விவாகரத்துப் பற்றி ஒரு கட்டுரை எழுத விரும்பினாள். ஆசிரியர் இதைக்கேட்டு ஆச்சரியமடைந்தார். அந்த நேரத்தில் விவாகரத்துப் பற்றி மக்கள் அதிகம் பேசுவதில்லை, பத்திரிகைகள் எழுதுவதில்லை. பார்ப்பதற்கு அப்பாவியாகத் தெரியும் இந்தப் பெண் எப்படி இந்த விடயத்தைப் பற்றி எழுதப்போகிறாள் என எண்ணியவாறு முயற்சி செய்து பாருங்கள் என்றார்.

எலிசபெத் ஆடிக்கொண்டே மடனின் அறையை விட்டு வெளியே வந்தாள். அவளுக்கு ஒரு வேலை கிடைத்துவிட்டது. அவள் ஒரு நிருபர். எலிசபெத்துக்குத் தெரியும் அவளின் தந்தை ஒரு சமயம் விவாகரத்துப் பற்றிய விடயங்களைப் படிப்பதற்காக சேகரித்து வைத்திருந்தார். அத்துடன், அவள் பெண்களிடம் திருமணம் பற்றியும் திருமணமாகாத பெண்களுக்கு திருமணம் எவ்வளவு தூரம் ஒரு பெண்ணின் வாழ்க்கையில் உதவுகிறது என்பது பற்றியும் பேட்டி கண்டாள்.

தான் ஒரு சிறந்த கட்டுரை எழுதியிருப்பதாக எலிசபெத் நினைத்தாள். மடனும் அதை ஒப்புக்கொண்டார். இந்த நேரத்தில் அவளுக்கு என்ன புனை பெயர் வைப்பது என இருவரும் யோசித்தனர். அப்போது ஒரு இனிய பாடல் ஒலி பரப்பானது. அதை எழுதியவர் Nelly Bly அவரது பெயரையே சற்று மாற்றி Nellie Bly என வைப்பதென இருவரும் தீர்மானித்தனர். சில நாள்களில் நெல்லிபிளை அமெரிக்காவின் சிறந்த நிருபரானாள். எலிசபெத் என்ற பெயர் மறைந்து விட்டது. நெல்லிபிளை தனக்கு ஆசிரியரால் வழங்கப்பட்ட பணியை நிறைவேற்றத் தயாரானாள்.

### நிருபராக நெல்லி

பெண்கள் பணிபுரியும் தொழிற்சாலையொன்றுக்கு நெல்லிபிளை சென்றாள். அங்கு ஒரு பெரிய அறையில் நடுவே மறைக்கப்பட்ட நீளமான மேசையின் இரு புறமும் பெண்கள் அமர்ந்திருந்து தையல் இயந்திரத்தில் தைத்துக்கொண்டிருந்தனர். தூசி படிந்த தடுப்புச் சுவரிலிருந்து தண்ணீர் வடிந்து வேலை செய்த பெண்களின் கால்களை நனைத்துக்கொண்டிருந்தது. அவர்கள் தமது கால்களை ஈரமற்ற பிரதேசத்தில் வைத்து வேலை செய்ய முயற்சித்துக்கொண்டிருந்தனர். எலியொன்று நெல்லியைக் கடந்து வேலை செய்து கொண்டிருந்த மேசையின் கீழ் ஓடியது. இன்னொரு எலி பாண்துண்டு ஒன்றை வைத்து நன்னிக்கொண்டிருந்தது. இதை யாரும் கண்டுகொள்ளவில்லை.

எப்படி ஒருவர் இந்த இடத்தில் வேலை செய்ய முடியும் என நெல்லி ஆச்சரியப்பட்டாள் . நெல்லி வேறு பல தொழிற்சாலைகளுக்குப் போயிருக்கிறாள். அங்கெல்லாம் பெண்கள் குறைந்த சம்பளத்திற்கு நீண்டநேரம் மிகவும் கடினமாக உழைத்துக்கொண்டிருப்பர். ஆனால், அந்த இடங்கள் யாவும் சுத்தமாகவும் ஈரலிப்பற்றுமிருக்கும். அத்துடன், ஒரே வேலைக்கு பெண்களுக்கு ஆண்களை விடக்குறைந்த ஊதியம் வழங்கப்படும். இந்த இடம் மிக மோசமாயிருந்தது. ஊதியமும் பயங்கரமாயிருந்தது.

சில சமயங்களில் நெல்லி தொழிற்சாலையில் வேலை செய்யும் பெண்களுடன் உரையாடும் போது அவர்கள் இவர்களுடன் செலவிட்ட நேரத்திற்காக மேலதிக நேரம் வேலை செய்ய வேண்டியிருந்தது. நெல்லி இது குறித்து மிகவும் ஆத்திரமடைந்தாள். அவள் எமது பிட்ஸ்பார்க் நகரத்தில் என்ன நடைபெறுகிறது என எழுதினாள். நாளடைவில் நெல்லி உழைக்கும் பெண்களின் குரலாக ஒலிக்கத்தொடங்கினாள்.

(வளரும்)

---

# நான் விரும்பிய...

(IIIஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காய் 'பயமின்றிய வாழ்வை மீண்டும் அடைவோம்' என்று கொழும்பு, திருமலை, மட்டுநகரில் நடத்தப்பட்ட 'பண்பாட்டுப் பவனிகளுக்கு' இளைஞர் யுவதிகளைத் திரட்டி பயிற்சியில் ஈடுபடுத்த முன் நின்று உழைப்பு நல்கினாள். 1998 டிசெம்பர் 10 ஆம் நாள். முன்பு பல நாள்கள் தமிழர்களின் எரியூட்டப்பட்டகொழும்பு – காலி வீதியது. உலகம் அதிர்ந்து பேரக ஒரு பண்பாட்டுப் பவனி. கொற்றவையாள் எழுந்து வர சங்கு முழங்கிக் கொடி பிடித்தபடி வெற்றித் திலகமிட்டு, செவ்வாடை புனைந்து நடந்தாள். இளைஞர் யுவதிகள் அணி வகுக்க தலை நிமிர்ந்து, நெருப்பாய் எழுந்து பவனி வந்தாள். பவனியின் நிறைவில்... திரண்டிருந்த மக்கள் முன்னே அக்கினி மூச்செறிந்து தமிழ் உரைத்தாள். 'எமது விருப்பம் எது என்றே அறியாத அளவுக்கு அடிமைகளாக நடத்தப்பட்டோம் வளர்க்கப் பட்டோம். இனியும் அப்படி வாழ முடியாது' என்றது அவள் வீரக்குரல்.

கிராமத்து மக்களை விடுதலைக்காக அணி திரட்ட வேண்டும் என்று விருப்பம் கொண்டாள். திருமலையில் ஹர்சியின் பாதம்பட்ட கிராமங்கள் (நிலாவெளி, பத்தினிபுரம், கப்பல்துறை, பாலம் போட்டாறு, தம்பலகாமம்...) அந்த அனுபவத்தில் 'பிள்ளைகள் சொன்னால் பெற்றோர் கேட்பினம்' என்பது அவள் தத்துவம். திருமலை, மட்டுநகர் , வன்னியெங்கும் நாம் பிள்ளைகளுடன் வேலை செய்கிறோம், செய்தோம். பிள்ளைகளூடாக பெற்றோரை அணுகி அணிதிரட்டி திருமலையில் நடத்தப்பட்ட சிறுவர் அரங்க விழா, அ.செ.குழு வெளியீடான 'இடம் கொடுத்தல்' நூல் போன்றன ஹர்சியின் இலக்கு நோக்கிய பயணத்திற்கு இன்று சாட்சியாகவுள்ளன. மக்களை அணிதிரட்டுவதற்கான பரிசோதனை முயற்சிகளின் கூட்டு மொத்த விளைவே இன்றைக்கு ஈழமெங்கும் 'பொங்குதமிழ் எழுச்சியாக' பொங்கியபடியே உள்ளது. பொங்கு தமிழில் மக்களை எழுச்சிப்படுத்தும் வேளைகளில் எல்லாம் ஹர்சினி அக்கினி தெறிக்க நின்று அற்புத நடனம் ஆடினாள்.

வவுனியாவில் 2003 இல் நடந்த பொங்கு தமிழுக்கு இடையூறாக நின்ற இராணுவத்தினருடன் ஏற்பட்ட வாக்குவாதத்தின் போது பிரசன்னமான இலங்கைப் போர் நிறுத்தத் கண்காணிப்புக் குழு (SLMM) முன்னால் நெருப்பெறிந்து நின்றாள் எங்கள் ஹர்சினி.

பெண்களாலும் முடியும் என்று சாதித்துக் காட்டுவது இவளுக்கு விருப்பான செயலாக இருந்தது. சமூக மாற்றத்துக்காக பெண்களை எழுச்சி கொள்ள வைப்பதுவே எமக்கு விமோசனம் தரும்' என்று இவள் நம்பிக்கையோடு கூறி வந்தாள். நாங்கள் கனவு கண்ட பெண்கள் மையத்தைப் பொறுப்பேற்று நடத்த இவள் திட்டங்கள் தீட்டிக் கொண்டு ஆர்வமுடன் காத்திருந்தாள். விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவினரால் முல்லை, மட்டுநகர், கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் நடத்தப்பட்ட பெண்கள் எழுச்சி சங்கமங்களில் எல்லாம் ஹர்சி முனைப்பும் தலைமைத்துவமும் உணர்வும் கொண்டு எழுச்சியின் வடிவமாகவே நின்றாள் ஹர்சி.

சாதாரண பெண்களை விட வேறுபட்டே இருந்தாள். காசு பற்றிய ஆசையோடும் கலியாணம் பற்றிய ஏக்கங்களோடும் எப்போதுமே இவள் அங்கலாய்த்ததில்லை. அரச உத்தியோகத்துக்கான தகுதியிருந்தும் இவள் அதை நாடியதில்லை. 'எனது வாழ்க்கை ஒரு புத்தகம் போல்வது. அதற்கு பல பக்கங்கள் உண்டு. அதில் ஒரு பக்கம் தான் கலியாணம். அதுவும் எனது வளர்ச்சிக்கு தடையாக இல்லாமல் இருந்தால் புத்தகம் முழுமையாக இருக்கக்கூடும். அது இல்லையென்றாகி விடாது' இதில் இவள் உறுதியாகவே இருந்தாள். எதிர்ப்பாலார் பற்றிய பதட்டம் இவளிடம் இருந்ததாக நாம் அறிந்ததேயில்லை.

ஆழ்மன எண்ணங்கள் கிளர்ந்தெழுந்து. அவை பகிரப்படும் இந்த 'நனவிலி அரங்கில்' புதிய புனித உறவுகள் பரிணமிப்பதும்; உறுதி, நம்பிக்கை, துணிவு பிறப்பதும், அதனூடு பல செயற்கரிய செயல்கள் புரிதலும் நிகழ்ந்தபடியே உள்ளது. அரங்கு செயற்கரிய புரியும் இந்தப் பரிமாணத்துக்கு இவளும் காலாக நின்றாள் என்ற வரலாறு பதியப்படவேண்டியது. அரங்கு சார்ந்த கல்வித் துறையில் ஒரு மாற்றம் நிகழ்கிறது. பலர் அதைப் படிக்கிறார்கள். மாற்றத்துக்கு காரணமாக ஒரு வித்தாக இவளும் இருந்தாள். அரங்கு இன்று சாதிக்கத் தொடங்கியிருக்கிறது. அந்தச் சாதனையின் வெளிப்பாடுதான் 'பொங்கு தமிழ் எழுச்சி'

அரங்க சாதனையின் சாட்சியாக இவள் இருந்தாள். இவள் உடலால் மட்டும் இன்று எம்மோடில்லை. இவள் சுயநிர்ணய விடுதலை பற்றியும் பெண்விடுதலை பற்றியும் கண்ட கனவு வீண் போகாது... இவளது இறுதி ஊர்வலமே அதன் சாட்சி. பொங்குதமிழ் ஊர்தி போல் ஊர்தியிலேயே இவள் பவனி வந்தாள். இவள் கனவு கண்டாளே! அந்தப் பெண்களே இவளது ஊர்தியைத் தாங்கிச் சென்றனர். அவர்களே திருமலை நகரமெங்கும் இவளைத் தாங்கிய சுவரொட்டியைப் பதித்தனர். ஊர்வலம் முன்னே பட்டாசு கொழுத்தினர். உறுதி எடுத்தனர். ஆண்களுக்கு நிகராக அனைத்திலும் ஈடுபட்டனர்.

ஹர்சி போல் வீர உணர்வு கொண்ட இன்னும் பலரை உருவாக்க வேண்டியதே எமது கடமை. அரங்கு இன்று வாழ்கிறது. அது நிற்கும்; நிமிர்ந்தெழும் நீடிக்கும்; அதில் இவளும் வாழ்கிறாள். வாழ்ந்து கொண்டே இருப்பாள்... இவளது அக்கினி மூச்சு ஒடுக்கப்பட்ட உலமெங்கும் வீசும். அந்த அனல் தெறித்து [illegible] ம்புகள் உருவாக ஒளிவீசும் வீசுக.

தொகுப்பு: யாழவன் பத்மநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தமிழ்க்காவலனும் செழுந்தமிழ்ப் பாவலனும்



02

கொடையும் வீரமும் பாரியின் உடன்பிறந்தவை. கொடையாலும் வீரத்தாலும் அவன் புகழ் எங்கும் பரவியது. பாரியின் புகழ் மூவேந்தர்க்குப் பொறாமையை உண்டாக்கியது. நேர்ப் போரில் வெல்லமுடியாத மூவேந்தர் சூழ்ச்சியினால் பாரியைக் கொன்றனர்.

பாரி வீர சொர்க்கம் அடைந்தான். பாரியின் உயிர் நண்பர் கபிலர். பாரி மகளிர்க்குத் திருமணம் செய்து வைப்பதற்காக சில காலம் வாழ்ந்தார். பாரி மகளிர்க்குத் திருமணம் செய்து வைத்த பின்னர் பாரியை நினைத்து வடக்கிருந்து உயிர் நீத்தார். தமிழுக்குப் பெருமை சேர்த்த கபிலர் சிறந்த நட்புக்கு உதாரணமானார்.

*உலக முதன்மொழி என்றும் இலக்கணத்தால் என்றும்*
*உயர்ந்ததென்றும் இலக்கியத்தாற் சிறந்தமொழி என்றும்*
*பலரும் உரைத்திடும் தமிழைக் கபிலரிடம் கற்கும்*
*பாவையர்கள் முன் செய்த தவம் சிறியதாமோ?*

*அரச குடிப்பிறந்தாலும் எழுத்தறிவிப்போனை இறைவன்*
*எனப் பணிகின்ற பாரி புதல்வியர் தாம் விரைவாகக்*
*கற்றிட்டார் காலத்தை வென்றே*
*மேதினியில் நிற்கின்ற பாடல்களும் படைத்தார்.!*

*அறம்போற்றும் பாரி அங்கே ஆட்சியினைச் செய்ய*
*அருட்கடவுளெனக் கபிலர் அருளுரைகள் கூற சிறப்புடனே*
*பறம்புமலை திகழ்ந்திடுதல் கண்டே*
*செகம் பொறுக்கும் மூவேந்தர் மனம் பொறுக்கார் ஆனார்!*

*எல்லையிலாப்பெரும் பரப்பை நாம் ஆளுகின்றோம்*
*எண்ணில்லாப் படை வீரர் நம்மிடத்தே உள்ளார்.*
*தொல்லை செய்யும் பகைவர்களும் நம்பேரைக்கேட்டால்*
*தொடை நடுங்கும் படியாய் பெரும்வலிமை உடையோம்!*

*உலகெங்கும் இல்லாத தேர்ப்படையும் உடையோம்*
*உயர்களிற்றுப் படையுடையோம் குதிரைவருபடையும்*
*நிலமெங்கும் நமக்குமுன்னே இருந்ததில்லை எனலாம்*
*நிலத்தலைகள் இருந்ததும் தான் என்ன பயன் ஆகும்!*

*புலவரெலாம் பாரியினைப் பனையாக நினைத்தே*
*புவித்தவத்தே பாடுகின்றார் நம்மை யெலாம் அவரோ*
*நிலமேவும் வடலி என நினைத்து விட்டார் இதனை*
*நீளவிடாதுடனே நாம் தடுத்திடுதல் வேண்டும்!*

*பனை விழுந்து விட்டதென்றால் பாடுகின்ற புலவர்*
*பாடுதற்கே வடலி அன்றி வேறு பொருள் உண்டோ?*
*தினைப்பொதும் இனிப்பொறுக்கோம் பாரிதலை நிலத்தில்*
*வீழட்டும் போர் தொடுப்போம் என்று துணிந்தார்கள்!*

*பாண்டவர்கள் ஐவரையும் பார் போற்றக்கண்ட*
*பாவி துரியோதனனின் மனத்தெழுந்த பொறாமை*
*நீண்டதொரு போருக்கு வழி வகுத்ததென்றே*
*நிலைத்ததுவாம் பாரத நூல் கூறிடுமே நாளும்!*

*பொறாமைகொண்ட மூவேந்தர் பொறாமையில்*
*ஒன்றானார்*
*போருக்கு வாவெனவே பாரியினை விளித்தார்!*
*மருதவனும் போர்புரிந்தான் தன்னுடையதான வாள்வலியும்*
*தோள்வலியும் காட்டி நின்றான் களத்தே!*

*வித்தவர்கள் மூவேந்தர் படை அதிகம் என்றே*
*மறம் விளங்கும் தோளாளன் மனம் கலங்கவில்லை.*
*சிந்தை மிக்கோன் ஆதலினால் சிறுபடையைக் கொண்டே*
*திறம் படைத்த பெரும் படையை வெல்வதற்குச் சென்றார்!*

(வளரும்)

புலவர் ம. பார்வதிநாதசிவம்

# கடுகுக்கதைகள்

ந.வினோதரன்

## நாணயம்

ஆசனப்பலகையில் வண்டில்காரனுக்குப் பதிலாக வண்டில்காரி அமர்ந்திருந்தாள். நாணயக் கயிற்றை எந்தப்பக்கம் திருப்புவது என்ற தெளிவுகூட அவளிடமிருக்கவில்லை. உள்ளே நாலைந்து வெள்ளைத்தோல்கள் குதூகலித்துக் கொண்டிருந்தன. வீதி போட்டதற்குப் பின்னர் தாரையே கண்டிராத வீதியில் வண்டில் தன்பாட்டிற்கு ஆடி அசைந்து கடகடத்தது.

மாடுகளின் முதுகில் துவரங்கம்பு பதம்பார்த்தது. போதாக்குறைக்கு வாலையும் முறுக்கினாள். இப்போது வீதிமுழுக்கவே வண்டிலுக்குச் சொந்தம் என்ற நிலையாகி விட்டது.

எதிரே சிறுவனொருவன் சைக்கிளில் வந்து ஓரமாகத் தரிக்க முற்படுகிறான். அதற்கிடையில் மாடுகள் திமிறிப்பாய்கின்றன. சைக்கிள் , வண்டிற் சில்லுக்குள் அகப்பட்டு நொருங்கியது. சிறுவன் தெய்வாதீனமாகத் தப்பினான். ஆனாலும், உடலெங்கும் கம்பிக்கீறல்கள்.

சிறுவன் துடிதுடித்து அழத்தொடங்கினான்.

''ஐயோ என்ரை சைக்கிளைப் பாருங்கோ. அப்பா என்னைச் சாக்கொல்லப் போறார். என்னிலை பிழையில்லை. நான் ஒதுங்கித்தானே வந்தனான்''

''ஓமடா நீ வீட்டை போ. நான் வந்து கொப்பாவைச் சந்திச்சுச் சொல்லுறன்''

வண்டில்காரி சமாளித்தாள்.

''தம்பி முதல்லை இரத்தத்தைத் துடைக்க விடடா...''

ஒருவர் காயங்களுக்குக் கட்டுப்போட எத்தனித்தார்.

''இஞ்சை- உங்களுக்கு அப்பாவைப் பற்றித் தெரியுமெல்லே. இவையளிலைதான் பிழையெண்டு வந்து சொல்லச் சொல்லுங்கோ. என்ரை காயத்தைப் பற்றி எனக்குப் பிரச்சினையில்லை''

அவன் வீரிட்டான்.

அதற்கிடையில் இரண்டு வெள்ளைத் தோல்கள் இறங்கி வந்து சைக்கிளை நிமிர்த்தி அவனுக்கும் முதலுதவி செய்ய முற்பட்டன.

''சேர் நீங்கள் வந்து ஏறுங்கோ. நாங்கள் போய் வரவேணுமெல்லே''

வெள்ளைத் தோல்களைக் குஷிப்படுத்துவதையே நோக்காகக் கொண்ட அவள் அவசரப்படுத்தினாள். நாணயக் கயிற்றை இளக்க மாடுகள் தம்பாட்டிற்கு நகரத்தொடங்கின.

தன்னிலை பிழையில்லையாம். பெடியனுக்குச் சைக்கிளோடத் தெரியாதெண்டு அவள், எதிர்ப்பட்டவர்களையெல்லாம் வழிமறுத்துச் சொல்லிக் கொண்டு போவதாக இன்னொருவர் வந்து சொன்னார்.

சிறுவன் முன்னரை விட இன்னும் தேம்பித்தேம்பி அழத் தொடங்கினான். அந்த அழுகை அவளுக்கெங்கே ஏறப்போகிறது?

## ஆதர்சம்

கூட்டம் தொடங்கியது.

எல்லாமுகங்களும் ஒன்றையொன்று வினாக்குறியோடு ஏறிட்டுப்பார்த்தன.

இராணுவ அதிகாரி அரைகுறைத் தமிழில் பேசத் தொடங்கினான்.

இனிமேல் இத்தகைய ஆர்ப்பாட்டம் பேரணிகள் எதுவும் நடத்தக்கூடாதென்றும் அப்படி நடத்தப்படுமாயின் பாரிய விளைவுகளைச் சந்திக்க வேண்டி வருமென்றும் எச்சரித்தான். தாங்கள் நினைத்தால் மட்டுமே நாங்கள் ஊருக்குப்போக முடியும்.

கந்தையாண்ணை ''பாலம்பள்ள வயல் விதைக்கவேணும் எங்களை ஊருக்குப் போகவிடு'' என்றார் ஆவேசமாக...

எல்லாரும் கைகளை உயர்த்தியபடியே எழுந்தார்கள்.

''வெட்டுக்கட்டை புக்கை தென்னம்பிள்ளை வைக்கப் போறன்''

''வீரபத்திரர் கோயிலிலை காத்தான் கூத்தாடவேணும்''

''என்ரை கறுப்பிக்கும் பூச்சிக்கும் கயர் வெட்டி வைச்சு பால் கறக்கவேணும்''

''கஞ்சியைக் குடிச்சுக் கொண்டாவது மரநிழலில் இருந்திடுவம்''

''வைரவருக்கு மடைவைச்சுப் பொங்கி வழி வெட்டவேணும்''

''எங்கடை சனத்தோடை கூடி இருக்கப்போறம்''

சிலகுரல்கள் வெளிப்படையாகவும் இன்னும் சில குரல்கள் தமது ஆழ் மனதுள்ளும் ஆக்ரோஷமாக ஒலித்தன.

இதனிடையே இப்படியும் ஒரு பொக்கை வாய்க் குரல் கேட்டது.

''சொந்தச் சுடலையிலைதான் என்ரை கட்டை எரியவேணும்...!''

இராணுவ அதிகாரி கலவரத்துடன் ஒதுங்கினான்.

# சீறப்புமீகு சேவையாற்றும்...

[IIஆம் ப்க்கத் தொடர்ச்சி]

### கவனிக்கப்பட வேண்டியன

அண்மைக் காலங்களில் மருத்துவ உதவிகள் பெறுவதற்காக, குறிப்பாக இதய சத்திர சிகிச்சை பல குடும்பங்கள் பல்வேறு மார்க்கங்களைக் கையாள்வதை எமது அனுபவங்களினூடாகவும் பத்திரிகை/ஊடகங்கள் மூலமும் அறியக் கூடியதாக உள்ளது. ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு, ஜனாதிபதி நிதி மூலமும் பிரதமர் தனது அலுவலகம் மூலமாகவும் நீண்ட காலங்களுக்கு பின்பேனும் நிதி வழங்கினாலும் அநேகரது விடயங்களில் இது காலம் தாழ்த்தப்படாமல் செய்ய வேண்டியதாகவே காணப்படுகின்றது. தவிர, மருத்துவ தேவை களுக்காக தலைநகர் சென்று வருதல் தங்குமிட வசதி குறித்து கவனிப்பாரில்லை. இவ்விடயத்தில் தனிப்பட்டவர்கள் தனித்தனிப் பாதையில் செல் லாமல் ஒரே மார்க்கத்தில் அலைச்சலின்றி உயிர் வாழ் தல் உரிமையை அனுபவிக்க கட்டமைப்பு உருவாக் கம் பெறல் வேண்டும். அக்கட்டமைப்பு குறிப்பிட்ட சிறுவர் மற்றும் குடும்பத்திற்கு ஆலோசனைகளை வழிகாட்டுதல்களை வழங்குவதாகவோ வலைப்பின் னல் அமைப்பு (net working system) முறைமை மூலம் ஒரே கூரையின் கீழ் சேவைகளை வழங்க வந்தால் சிறப்பானதாக அமைந்து கீணப்படும். இதற்கு முன் னோடியாக இத்தகைய தேவைகளையுடைய சிறா ருக்கு - அவர்களை விளம்பரப்படுத்தாமல், அவர்களை வெளிக்கொணராமல், சிறார் புகைப்படங்களை அச் சிடாமல் உதவும் நிறுவனங்கள் அல்லது அமைப்பு கள் அல்லது தனிநபர்கள் இருந்தால் தயவு செய்து இப்பிரசுராலயத்திற்கு அறிவியுங்கள். தேவை யுடையோர் பயன் பெறட்டும்.

தனிப்பட்ட ரீதியில் தேவைகளை இனங்கண்டு, உதவிசெய்ய அநேக நிறுவனங்களிடம் ஒதுக்கீடு கள் இருப்பதில்லை. இருப்பினும் ''சிறுவர் அபிவிருத் திக்கான நிலையம் (center for the development of the child) ஸ்டேசன் றோட், கோண்டாவில்'' நீண்ட கால நோக்கில் ஒரு சிலரைக் கவனிப்பதைத் தவிர பிற நிறுவனங்கள் பெரிதாக எதையும் செய்வன வாக இல்லை. ஆனால், தேவைகள் இருப்பது என் பதுவும் மறுப்பதற்கல்ல.

எனவே, இத்தகைய உடனடித் தேவைகள் தீர்க் கப்படுவது என்பது சிறுவர் மேலதிகமான தீங்கு, துஷ்பிரயோகம், புறக்கணிப்பு போன்றவற்றிலிருந்து தடுக்கும் ஒரு செயலாகவே கருதப்படும்.

அங்கவீனமடைந்த மற்றும் மனவளர்ச்சி குன் றிய சிறார்களது விடயத்தில் உரிய கவனிப்புத் திட்டங் கள் உதவிகள் (supports and care plans) போதியள வில் காணப்படாமை.

பல்வேறு காரணங்களால் பாடசாலைக் கல்வி யைக் கைவிட்டுவிட்டு ''இடைவிலகல்'' அடைந்தி ருக்கும் சிறுவர்களுக்கான வாண்மைவிருத்தி (carrer development) நிகழ்வுகளும் இணைந்த சேவைகளும்.

சட்ட உதவிகள் கோரப்பட்ட நிலையில் யாழ்.மாவட்டத்தே வசதிகள் இல்லாதிருந்த காரணத்தால் பிற மாவட்ட தடுப்புக் காவல் நிலையங்களுக்குச் சீர்திருத்தப் பாடசாலை சிறார் மீண்டும் அதே வசதி வாய்ப்புகள் கிடைக்கப் பெறின் மீளத் திரும்புதலும் குடும்பச் சூழல் கிடைப்பதை உறுதிப்படுத்துதலும்.

சமுர்த்தி, வீடமைப்புக் கடன் என அனைத்து செயற்பாடுகளிலும் சிறுவர் நலன் என்பதை மையமாகக் கொள்ளல்.

என்பதாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயங் கள் பட்டியலிட்டுக் கொண்டேயிருக்கலாம். ஆனால், உரிய தரப்புகள் உரிய நேரத்தில் வேண்டிய நட வடிக்கைகளை எடுக்க வேண்டியது காலத்தின்கட் டாயம் மட்டுமன்றி, சம காலத்து உடனடித் தேவையும் கூட. கிராமிய, பிரதேச, மாவட்ட மட்டங்களில் மேல திகமாகப் பல்வேறு கட்டமைப் புகளை உருவாக்கு வதில் நேரத்தைச் செலவிடாது ஏலவேயுள்ள கட் டமைப்புகள் ஸ்திரப்படுத்தப்படாமல் அவற்றின் அவ சியம், நிலை அறியப்படாமல் அல்லது விளங்கிக் கொள்ள முயற்சிக்காமல் அமைப்புகளின் நிர்வாகக் கட்டமைப்பை மாற்ற, கலைக்க, தனது ஆட்சியின் கீழ் கொண்டுவர எனப் பல்வேறு திசைகளில் வேண் டாத கவனத்தை (un wanted attention) தேவைப் பாடுகள் கொண்ட திசையில் எமது கவனமும் அரச தரப்பு அதிகாரி [illegible] துவரவு மேல்தர அதிகாரிகளின் செயற்பாடுகளும் அமைந்து காணப்படுவதென்பது அவசியம். ஆக்க பூர்வமான கருத்துக்களுக்கு செயல்திறன் மிக்க செயற் பாடுகள் மட்டும் பதிலாக அமையும் என்றே நம்புகின் றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தம்பி': விடுதலைப் போராட்டத்தின் வெளிப்பாடு

## சீமானின் ஒரு புரட்சிகரப் படைப்பு

''பெரியாருக்கும், பிரபாகரனுக்கும் 'தம்பி'யின் வெற்றியை அர்ப்பணிக்கிறேன்'' என்று 'ஆனந்த விகடன்' என்ற தமிழக சஞ்சிகையில் 'தம்பி' பட இயக்குநர் சீமான் செவ்வியளித்திருந்தார். நியாய வழியில் உரிமைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் நமது தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் 'நீதி மகுடத்தை' இயக்குநர் சீமான் உயர்த்திப் பேசியுள்ளார். 'தம்பி' என்னும் வேலு தொண்டமான் நமது தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் என்று பெருமைப்படுகிறார் இயக்குநர் சீமான். விடுதலை உணர்வு பற்றிய கருவையும், தன் நேசிப்பையும், ஈடுபாட்டையும் 'தம்பி'யில் எவ்வாறு படைத்திருக்கிறார். இது பற்றி எண்ண அலசல்களையும் மன நெருடல்களையும் இந்தக் கட்டுரை உங்களோடு பகிர்ந்துகொள்கிறது.

சேகுவேரா போன்ற உலகப்புரட்சித் தலைவர்களுடன் தமிழீழத் தேசியத் தலைவரையும் இணைத்து மதிக்கிறார் சீமான். தன்னலமற்ற ஒரு நல்ல மக்கள் தலைவன் மக்களுக்கு எந்தளவுக்கு அவசியம் என்பதை காட்சியில் காட்டுகிறார். சூழ்நிலைத் துயரங்களின் நெருக்கங்களாய் தன்னை மாற்றிக்கொள்கிறான் தம்பி. ''நான் இருக்கிறேன் எல்லோருக்குமாக'' என்று தர்மத்தை தலை நிமிர்த்தும் தலைவனாக 'தம்பி'யைப் படைத்திருக்கிறார் சீமான்.

'நான் பிரபாகரன் மீது அதிகப் பற்றுள்ளவன். அதனால்தான் அப்படி வைத்தேன். இங்கு நடக்கும் வன்முறையை மட்டுமல்ல, உலகளவில் வன்முறை எங்கு நடந்தாலும், தட்டிக்கேட்கிற படம் இது. இப்போது பிரபாகரன் 'என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள் செய்யத் தயாராக இருக்கிறேன். எங்களுக்குத் தேவை அமைதி தமிழீழம்' என்று அறிவித்திருக்கிறார் என்பதாக மனம் திறந்து கூறுகிறார் சீமான்.

''இப்ப நான் என்ன பண்ண? சொல்லு என்று கர்ஜிப்பார் அப்படி ஒரு நிலையில் தான் பிரபாகரன் இருக்கிறார். அவருடைய மக்கள் போராட்டத்துக்காக அவரை பெரிதும் மதிக்கிறேன். 'தம்பி' படத்தின் வெற்றியை பெரியாருக்கும், பிரபாகரனுக்கும் அர்ப்பணிக்கிறேன்'' என்று நமது தேசியத் தலைவர் மீதான விருப்பையும், மதிப்பையும் வெளிப்படுத்தி மகிழ்கிறார் இயக்குநர் சீமான்.

தவறு செய்தவன் திருந்தவேண்டும். தப்புச் செய்தவன் வருந்த வேண்டும் என்ற கருத்து 'தம்பி'யில் நிறுவப்படுகிறது. வன்முறைக்கும் பழிவாங்கலுக்கும் அதே வன்முறைகளும், பழிவாங்கல்களும் பதில் என்பது 'தம்பி'யில் மறுத்து உணர்த்தப்படுகிறது. மன்னித்து விடப்படுபவர்கள் முதுகில் குத்தும் துரோகத்தனங்களுக்கான நியாயத் தீர்ப்புகள் எப்படி அமையும் என்பதையும் தம்பியில் முறையாக சொல்லப்படுகிறது.

படத்தில் மாதவன் யதார்த்தமாக நடிப்பை வழங்கியிருக்கிறார். அவர் 'தம்பி'யின் பேரன்பையும் பெருங் கோபத்தையும் வெளிப்படுத்துவது மனதை மலைக்க வைக்கிறது.

'இது படம் அழுதுவிடக்கூடாது' என்று மனதை இறுக்கி வைத்திருந்தும் கூட கட்டுப்பாடு இழந்து நான் அழுதது மறக்கமுடியாத என் அனுபவம். அந்தளவில் மனதை உருக்கும் வகையில் 'தம்பி'யை சீமான் அமைத்திருக்கிறார். இயல்பு வாழ்வில் வாழும் வேலு தொண்டான் 'தம்பி'யாக மாற்றப்படும் விதம், நடக்கும் நிகழ்வுகள், சூழ்நிலைகள் பார்வையாளனை உருக்கிவிடுகிறது. அவனது மாற்றத்துக்கான நியாயப்பாடுகள் சரியான விதத்தில் சொல்லப்படுகிறது.

'தம்பி' பேசும் சிறப்பு வசனங்கள் உரிமைப்போராட்ட உணர்வலைகளாக இருக்கின்றன. நியாயப் போராட்டத்துக்கான நியாயம் கோரும் தன்மையின் குரலாகவே 'தம்பி'யை நாங்கள் பார்க்கிறோம்.

படத்தில் மணிவண்ணன் தோன்றும் காட்சிகள் கதையைக் கூர்ந்து கவனிப்பை ஊட்டுகிறது. 'தம்பி'யை பின் தொடர்ந்து உற்றுப் பார்க்கும் மணிவண்ணன், 'தம்பி' யில் பொதிந்துள்ள 'விஷேசத்தை' சொல்லும் விதமாக அமைக்கப்பட்டுள்ளார். ஆக, தம்பி பற்றிய - புரட்சித்தலைவன் பற்றிய - வீடியோவாக மணிவண்ணன் கதையின் தரத்தை உயர்த்துகிறார்.

இந்தப் படத்துக்கான பாடல்களை வைரமுத்து, முத்துக்குமார், பாரதி ஆகியோர் எழுதியுள்ளனர். பாடல்களுக்கு இசையமைத்திருக்கிறார் வித்தியாசாகர். பாடலிசை வித்தியாசாகரின் வழமையான இசையை ஞாப மூட்டுகிறது. குடும்பக் காட்சிக்காக வழங்கியிருந்த சொர்ணலதா பாடிய பாடல் மனதை தொடுகிறது. இயல்பு குன்றாத வகையில் விக்கிரம் தர்மாவின் சண்டைக் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒளிப்பதிவு, படத்தொகுப்பு என்பனவும் சிறப்பாக உள்ளன. 'தாக்கமும் ஆக்கமும்' என்று சீமான் தன்னை அடையாளப்படுத்து கிறார். படத்தை இயக்கிய சீமான் உண்மையிலே மனந்திறந்து பாராட்டப்பட வேண்டியவர்.

தமிழீழத்துக்கும் தமிழகத்துக்கும் இடையில் நெருங்கிவரும் நெடுநாள் உறவின் இன்னோர் அம்சம் 'தம்பி' - சீமான் இயக்குநர் மணிவண்ணன். ஓவியர் புகழேந்தி, இயக்குநர் 'உதிரிப் பூக்கள்' மகேந்திரன், இயக்குநநர் பாரதிராஜா, இயக்குநர் ஜான், கவிஞர் அறிவுமதி கவிஞர் வைரமுத்து, பாடகர் ரி.எல்.மகாராஜன் போன்று தமிழீழம் நோக்கிவரும் தமிழக தமிழீழப் பற்றாளர்கள் வரிசையில் 'தம்பி' - சீமானும் தன்னை இணைத்துக் கொள்கிறார்.

தமிழீழம் மீதும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மீதும், இவ்வளவு நேசிப்பும் அர்ப்பணிப்பும் வைக்கும் தமிழக உறவுகளின் உணர்வலைகள் எம்மீது இன்னும் எவ்வளவு நம்பிக்கையையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்துகிறது. இதற்காக தலைவணங்கிக் கொள்கிறது தமிழீழம்.

முடிவாக.... 'தம்பி' என்ற கலைப் படைப்பிற்கு ஒரு ராஜமரியாதை இருக்கிறது. மதிப்புணர்வை ஏற்படுத்தும் அற்புத கலைப்படைப்பாகவே தம்பியை நாம் பார்க்கிறோம். 'தம்பி' திரைப்படக் குழுவை மனந்திறந்து பாராட்டியாக வேண்டும்.

- கு.பா.தீபச்செல்வன்

# ஹிட்லரின் வழியைப் பின்பற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டு அரசைப் பலப்படுத்தும் நோக்குடன் அரசில் இணைந்திருக்கும் ஹிட்லர், தமது பொறியில் சிக்கிக் கொண்டுள்ளார் என்றே அவ்விரு தரப்புகளும் ஹிட்லர் குறித்துத் தப்புக் கணக்குப் போட்டிருந்தன. கூட்டு அரசில் இணைந்து கொண்டபோதிலும் ஹிட்லரின் கட்சிக்கு வெளியுறவுத்துறை மற்றும் பாதுகாப்புத்துறை ஆகிய பொறுப்பு மிக்க அமைச்சுப் பதவிகள் எதனையும் தாம் வழங்காதமையால் ஹிட்லர் தமது எதிர்பார்ப்பு நிறைவேறாத காரணத்தால் தாம் விரித்த வலையில் சிக்கிக்கொண்டுள்ளார் என்றே அவ்விரு தரப்பினரும் தப்புக்கணக்குப் போடநேர்ந்தது.

''ஹிட்லர் சர்க்கஸ் குழுவொன்றின் கோமாளி போன்றாகியுள்ளார். கூட்டு அரசின் பங்காளி என்ற பெயர் அவரது கட்சிக்குண்டு, பத்திரிகைகளில் அவரது பெயர் பிரபலமாக அமைகிறது. ஆயினும், அமைச்சரவையில் அவரது கருத்துகள் கணக்கில் கொள்ளப்படுவதில்லை. ஆயினும், முழு அமைச்சரவைக்குமே கிட்டாத அளவுக்குப் பொதுமக்களது ஆதரவு ஹிட்லருக்கு இருப்பதால் அரசால் நிர்வாகத்தைச் சுமுகமாக மேற்கொள்ள முடிகிறது''.

இவ்விதம் அந்த வேளையில் ஹிட்லரின் நிலை குறித்த விமர்சனம் அமைந்திருந்தது.

''ஹிட்லர் தமது அழிவைத் தாமே தேடிக்கொண்டுள்ளார்''

இவ்விதம் எண்ணி அந்தவேளையில் ஜெர்மனிய அரசும், ஜனாதிபதியும் இறுமாப்புடன் செயற்பட்டு வந்தனர்.

அத்தகைய அவர்களது இறுமாப்பு நீண்ட நாள்கள் நிலைத்து நிற்கவில்லை. வயதான அந்த ஜேர்மனிய ஜனாதிபதி மரணமடைந்த வேளையில் ஹிட்லர் அரசையும் நாட்டின் நிர்வாகத்தையும் தமது கைகளில் எடுத்துக்கொண்டார்.

ஜே.வி.பியினரின் வரலாறும் இதனையொத்ததே! ஆயுதப்புரட்சி தோல்வியடைந்தமையைத் தொடர்ந்து, நாட்டின் முக்கிய இரு அரசியல் கட்சிகளுக்கும் எதிராக மூன்றாவது பலம் வாய்ந்ததொரு அணியாகத் தம்மை இனங்காட்டிக்கொண்டனர். போர்நிறுத்த உடன்பாட்டினூடாக உருவான சர்வதேச அழுத்தங்களுக்கு எதிராகச் செயற்படுகின்றனர் எனத் தம்மை வெளிப்படுத்திக் கொண்டனர்.

தேசியத்துவம், நாட்டின் இறைமை மற்றும் சிங்கள மக்களது கலாசாரம் என்பன பற்றியெல்லாம் பேசித் தாம் நாட்டின் அரசியலில் மூன்றாவது பலமிக்க அணி என்பதை வெளிப்படுத்த முயன்றனர். அதன் பின்னர்ஒன்றையடுத்து மற்றொன்று என்ற வகையில் பொதுத்தேர்தல்களுக்கு முகம்கொடுத்து, ஸ்திரமற்ற, பெரும்பான்மைப் பலமற்ற பொ.ஐ முன்னணி அரசில் பங்குதாரர்களாக ஒட்டிக் கொள்வதில் ஜே.வி.பியினர் வெற்றிகண்டனர். அதற்கமைய கூட்டு ஒப்பந்தமொன்றையும் ஏற்படுத்திக்கொண்டனர்.

அந்தச் சந்தர்ப்பத்திலேயே பொ.ஐ. முன்னணியின் தலைவியான ஜனாதிபதி சந்திரிகா தமது பதவியிலிருந்து ஓய்வுபெற வேண்டிய நிலை உருவாகியிருந்தது. தெளிவாகக் குறிப்பிடுவதானால் அந்த வேளையில் இந்த நாட்டின் ஜனநாயக அரசியல் வாழ்வு அஸ்தமித்துப்போய்விடுமோ என்ற தொரு குழப்ப நிலையில் நாடு அகப்பட்டுத் தத்தளித்தது. ஜனாதிபதி சந்திரிகாவின் பதவிவிலகலையடுத்து நாட்டின் ஜனாதிபதிப் பதவிக்கான போட்டி உச்சக் கட்டத்தை அடைந்திருந்தது.

அத்தகைய பயங்கரமான சூழ் நிலையில் நாட்டின் அரச நிர்வாகத்தைக் கைப்பற்றி ஜனாதிபதிப் பதவியையும் தாமே அடைவதன் மூலம் நாட்டை நிர்வகிக்கும் முயற்சியை - திட்டத்தை - செயற்படுத்த ஜே.வி.பியினர் முயன்றனர் என்பதே யதார்த்தமாகும்.

ஆனால், ஜே.வி.பியினரின் அத்தகைய திட்டம் தவிடு பொடியாகி விட்டது. ஜே.வி.பியினரின் தப்புக்கணக்கு தவிடுபொடியானமை அவர்களுக்குப் பலத்த ஏமாற்றத்தை அளிப்பதொன்றாக அமைந்து விட்டது.

தற்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்வரும் 12 ஆண்டுகளுக்கு நாட்டை நிர்வகிக்கும் பொறுப்பை வழங்கி, சுதந்திரக் கட்சிக்கு நாடாளுமன்றத்தை நிர்வகிக்கும் பொறுப்பை வழங்கி, ஐ.தே. கட்சிக்கு நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைமைத்துவத்தை வழங்கி, தாம் வெறுமனே ஆகாயத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர, ஜே.வி.பியினரால் வேறு எதனையும் செய்யஇயலாது என்பதே யதார்த்தமாகும்.

# கன்னட சூப்பர் ஸ்டார் மறைவு



ராஜ்குமார்
(1929 - 2006)







கன்னட திரைப்பட உலகின் சுப்பர் ஸ்டார் என அழைக்கப்பட்ட நடிகர் ராஜ்குமார் மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது 77. ராஜ்குமார் மறைவு கர்நாடகா முழுவதும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தென் இந்திய திரைப்பட வரலாற்றில் முக்கிய பங்காற்றியவர் நடிகர் ராஜ்குமார். தமிழ் திரைப்படங்களில் எம்.ஜி.ஆர்., சிவாஜி கணேசன், தெலுங்கில் என்.டி.ஆர்., ஆதிக்கம் செலுத்திய போது கன்னட திரைப்படங்களில் முழுமையான ஆதிக்கம் செலுத்தியவர் ராஜ்குமார்.

புராண, இதிகாச வேடங்களில் அவர் தோன்றி லட்சக்கணக்கான ரசிகர்களை தன்பால் ஈர்த்தவர். தொடர்ந்து 50 ஆண்டுகாலம் கன்னட திரைப்பட உலகில் முடிசூடா மன்னனாக திகழ்ந்தவர். கடந்த 1929ஆம் ஆண்டு ஏப்ரல் 24ஆம் திகதி தமிழகத்தில் உள்ள கஜனூர் என்ற இடத்தில் பிறந்த ராஜ்குமாரி ன் இயற்பெயர் முத்துராஜூ சிங்கானல்லுரு புட்டஸ்வாமையா. எட்டாவது வயதிலேயே ராஜ்குமார் நடிப்பு துறைக்கு வந்து விட்டாலும், அவர் கதாநாயகனாக நடித்த முதல் கன்னட படம் 'பெதாரு கன்னப்பா' 1954ஆம் ஆண்டு வெளியானது. அப்போது அவருக்கு வயது25. மொத்தம் 220 திரைப்படங்களில் நடித்துள்ள ராஜ்குமார் சொந்த குரலில் பாடும் திறமை படைத்தவர்.

கன்னட திரைப்பட துறைக்கு அவர் ஆற்றிய பணியைப் பாராட்டி 1995ஆம் ஆண்டு உயரிய விருதான 'தாதாசாகேப் பால்கே விருது' வழங்கி மத்திய அரசு கௌரப்படுத்தியது. இதுதவிர சிறந்த நடிகர் என்ற முறையில் ஒன்பது மாநில விருதுகளையும், 10 பிலிம்பேர் விருதுகளையும் பெற்றுள்ளார்.

கர்நாடகாவில் உள்ள லட்சக்கணக்கான ராஜ்குமார் ரசிகர்கள் மிகவும் ஆர்வமுடையவர்கள். அவர்கள் ராஜ்குமாரை நடமாடும் கடவுளாகவே நினைத்தனர். 'அன்னவரு' என்று அன்புடன் அழைத்தும் வந்துள்ளனர்.

### வீரப்பன் கடத்தல்

ஆறு ஆண்டுகளுக்கு முன் நடிகர் ராஜ்குமாரை சந்தன கடத்தல் வீரப்பன் கடத்திச் சென்று பிணைக் கைதியாக வைத்து இருந்தான். இப்பிரச்னை நாடு முழுவதும் எதிரொலித்தது. பல்வேறு நிபந்தனை விதித்த வீரப்பன் இறுதியாக 108 நாள்களுக்கு பிறகு ராஜ்குமாரை விடுவித்தான். இதை மறுபிறப்பாகவே ராஜ்குமார் கருதினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org